# திட்டம்
## மாத இதழ்

மலர் 50
இதழ் 5

ஜனவரி 2018
பௌஷா - மகா 1939



முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**சஞ்சய் கோஷ்**
இதழ் ஆக்கத்தில் உறுதுணை
**த. சித்தார்த்தன்**


## உள்ளடக்கம்


- தலையங்கம் - சீரிய வங்கிமுறை
- மின்னணுமயமாக்கல் - முறைகேடுகளைத் தடுப்பதற்கான சட்டங்கள்
  - ஆர்.சுப்பிரமணியகுமார்
- வங்கித்துறையில் சீர்திருத்தங்கள் : ஒரு வரலாற்றுப்பாதை
  - அத்திஷா குமார்
- வங்கித்துறையின் பயணம் இதுவரை, இனி வரும் பாதை
  - விவேக்குமார், சங்கெட் டாண்டன், சுபதாராவ்
- வாராக்கடன்கள்: சவால்களும் முன் நோக்கிய பாதையும்
  - தீபக் நரங்
- வங்கி மறுமூலதனம் - அசுதோஷ் குமார்
- திவால் பிரச்சினைக்குத் தீர்வு - இந்திவ்ஜால்தாஸ்மனா
- இந்தியாவில் பொதுத்துறை வங்கிகளை சீரமைப்பதற்காக இந்திரதனுஷ் திட்டம் - D.S. மாலிக்
- நிதிசார் உள்ளடக்கலை சாத்தியமாக்குவதில் வங்கிகளின் பங்கு - சரண்சிங், சிவகுமாரரெட்டி
- இந்தியாவில் கிராம வங்கிச்சேவை சந்திக்கும் பிரச்சினைகளும், சவால்களும்
  - மஞ்சுளா வாத்வா
- பாரத்மாலா பரியோஜனா: நாட்டின் நெடுஞ்சாலை மேம்பாட்டில் ஒரு புதிய பரிமாணம்
  - யுத்வீர் சிங்மாலிக்
- இந்திய வங்கித்துறையில் பெருந்தரவுகள் பகுப்பாய்வு
  - சதுர்பூஜாபாரிக், ஸ்ரீகாந்த் சர்மா
- இந்தியாவின் நல்வளர்ச்சியினால் கடன் தரம் உயர்வு
  - பிரபாகர் சாஹூ, பவேஷ்கர்
- உங்களுக்குத் தெரியுமா? இந்தியாவில் சிறப்பு வகை வங்கிகள்



கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.



**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப்பிரிவு
A Wing இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை -600 090
தொலைபேசி : 044-2491 7673

Log on to **http://publicationsdivision.nic.in/**
*in collaboration with* **bharatkosh.gov.in**

**தலையங்கம்**

# சீரிய வங்கிமுறை




சேமிப்பு பற்றிய எண்ணம் உலகம் முழுவதும் வெவ்வேறு பண்பாடுகளில் எப்போதும் இருந்துவந்திருக்கிறது. நாணயங்கள், தங்கக்காசுகள் போன்றவற்றைப் பானைகளில் வைத்து மண்ணில் புதைக்கும் பழக்கம் பழங்காலத்தில் உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது. இராஜ்யங்களில் மன்னர்கள் வசூலித்த வரிப்பணம் அரசர்க்குரிய கருவூலங்களில் சேகரித்துவைக்கப்பட்டன. தங்களைச் சார்ந்திருக்கும் அரசர்கள், குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தீர்வைகளை சேர்த்துவைக்கும் களஞ்சியமாகவும் அரசர்களின் கருவூலங்கள் இருந்தன.

நவீன வங்கிகளின் வருகைக்குப் பிறகு, பணநிர்வாகம் வீட்டில் இருந்து வங்கிக்கு இடம்பெயர்ந்தது. வங்கிகளில் பணத்தையும், நகைகளையும் பத்திரமாகப் பாதுகாத்து வைக்கமுடியும் என்பதை மக்கள் புரிந்துகொண்டனர். அதனோடு கூட வைப்புத்தொகைகளுக்கு வங்கிகள் வழங்கிய வட்டி கூடுதல் வருமானமாகப் பார்க்கப்பட்டது. மறுபக்கம் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கும் வைப்புத்தொகைகளை பல்வேறு பங்குகளிலும், பத்திரங்களிலும் வங்கிகள் முதலீடு செய்தன. இப்படித்தான் முதலீட்டு வங்கிகள், பெருநிறுவன வங்கிகள் தோன்றின. வங்கி வழிமுறை உருவானது. அரசாங்கப்பணமும் கூட அரசின் கஜானாவில் இருந்து மத்திய வங்கியில் செலுத்தப்பட்டது. இந்த மத்திய வங்கி பணத்தை நெறிமுறைப்படுத்தும் கொள்கைகளை பின்னர் வகுத்தது. இன்று, ஒழுங்குபடுத்தும் மத்தியவங்கி இல்லாத ஒரு பொருளாதரத்தைக் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. இந்தியாவைப் பொறுத்தவரையில் மத்தியவங்கி அரசின் பணத்தை வைத்திருக்கும் அமைப்பாக மட்டும் இல்லை. நிதிக்கொள்கை ஒழுங்காற்றுமுறைகள், வங்கியாளரிடமிருந்து வங்கிக்கு, நாணயங்களை முறைப்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளைச் செய்யும் அமைப்பாக அவை உருப்பெற்றுள்ளன.

இந்தியாவில் வங்கி முறை சிறு சிறு தனியார் வணிக வங்கிகளுடன் ஆரம்பித்தது. இவற்றில் சில தோல்வி காணத்தொடங்கின. சில வங்கிகள் வாடிக்கையாளர்களின் பணத்தைக் கபளீகரம் செய்தன. கடின உழைப்பின் மூலம் கிடைத்த பணத்தை வாடிக்கையாளர் இழக்கநேரிட்டது. அதனால், அரசாங்கம் வங்கிகளை தேசியமயமாக்க முடிவெடுத்தது. பெரிய அளவிலான இந்த சீர்திருத்தம் வங்கிகள் நஷ்டமடையும் போதும், பணத்தை தவறாகக் கையாளும்போதும் வாடிக்கையாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாத்தது. காலப்போக்கில் சிறிது சிறிதாக மற்ற

ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டன. வங்கித்துறை சீர்திருத்தங்கள் பற்றிய நரசிம்மன் குழுவின் பரிந்துரைகள் இந்த திசையில் மற்றுமொரு மிகப்பெரிய முன்னெடுப்பாகும். அதன் பிறகு, வங்கித்துறையின் திறனை அதிகரிக்கவும், வங்கிகளை நிர்வகிக்கவும் படிப்படியாக பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

பிற துறைகளைப்போல வங்கித்துறையிலும் உலகத்தின் போக்கிற்கேற்ப தனியார்மயத்தைக் கொண்டுவரவேண்டும் என்று அரசாங்கம் ஒரு சமயம் நினைத்தது. HDFC, ICICI, AXIS, Yes Bank போன்ற தனியார் வங்கிகள் இந்திய வங்கித்துறையில் செயல்பட அனுமதிக்கப்பட்டன. இந்த வங்கிகள் வாடிக்கையாளர் மனநிறைவு பெறும் வண்ணம் செயல்பட்டு வெற்றிகண்டு நீடித்து இருந்துவருகின்றன. இதில் இருந்து குறிப்பறிந்து கொண்டு பொதுத்துறை வங்கிகளும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, வாடிக்கையாளர்களின் மனநிறைவைப்பெறுகின்றன.

வங்கிகளின் வெற்றிகரமான செயல்பாட்டிற்கு ஒரு பெரிய தடையாக இருப்பது வருவாய் ஈட்டாத வங்கிச் சொத்துக்களேயாகும். தனியார், பொதுத்துறை வங்கிகள் இரண்டுக்குமே இந்த நிலை பொருந்தும். வங்கித்துறையின் முக்கியமான இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இந்திரதனுஷ் திட்டத்தை அறிவித்துள்ளது. மறுமூலதன ஆக்கம், வங்கி நிர்வாகக்குழு அமைப்பது, பொறுப்பேற்கும் கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் இந்திரதனுஷ் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. நொடித்துபோதல், திவாலாதல் சட்டம் வருவாய் ஈட்டாத வங்கிச் சொத்துக்களை மீட்பதற்கு உதவக்கூடிய இன்னொரு நன்முயற்சியாகும்.

நவீன வங்கிமுறையில் மின்னணு பரிவர்த்தனை, பணமில்லாப் பரிவத்தனைகளில் இணையப்பாதுகாப்பு கவலை அளிக்கும் இன்னொரு விஷயம். இந்தக் கவலையைத்தீர்ப்பதற்கு இந்தியத்தொழில்நுட்பக்கழகம் (IIT) போன்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தகவல்தொழில்நுட்பத்துறையினால் பல்வேறு முன் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. வங்கிகளின் மூலம் நிதிசார் உள்ளடக்கலை சாதிப்பதற்கு ஜன்தன், வங்கிக்கணக்கில் நேரடி பணப்பரிமாற்றம் ஆகிய திட்டங்களின் மூலம் முக்கியத்துவம் தரப்பட்டுவருகிறது. கிராமப்புற வங்கிச்சேவை கவலை தரும் இன்னொரு விஷயம். உள்ளடங்கிய பல பகுதிகளில் வங்கிச்சேவை எட்டாக்கனியாக இருக்கிறது. கல்வியறிவு இன்மை, அணுகமுடியாத தொலைவிலும் வகையிலும் வங்கிகள் இருப்பது ஆகிய காரணங்களால் பலபகுதிகள் வங்கிச் சேவைகளைப் பெறவே முடியவில்லை. வங்கிகளுக்கும், கிராமங்களுக்கும் இடையில் இணைப்புப்பாலமாகத்திகழும் வங்கிமுகவர்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் இந்த இடைவெளியை நிரப்ப முயற்சித்து வருகிறது.

சாதரணமாகப்பார்க்கும் போது, வங்கி சீர்திருத்தங்கள் என்பவை பொருளாராதார வல்லுநர்களுக்கும், திட்டமிடலைச் செய்பவர்களுக்குமானவை என்று தோன்றும். ஆனால் கடின உழைப்பின் மூலம் மக்கள் சேர்க்கும் பணத்தைப் பாதுகாப்பவை வங்கிகள் தான். உங்கள் நிதி நிர்வாகம் சிறப்புற நடந்தால் உங்களுக்கு மன அழுத்தம் இருக்காது. திறமைமிக்க, சிறப்பான வங்கி முறை என்பது ஒவ்வொருவர் வாழ்விலிருந்தும் இத்தகைய மன அழுத்தத்தை நீக்கும்.

- **ஆசிரியர்**

# மின்னணுமயமாக்கலும், குறைந்த பணப்பரிமாற்றப் பொருளாதாரமும் - இணையப்பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், முறைகேடுகளைத் தடுப்பதற்குமான சட்டங்கள்

- ஆர்.சுப்பிரமணியகுமார்

மின்னணுமயமாக்கல் என்பது மின்னணு வழியில் பரிமாற்றம் செய்யும் முறையாகும். இதில் தான் வங்கிகள், வாடிக்கையாளர்கள், வணிகர்கள், தொழில்துறையினர் மற்றும் பிற பங்குதாரர்கள் இணைந்து ஒருவரையொருவர் சார்ந்த நிதிப் பரிமாற்றக் கட்டமைப்பை உருவாக்குகின்றனர். மின்னணுமயமாக்கல் என்பது வங்கித்துறை முன் உள்ள ஒரு வாய்ப்பு இல்லை, மாறாக தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகும். ஏனெனில் ஒவ்வொரு தொழில்துறையும் மின்னணுமயமாக்கப்பட்டு வரும் நிலையில் வங்கித்துறை மட்டும் விதிவிலக்காக இருக்கமுடியாது.

**மின்னணுமயமாக்கல்**

வங்கி மற்றும் நிதிப்பரிமாற்றங்கள் நமது அன்றாட வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. நம்மில் பலருக்கு வங்கிகளிலோ அல்லது வணிகர்களிடையே ஒருமுறையாவது நிதிப்பரிமாற்றம் செய்யாமல் ஒவ்வொரு நாளும் முடிவதில்லை. எனவே, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும், வாடிக்கையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்தி அதன் மூலம் ஊரக மற்றும் நகர்ப்புற இடைவெளியைக் குறைப்பதிலும் வங்கிகள் முன்னணியில் இருக்கவேண்டும்.

வங்கிகளில் மின்னணுமயமாக்கலை கீழ்க்கண்ட அம்சங்கள் தான் தீர்மானிக்கும்.

* மின்னணுமயமாக்கலுக்கு சாதகமாக நுகர்வோரின் நடத்தையை மாற்றுதல்,
* நிதி உள்ளடக்கம் மற்றும் அரசின் முன்முயற்சிகள்,
* ஸ்மார்ட் செல்பேசிகளின் பயன்பாடு, செல்பேசி இணைப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அதிகரிக்க ஊக்கம் தருதல்

குறைந்த அளவு ரொக்கப்பரிமாற்றப் பொருளாதாரம் என்பது பெரும்பாலான பரிமாற்றங்களை மின்னணு முறையில் மேற்கொள்வதாகும். மின்னணு பணப்பரிமாற்ற முறை என்பதில் இணைய வங்கிச் சேவை, செல்பேசி வழியிலான வங்கிச் சேவை, கடன் அட்டை, பற்று அட்டை, அட்டைகளைத் தேய்த்து பணம் செலுத்தும் முறை, ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் முனைய முறை (UPI)- பிம் (BHIM), க்யூ ஆர் கோடு சார்ந்த பணப்பரிமாற்றங்கள், டச் அண்டு கோ அட்டைகள் ஆகியவையும் அடங்கும்.

**பிம் யு.பி.ஐ - பாரத பணம் செலுத்தும் முனையம் - ஒருங்கிணைந்த பணம் செலுத்தும் முனைய முறை:**

பிம் யு.பி.ஐ என்பது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புரட்சிகரமான பணம் செலுத்தும் முறையாகும். இத்தகைய பணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பது உலகிலேயே இது தான் முதல் முறையாகும். பிம் யு.பி.ஐ பணம் செலுத்தும் முறையை 60 வங்கிகள் செயல்படுத்தி வருகின்றன. இதற்கான செல்பேசி செயலிகளை 2.10 கோடி பேர் தரவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் 82 இலட்சம் பணப்பரிமாற்றங்கள் பிம் யு.பி.ஐ தளத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



2016ஆம் ஆண்டு திசம்பர் மாதம் பிம் செயலி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஒவ்வொரு மாதமும் செய்யப்படும் மின்னணு பரிமாற்றங்களின் எண்ணிக்கை 40 ஆயிரத்திலிருந்து 200 மடங்கு அதிகரித்து 82 இலட்சமாக உயர்ந்துள்ளது.

பிம் ஆதார் எனப்படுவது கடைகளில் ஆதார் சரிபார்ப்பு முறை மூலம் வாடிக்கையாளர்களிடமிருந்து வணிகர்கள் பணம் பெறும் முறை ஆகும். வாடிக்கையாளர்கள் அவர்களின் ஆதார் எண்ணைக் கொடுத்து அதை கைரேகைப் பதிவின் மூலம் சரிபார்த்து ஒப்புதல் அளித்தால் அவர்களின் கணக்கிலிருந்து வணிகர்களின் கணக்குக்கு பணம் சென்று விடும்.

### இணையப் பாதுகாப்பு

வங்கித்துறையில் விண்ணைத்தொடும் அளவுக்கு மின்னணுமயமாக்கல் ஊடுருவியுள்ள நிலையில், மின்னணு பரிமாற்றத் தளத்தில் இணையப்பதுகாப்பை செயல்படுத்துவதற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியிருக்கிறது. மின்னணுமயமாக்கல் சூழல் அமைப்பில் கீழ்க்கண்டவர்கள் பங்குதாரர்களாக இருக்கின்றனர். அவர்களின் விவரம்:

* வாடிக்கையாளர்/ பணம் அனுப்புபவர்
* பரிமாற்றத்தை தொடங்கும் நிறுவனம்
* பரிமாற்றத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்
* பயனாளி நிறுவனம்
* பயனாளி




மின்னணு பரிமாற்றங்களின் போது அனைத்து தொடு முனைகளிலும் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அனைத்துப் பரிமாற்றங்களும் தடையில்லாமல் நடக்க வேண்டுமானால் ஒட்டுமொத்த மின்னணு பரிமாற்றச் சூழல் அமைப்பும் இணையத் துப்புரவு கொண்டதாக இருக்கவேண்டும். இதற்காக கீழ்க்கண்ட மூன்று பாதுகாப்பு அம்சங்களும், பரிமாற்றத்தை நிராகரிக்கும் தன்மையற்ற அம்சத்துடன் இணைந்து உறுதியாக இருப்பதும் அவசியமாகும்.

* கமுக்கத்தன்மை (ரகசியத்தன்மை)
* நம்பகத்தன்மை
* எப்போதும் சேவை வழங்கத் தயார்நிலை

ஒரு பரிமாற்றம் அதன் ஒட்டுமொத்தப் பயணத்தின் போது பாதிக்கப்படாமல் இருப்பதை இந்த நடைமுறையில் உள்ள பங்குதாரர்கள் எவ்வாறு உறுதி செய்கிறார்கள் என்பதை இப்போது பார்ப்போம்.

### வாடிக்கையாளர்/ பணம் அனுப்பும் நடவடிக்கையை தொடங்குபவர்

எந்த ஒரு பணப்பரிமாற்றத்தையும் தொடங்கும்போது, எந்தக் கருவியைப் பயன்படுத்தித் தொடங்குகிறோமோ அந்தக் கருவி இணையத் துப்புரவு நிலை கொண்டதாக இருப்பதை உறுதி செய்யவேண்டும். நவீன ஆண்டிவைரஸ் கருவியால் கணினி பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆன்லைன் பரிமாற்றத்தில் பணம் அனுப்புவதாக இருந்தால், இணையதள முகவரியை மின்னஞ்சலில் இருந்து கிளிக் செய்வதற்கு பதிலாக புதிதாக புதிதாக அச்சிடுவது தான் சரியாக இருக்கும்.

எந்த மதிய உணவும் இலவச உணவு அல்ல என்பதை உணர வேண்டும். ஏதேனும் பொருள்களை இலவசமாக வழங்குவதாக செய்தி வந்தால் அதை மிகவும் கவனமாக் கையாள வேண்டும். பணம் அனுப்பும் வாடிக்கையாளர்கள் அதற்கான கடவுச்சொல், ரகசியக்குறியீடு ஆகியவற்றை பத்திரமாக தங்களுடன் வைத்துக் கொள்ள வேண்டும். அதை யாருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது; ஆன்லைனில் வரும் இணைப்பு மின்னஞ்சல்கள் மூலமும் பகிர்ந்து கொள்ளக்கூடாது. மின்னணு பணப்பரிமாற்றம் கமுக்கமாக நடைபெறுவதை இது உறுதி செய்யும்.

### பரிமாற்றத்தைத் தொடங்குதல்/பயனாளி நிறுவனம்

மின்னணு பணம் செலுத்தும் முறையில் பரிமாற்றம் என்பது பணம் செலுத்துபவர் அதற்கான

பணியைத் தொடங்குவதில் ஆரம்பித்து பரிமாற்றம் தொடங்கும் நிறுவனத்திற்கு அவரது கட்டளை செல்லும் வரை நிகழும் நிகழ்வுகளாகும். பரிமாற்றம் தொடங்கும் நிறுவனம் என்பது ஏதேனும் ஒரு நிதி நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப அமைப்பாக இருக்கலாம். ஒரு வீட்டுக்கு, அது சாதாரண குடிசையாக இருந்தாலும், ஆடம்பரமான மாளிகையாக இருந்தாலும் அதற்கென ஒரு பூட்டும், சாவியும் இருக்கவேண்டும். அதேபோல், எந்தவொரு தகவல் தொழில்நுட்ப அமைப்பாக இருந்தாலும் அது நவீனமான அமைப்பாக இருந்தாலும், பழைய தொழில்நுட்பமாக இருந்தாலும் அதற்கு மிகவும் கடுமையான பாதுகாப்புக் கட்டுப்பாடு தேவை. அந்த பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் பரிமாற்ற சுழற்சியின் நேர்மைத் தன்மையை உறுதி செய்வதாக இருக்கவேண்டும்.

நேர்மைத் தன்மை என்பது நிலையான தன்மை, துல்லியம், ஒட்டுமொத்த சுழற்சியிலும் தகவல்கள் மீதான நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்கிறது. பரிமாற்றத்தின் போது ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்லும் போது தகவல்கள் மாறிவிடக்கூடாது. அதேபோல், தகவல்கள் அதிகாரப்பூர்வமற்ற முறையில் இன்னொருவரால் மாற்றப்படாமல் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

## நடைமுறைப்படுத்தும் நிறுவனம்

பெரும்பாலான மின்னணு பரிமாற்றங்கள் ஏதேனும் ஒரு மத்திய பொறுப்பு நிறுவனத்தின் மூலமாகத் தான் செய்யப்படுகின்றன. அது மும்பையில் உள்ள இந்திய தேசிய பணம் வழங்கும் கழகமாகவோ, ஹைதராபாத்தில் உள்ள வங்கித் தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமாகவோ இருக்கலாம்.

இந்த அமைப்புகளுடன் பரிமாற்றத்தில் ஈடுபடும் நிதி நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு என்பது சம்பந்தப்பட்ட பொறுப்பு நிறுவனங்களால் வரையறுக்கப்பட்ட தரம் மற்றும் செயல்முறைகளை உறுதி செய்யும் வகையில் இருக்கவேண்டும். நிதி நிறுவனங்களுக்குத் தேவையான இத்தகைய கட்டமைப்புகள் கிடைப்பதை பொறுப்பு நிறுவனம் உறுதிசெய்கிறது.



## பயனாளிகள்

பயனாளிகள் என்பவர்கள் பணம் பெறுபவர்கள் என்பதால் அவர்களுக்கான இணையப் பொறுப்பு என்பது ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகும். பயனாளிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய ஒரே விஷயம் என்னவென்றால் சரியான கணக்கு எண்/ ஐ.எப்.எஸ்.சி குறியீடு அல்லது வி.பி.ஏவை பணம் செலுத்துபவரிடம் கொடுக்க வேண்டும் என்பது தான்.

மின்னணு பணப்பரிமாற்றத்திற்கான சூழல் அமைப்பில் இணையப்பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக கீழே பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகளை இந்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

## தேசிய இணையப்பாதுகாப்புக் கொள்கை, 2013

இணையப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முறைசார்ந்த நடவடிக்கையாக தேசிய இணையப் பாதுகாப்பு கொள்கையை மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை கடந்த 2013ஆம் ஆண்டு வெளியிட்டது.

இந்திய குடிமக்கள், வணிக நிறுவனங்கள், அரசு ஆகியவற்றிற்கு பாதுகாப்பான, வலிமையான இணையவெளியை உருவாக்கித் தருவதற்காக இந்தக் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. இணையவெளித் தகவல்கள் மற்றும் கட்டமைப்பைப் பாதுகாப்பது, இணையத் தாக்குதலை தடுப்பது மற்றும் எதிர்கொள்வதற்கான திறனைக் கட்டமைப்பது, நிறுவன கட்டமைப்புகள், மக்கள், செயல்முறைகள், தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் பாதிப்புகள் குறைத்தல் ஆகியவையே தேசிய இணையப் பாதுகாப்புக் கொள்கையின் நோக்கம் ஆகும்.

## தேசிய இணையப்பாதுகாப்புக் கொள்கையால் கடைபிடிக்கப்படும் சில உத்திகள் வருமாறு:

* தேசிய பொறுப்பு முகமை போன்ற அமைப்புகளை ஏற்படுத்துவது, மூத்த மேலாண்மை அதிகாரிகளை தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கும்படி அமைப்புகளை ஊக்குவித்தல், தகவல் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கும்படி ஊக்குவித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளின் மூலம் பாதுகாப்பான இணைய சூழல் அமைப்பை உருவாக்குதல்.
* தகவல் தொழில்நுட்பம் பாதுகாப்புக்காக உத்தரவாதக் கட்டமைப்பு உருவாக்குதல்.
* திறந்த நிலை தரக் குறியீடுகளை ஊக்குவித்தல்.
* குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை மறு ஆய்வு செய்தல், சர்வதேச தரத்துடன் நமது நிறுவனங்களின் தரம் இணையும் அளவுக்கு மேம்படுத்துதல், சட்டம் குறித்த கட்டமைப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒழுங்குமுறைக் கட்டமைப்பை வலுப்படுத்துதல்.
* பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுதல் மற்றும் அதற்கான பதிலடி கொடுத்தல் ஆகியவற்றை தேசிய அமைப்புகள் மற்றும் நடைமுறைகள் மூலம் வழங்குவதற்கான கட்டமைப்பை ஏற்படுத்துதல்.
* அனைத்து வகையான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அவசரக் கால எதிர்வினைகள், நெருக்கடி நிலை மேலாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு அமைப்பாக தேசிய கணினி அவசர நிலையை சமாளிக்கும் குழு பணியாற்றுகிறது.
* உலகளாவிய சிறந்த நடைமுறைகளை செயல்படுத்தியும், பொதுப்பயன்பாட்டு இணையக் கட்டமைப்புகளை அதிக அளவில் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் மின் ஆளுமையைப் பாதுகாத்தல்.
* தேசிய முக்கியத் தகவல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையத்தை பொறுப்பு நிறுவனமாக செயல்படுத்தி முக்கிய தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை பாதுகாத்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
* இணையப்பாதுகாப்பு தொழில்நுட்பத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்.
* திறன் மேம்பாட்டுக்கான கல்வி மற்றும் நிகழ்ச்சிகளின் மூலம் மனிதவள மேம்பாடு.

## இணையத் தூய்மை மையம்

இணையப் பாதுகாப்பு விதிமீறல்களை முறியடிக்கவும், அதை அதிகரிப்பதைத் தடுக்கவும் இந்திய அரசின் கணினி நெருக்கடி நிலை சமாளிப்புக் குழு கடந்த 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இணையத் தூய்மை மையத்தை (போட்நெட் தூய்மை மற்றும் இணைய வைரஸ் பகுப்பாய்வு மையம்) தொடங்கியது. இணையப்பாதுகாப்புக்கான புதிய மேசைக் கணினி மற்றும் செல்பேசிகளுக்கான பாதுகாப்புத் தீர்வுகளை இந்த மையம் வடிவமைத்திருக்கிறது.

இந்த மையத்தை 2000 மாவது ஆண்டின் தகவல் தொழில்நுட்பச்சட்டத்தின் 70 (பி) பிரிவின்படி இந்திய அரசின் கணினி நெருக்கடி நிலை சமாளிப்புக் குழு நிர்வகித்து வருகிறது. மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் டிஜிட்டல் இந்தியா முயற்சியின் ஓர் அங்கமாக உருவாக்கப்பட்டுள்ள இந்தத் தீர்வு இந்தியாவில் போட்நெட் வைரஸ் தொற்றைக் கண்டுபிடிப்பதுடன், அதுகுறித்த அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் அது மேலும் பரவுவதையும் தடுக்கிறது. அதுமட்டுமின்றி, கடைநிலை கணினி பயனாளர்களின் கணினிகளைப் பாதுகாக்கவும், சுத்தம் செய்யவும் இந்தத் தீர்வு பயன்படுகிறது. பி.ஓ.டிகள்/ மால்வேர் தன்மைகளை பகுப்பாய்வு செய்தல், அவற்றை நீக்குவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருதல், தங்களின் தகவல்கள், கணினிகள், செல்பேசிகள், ரூட்டர்கள் உள்ளிட்டவற்றை பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை இந்தத் தீர்வு மேற்கொள்கிறது. இந்திய தேசிய இணையப் பாதுகாப்புக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாதுகாப்பான இணையச் சூழல் அமைப்பை உருவாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை தான் தேசிய இணையத் தூய்மை மையம் ஆகும்.

**தேசிய இணையத் தூய்மை மையம் கீழ்க்கண்ட பாதுகாப்பு மற்றும் காப்புக்கருவிகளை வழங்குகிறது:**

* 'யு.எஸ்.பி பிராட்டிரோத்' எனப்படும் தீர்வை மத்திய அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியது. இதை அறிமுகப்படுத்திப் பேசிய மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் துறை அமைச்சர் திரு.ரவிசங்கர் பிரசாத், ''பென் டிரைவ், வெளிப்புற ஹார்டு டிஸ்க், யு.எஸ்.பி வழியாக பயன்படுத்தக்கூடிய சேமிப்புக் கருவிகள் போன்ற கணினிகளிலிருந்து அகற்றக்கூடிய கருவிகள் அனுமதியில்லாத பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 'யு.எஸ்.பி பிராட்டிரோத்' தீர்வு உருவாக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார்.
* சாம்வித் எனப்படும் செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது டெஸ்க்டாப் சார்ந்த செயலி ஆகும். விண்டோஸ் செயலியக்க அமைப்பை (ஓ.எஸ்) பாதுகாப்பதற்கான தீர்வை இது வழங்குகிறது. ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பைல்களை மட்டுமே இது அனுமதிக்கும். அதன்மூலம் ஐயத்திற்கிடமான பயன்பாடுகள் இயங்குவதிலிருந்து டெஸ்க்டாப்பை இது பாதுகாக்கிறது.
* எம் கவாச் என்ற பெயரில் ஆன்ட்ராய்ட் செல்பேசிகளின் பாதுகாப்புக்கான கருவியும் உருவாக்கப்பட்டிருக்கிறது. தனி நபர்களின் தகவல்கள், ஆதாரச்சான்றுகள் ஆகியவற்றைத் திருடுதல், வைபை மற்றும் ப்ளூடுத் ஆதாரங்களைத் தவறாக பயன்படுத்துதல், செல்பேசிகளைத் தவறவிடுதல் அல்லது திருட்டு போதல், ஸ்பாம் எஸ்.எம்.எஸ், அதிகக் கட்டண எஸ்.எம்.எஸ் மற்றும் தேவையற்ற/ வேண்டாத உள் அழைப்புகள் ஆகியவை சார்ந்த பிரச்சினைகளில் இருந்து எம் கவாச் பாதுகாக்கிறது.

பிரவுசர் ஜே.எஸ்.கார்டு என்ற கருவியும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது பிரவுசரின் நீட்சியாக செயல்பட்டு இணைய பிரவுசர் வழியாக Heuristics தொழில்நுட்பம் மீது நடத்தப்படும் எச்.டி.எ.எல்- ஜாவாஸ்கிரிப்ட் தாக்குதல்களைக் கண்டறிந்து தடுக்கிறது.

**தகவல்தொழில்நுட்பச்சட்டம் 2000, 2008**

2000மாவது ஆண்டின் தகவல் தொழில்நுட்பச்சட்டம் என்பது இந்தியாவின் அடிப்படைச் சட்டம் ஆகும். இணையக் குற்றங்கள், மின்னணு வணிகம் ஆகியவை சார்ந்த சட்டமான இது பின்னர் 2008ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

**தகவல்தொழில்நுட்பச் சட்டத்தில் கீழ்க்கண்டவை வரையறுக்கப்பட்டுள்ளன.**

* டிஜிட்டல் மற்றும் மின்னணு கையெழுத்து
* மின்ஆளுமை
* மின்னணு ஆவணங்கள் அனுப்பப்படுவதை பதிவு செய்தல் மற்றும் ஒப்புகை செய்தல்
* பாதுகாப்பான மின்னணு ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் கையெழுத்துகள்
* சான்றளிக்கும் அதிகாரிகளை ஒழுங்குபடுத்துதல்
* மின்னணு கையெழுத்து சான்றிதழ்கள்

கீழ்க்கண்ட மின்னணு சார்ந்த குற்றங்கள் மற்றும் தண்டனைகள் குறித்த வரையறைகள் தகவல்

தொழில்நுட்பச் சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

* கணினியில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை சேதப்படுத்துதல்
* கணினி அமைப்பை ஹேக் செய்தல்
* திருடப்பட்ட கணினி அல்லது தொடர்புக்கருவிகளை வாங்குதல்
* இன்னொருவரின் கடவுச்சொல்லைப் பயன்படுத்துதல்
* கணினி ஆதாரங்களை வைத்து பிறரை ஏமாற்றுதல்
* இணைய பயங்கரவாத செயல்கள்
* ஆவணங்களைப் பராமரிக்கத் தவறுதல்
* உத்தரவுகளை மதிக்கத் தவறுதல்/ மறுத்தல்
* குறிநீக்கப்பட்ட (Decrypt) தகவல்களை ஏற்கத் தவறுதல்/ மறுத்தல்
* பாதுகாக்கப்பட்ட கணினி அமைப்புக்குள் நுழைதல் அல்லது நுழைய முயலுதல்
* ஆள்மாறாட்டம் செய்தல்

## ஆன்லைன் குற்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டம்

ஆன்லைனில் முறைகேட்டாளர்களால் செய்யப்படும் பல்வேறு வகையான இணையக் குற்றங்கள் மற்றும் அதற்கான தண்டனைகள் குறித்து இந்திய தகவல்தொழில்நுட்பச் சட்டத்தில் விரிவாக விளக்கப்பட்டிருகிறது. வாடிக்கையாளர்களின் விவரங்கள், கடவுச் சொற்கள் ஆகியவற்றை ஆன்லைன் முறையில் திருட முயல்வது தான் மிகவும் சாதாரணமான வங்கி சார்ந்த குற்றம் ஆகும்.

## தகவல்களைத் திருடுதல்

பிஷிங் எனப்படும் தகவல் திருட்டு வங்கி சார்ந்த இணையக் குற்றம் ஆகும். வங்கிகளில் கணக்கு வைத்துள்ள பயனாளிகளின் வங்கிக்கணக்கு சார்ந்த தகவல்கள், பயனாளர் அடையாள முகவரி, கடவுச்சொல், கடன் அட்டை எண்கள் ஆகியவற்றைத் திருடுவதற்காக இது அடிக்கடி ஏவப்படுகிறது. நம்பத்தகுந்தவர்களைப் போல ஏமாற்றி கணினிக்குள் நுழைந்து மின்னஞ்சல், உடனடித் தகவல், குறுஞ்



செய்தி ஆகியவற்றை திருடுவது தான் பிஷிங் தாக்குதலாகும்.

**தகவல்களைத் திருடுவது சார்ந்த குற்றங்கள் குறித்து 2000 மாவது ஆண்டின் தகவல்தொழில் நுட்பச்சட்டப் பிரிவுகள் விளக்குகின்றன:**

பிரிவு 66: கணினி அமைப்பை ஹேக் செய்தல் ஒரு கணினி ஆதாரத்தில் உள்ள ஏதேனும் ஒரு தகவலை ஒரு தனிநபருக்கோ அல்லது பொதுமக்களுக்கோ பாதிப்பு அல்லது இழப்பு ஏற்படும் வகையில் அல்லது அதன் மதிப்பைக் குறைக்கும் வகையில் தெரிந்தோ, தெரியாமலோ அழித்தல் அல்லது சிதைத்தல் அல்லது மாற்றுவது தான் கணினி அமைப்பை ஹேக் செய்யும் குற்றமாகும்.

இதற்கு 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது/மற்றும் ரூ. 5 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்

**பிரிவு 66பி : திருடப்பட்ட கணினி அல்லது தொடர்புக் கருவிகளை வாங்குதல்**

திருடப்பட்டதாகவோ அல்லது திருடியிருக்கலாம் என்று நம்பப்படுபவரிடமிருந்தோ ஒருவர் ஒரு கணினியையோ அல்லது தொடர்புக்கருவியையோ வாங்குவதோ அல்லது வாங்கிவைத்திருப்பதோ குற்றமாகும்.

இதற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது/மற்றும் ரூ. 1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்

**பிரிவு 66 சி மற்றொருவரின் கடவுச்சொல்லை பயன்படுத்துதல்**

ஒருவர் இன்னொருவரின் கடவுச் சொல், டிஜிடல் கையெழுத்து அல்லது பிற தனித்துவ அடையாளங்களைப் பயன்படுத்துவது இந்த சட்டப்படி குற்றம் ஆகும்.

இதற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது/மற்றும் ரூ. 1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு 66 டி கணினி ஆதாரத்தைப் பயன்படுத்தி ஏமாற்றுதல்**

கணினி ஆதாரம் அல்லது தகவல் தொடர்பைப் பயன்படுத்தி ஒருவரை ஏமாற்றுவது குற்றம் ஆகும். இந்தக் குற்றத்திற்காக 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை அல்லது/மற்றும் ரூ. 1 இலட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்

**கடன் அட்டை முறைகேடுகள்:**

கடன் அட்டை முறைகேடுகள் ஆன்லைனில் நடைபெறும் மற்றொரு வங்கி முறைகேடு ஆகும். ஒரு வாடிக்கையாளரின் கடன் அட்டையில் உள்ள விவரங்களைத் திருடி, அதை ஆன்லைனில் பயன்படுத்தி பணத்தை எடுப்பது தான் கடன் அட்டை மோசடி ஆகும். இந்த மோசடியில் பாதிக்கப்படும் வாடிக்கையாளர்களை தகவல் தொழில்நுட்பச் சட்டமும், இந்திய தண்டனைச் சட்டமும் மீட்பதுடன், மோசடி செய்தவருக்கு தண்டனை கிடைப்பதையும் உறுதிசெய்கின்றன.

**இத்தகைய குற்றங்களுக்கு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பின்வரும் பிரிவுகள் பொருந்தும்:**

**பிரிவு 66: கணினி அமைப்பை ஹேக் செய்தல்**

**பிரிவு 66 சி மற்றொருவரின் கடவுச்சொல்லை பயன்படுத்துதல்**

**பிரிவு 66 டி கணினி ஆதாரத்தைப் பயன்படுத்தி ஏமாற்றுதல்**

மோசடி மற்றும் நேர்மையின்மை தொடர்பான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான இந்திய தண்டனைச் சட்டத்தின் 420ஆவது பிரிவும் கடன் அட்டை மோசடிகளுக்குப் பொருந்தும். இந்தச் சட்டப்படி அதிகபட்சமாக 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதமும் விதிக்கப்படும்.

2000/2008 ஆண்டுகளின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின்படி மேற்குறிப்பிட்ட பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தாலும் கூட இணையதள மோசடிகளுக்கு எதிரான பாதுகாப்பு ஏற்பாடுகளை மறுஉறுதி செய்யும்படி அனைத்து வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி ஆணையிட்டுள்ளது.

**இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்கள்**

நுகர்வோர் பாதுகாப்பு அனுமதியற்ற மின்னணு வங்கிப் பரிமாற்றங்களால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் இழப்புகளைக் கட்டுப்படுத்துதல் என்ற தலைப்பில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

மின்னணு வங்கிப்பரிமாற்றங்களில் ஏதேனும் முறைகேடுகள் நடந்து, அது குறித்து புகார் செய்யப்பட்டால், வாடிக்கையாளர்களுக்கு இழப்பே ஏற்படாமல் தடுக்க வேண்டும் அல்லது குறைந்த அளவு இழப்புடன் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வலியுறுத்தியுள்ளது.

முறைகேடாக செய்யப்படும் பரிமாற்றத்தில் வங்கியின் தரப்பில் தவறு இருந்தால் அதனால் வாடிக்கையாளர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படுத்தப்படக் கூடாது. அதேபோல், வங்கி சம்பந்தப்படாமல் மூன்றாவது மனிதரின் மூலம் முறைகேடாக ஏதேனும் பரிமாற்றம் செய்யப்பட்டு, அதுகுறித்து 3 பணி நாட்களுக்குள் தகவல் தெரிவிக்கப்பட்டால் அப்போதும் வாடிக்கையாளர்களுக்கு எந்த இழப்பும் ஏற்படாது. அதுமட்டுமின்றி முறைகேடு செய்யப்பட்ட பணம் அடுத்த 10 நாட்களில் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டு விடும்.

அனைத்து வங்கிகளும் தங்களின் வாடிக்கையாளர்களின் தொலைபேசி எண்களைப் பதிவு செய்து அவர்களின் கணக்கில் செய்யப்படும் பரிமாற்றங்கள் குறித்து குறுஞ்செய்தி அனுப்பவேண்டும்; முறைகேடான பரிமாற்றம் செய்யப்பட்டு இருந்தால் அதுகுறித்து அவர்கள் குறுஞ்செய்தி மூலமாக புகார் செய்தால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அனைத்து வங்கிகளுக்கும் இந்திய ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது. இதனால் வங்கிக்கணக்குகளில் ஏதேனும் முறைகேடுகள் நடந்தால் அதுகுறித்து வாடிக்கையாளர்களுக்கு உடனடியாக தெரிந்துவிடும்.

வங்கிக்கணக்குகளில் ஏதேனும் முறைகேடுகள் நடந்தால் அதுகுறித்து வங்கியின் இணையதளத்திலேயே புகார் செய்யும் வசதி ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலம் வாடிக்கையாளர்கள் தங்களின் குறைகளை மிகவும் எளிதாகத் தெரிவிக்கமுடியும். முறைகேடு நடந்தால் அதுகுறித்து செல்பேசி, குறுஞ்செய்தி, மின்னஞ்சல், அழைப்புமையம், தானியங்கி குரல்பதிவு வசதி என எந்த வழியில் வேண்டுமானாலும் புகார் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். எனினும், வாடிக்கையாளரின் அலட்சியம் காரணமாக இழப்பு ஏற்பட்டால், முறைகேடான பரிமாற்றம் குறித்து வங்கிக்குத் தெரிவிக்கப்படும் வரை அதனால் ஏற்படும் இழப்பை வாடிக்கையாளர்களே ஏற்கவேண்டும்.

மூன்றாவது நபரால் இழப்பு ஏற்படும் பட்சத்தில், முறைகேடான பரிமாற்றம் குறித்து அது நடந்த 4முதல்7 நாள்களுக்குள் வங்கியிடம் புகார் செய்யத் தவறினால் அதனால் ஏற்படும் இழப்பை அவர் தான் ஏற்க வேண்டும். ஒருவேளை முறைகேடு குறித்து 4 முதல் 7 நாள்களுக்குள் வாடிக்கையாளர்கள் புகார் செய்தால், அவர்களுக்கு அவர்களின் வங்கிக்கணக்கு வகை மற்றும் கடன் அட்டையில் பணம் எடுப்பதற்கான உச்சவரம்பு ஆகியவற்றைப் பொறுத்து ரூ.5000 முதல் ரூ.25,000 வரை மட்டுமே இழப்பீடு வழங்கப்படும்.




**நிறைவுரை:**

இணையப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மேற்கண்ட அனைத்து நடவடிக்கைகளின் உதவியுடன் மின்னணு பரிமாற்றங்களுக்கான பாதுகாப்பான, நம்பத்தகுந்த முழுமையான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பை ஏற்படுத்தமுடியும். எனினும், புதிய அச்சுறுத்தல்கள் வந்து கொண்டிருப்பதால் இந்தக்கட்டமைப்பு தொடர்ச்சியாக மேம்படுத்தப்படவேண்டும். விழிப்புணர்வு மட்டும் தான் பாதிப்புகளை எதிர்கொள்ளவும், தாக்கத்தைக் குறைக்கவும் நம்மை தயார்படுத்தும்.

---

- **ஆர்.சுப்பிரமணியகுமார்**, நிர்வாக இயக்குநர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, சென்னை.

•

# வங்கித்துறையில் சீர்திருத்தங்கள் : ஒரு வரலாற்றுப்பாதை

- அத்திஷா குமார்

நிறுவனங்களுக்கும், தனி ஒரு குடும்பத்திற்கும் கடன் பெற வங்கி அமைப்புகள்தான் இந்தியாவில முக்கிய ஆதாரமாக உள்ளன. நிதிச்சந்தைகள் சிறப்பாகச் செயல்பட வங்கிகளின் அளவு, செயல்திறமை, அவற்றின் முதலீடு ஆகியவை முக்கியமாகும். இந்திய வங்கித்துறையில் அரசு கட்டுப்பாட்டில் செயல்படும் வங்கிகளே அதிகம். நம் வங்கித்துறையின் முக்கிய சவால்களாக உள்ளவை வங்கிகளின் குறைந்த நிதி ஆழம், வாராக்கடன்கள் உயர் அளவில் இருப்பது, மிக அதிக எண்ணிக்கையிலான பொதுத்துறை வங்கிகள் ஆகியவையாகும். இந்தக் குறைபாடுகளினால் தொழில்நிறுவனங்களுக்கு அவை அளிக்கக்கூடிய கடனின் அளவு பாதிக்கப்படுகிறது. உலகளவிலான முதலீட்டுத்தேவைகளையும் அவைகளால் எட்டமுடியவில்லை. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால் இந்த சவால்களை எதிர்கொள்ள முடியவில்லை. இனிவரும் நாட்களில் வங்கித்துறையை சீர்படுத்த மூன்று முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்: வங்கிகளின் நிர்வாகம் மேம்படுத்தப்படவேண்டும், இந்தத்துறையில் போட்டிகள் அதிகரிக்கவேண்டும், வங்கிகள் கடன் அளிப்பதன் சுமையைக் குறைக்க கடன் பத்திரச்சந்தையை உருவாக்கவேண்டும்.




### இந்தியாவின் வங்கிச் சீர்திருத்தங்களின் வரலாறு

1990க்கு முன் இந்தியாவில் பல வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. 1969இல் இந்திய அரசு ரூ.50 கோடிக்கும் மிகுந்த வைப்புத்தொகை இருந்த வங்கிகளை தேசியமயமாக்கியது. இதன் மூலம் 80 சதவிகிதத்திற்கு மேலான வங்கிக்கிளைகள்

அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன. 1980இல் இந்திய அரசு, நாடெங்கிலும் ரூ.200 கோடிக்குமேல் வைப்புநிதி திரட்டியிருந்த வங்கிகளை அரசுடைமையாக்கியது. அந்த நிலையில், 90 சதவிகித வங்கிகள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் வந்து நிலைமை அப்படியே உள்ளது. 1969லிருந்து 1991 வரை வங்கிக்கிளைகள் பரந்து விரிந்து எண்ணிக்கை மிகுந்தன. வங்கிகளில் தற்போது, வைப்புநிதி அதிகரித்ததோடு கடன் வழங்கலும் அதிகரித்துள்ளது. முன்னுரிமை பெற்ற துறைகளுக்கான கடன் வழங்கல் 14 சதவிகிதத்திலிருந்து உயர்ந்து 41 சதவிகிதமாக இருந்தது.



ஆனால், 1991ஆம் ஆண்டு வாக்கில் வங்கிகளின் திறமையும், திறன் வெளிப்பாடும் குறைந்து வாடிக்கையாளர் சேவை தளர்ந்து இலாபமும் பாதிக்கப்பட்டது. 1991இல் அரசு பொருளாதாரத்தை தாராளமயமாக்கியபோது, வங்கித்துறை சார்ந்த சீர்திருத்தங்களையும் மேற்கொண்டது. 1991இல் திரு. M. நரசிம்மம் தலைமையில் அமைந்த நிதித்துறைசார் செயல்பாட்டுக்குழு வங்கிகளின் சட்டப்படியான குறைந்தபட்ச பணஇருப்பு (SLR) மற்றும் பணக்கையிருப்பு விகிதம் (CRR) குறைக்கப்பட்டு, வங்கிகளின் வளங்கள் விடுவிக்கப்பட்டு, சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப வங்கிகள் தங்களுடைய வட்டி விகிதங்களை நிர்ணயித்து, இந்திய வங்கித்துறையில் தனியார் மற்றும் வெளிநாட்டு வங்கிகள் நுழைந்து நல்ல போட்டி ஏற்பட்டால் பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கையும் குறையும் என்று பரிந்துரைத்தது. இந்தக்குழுவின் பல பரிந்துரைகள் ஏற்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு குறைந்தபட்ச பண இருப்பு மற்றும் பண கையிருப்பு விகிதம் குறைக்கப்பட்டு சந்தை நிலைமைகள், வட்டி விகிதத்தை நிர்ணயித்து புதிய தனியார் மற்றும் வெளிநாட்டு வங்கிகள் துவக்கப்பட்டன.

1998இல் திரு. நரசிம்மம் தலைமையில் மீண்டும்அமைந்த வங்கித்துறை சீர்திருத்தக்குழு, வங்கித்துறையை வலுப்படுத்த மேலும் பல செயல்களைப் பரிந்துரைத்தது. தற்போதுள்ள நிலைமைகளை ஆராய்ந்து புதிய சட்ட மூலதனத் தேவை மற்றும் வங்கிகளின் ஒருங்கிணைப்பு ஆகியவை சார்ந்த பரிந்துரைகளை வழங்கியது. இது அல்லாமல், தொழில்நுட்பங்களை அதிகப்படியாகப் பயன்படுத்துதல், திறன்சார் பயிற்சி மற்றும் வங்கிகளை சிறப்பாக நிர்வாகம் செய்ய பரிந்துரைகள் அளிக்கப்பட்டன. 1991லிருந்து இந்த சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டு இந்தியாவின் வங்கித்துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வங்கித்துறை வழங்கிய கடன் தொகை 1990இல் 51.5 சதவிகிதமாக இருந்து 2000 மாவது ஆண்டில் 53.4ஆக உயர்ந்தது. ஆனால், இது மற்ற நாடுகளைக் காட்டிலும் 50 சதவிகிதத்தைவிட குறைவே. 2000மாவது ஆண்டில் இது, சீனாவில் 133 சதவிகிதமாகவும் மலேசியாவில் 143 சதவிகிதமாகவும், தாய்லாந்தில் 122 சதவிகிதமாகவும் இருந்தது.

2000மாவது ஆண்டில் வங்கித்துறை சீர்திருத்தம் சார்ந்த பல குழுக்கள் அமைக்கப்பட்டு பல புதிய சீர்திருத்தங்கள் மெல்ல மெல்ல துவக்கப்பட்டுள்ளன. நிதித்துறை சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளின்படி மேல்மட்டப் பொருளாதாரம் மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் எல்லோரையும் உள்ளடக்கிய நிதி நிலைமை மற்றும் குடும்ப நிதிமேம்பாடு ஆகியவைகளாக இருந்தன. இந்திய வங்கிகளின் நிர்வாக சீர்திருத்தக் குழு (P.J. நாயக் குழு) அமைக்கப்பட்டது. இந்தியாவில் மிக அதிக அளவில் செயல்படும் பொதுத்துறை வங்கிகளின் ஆளுமையையும் மேலாண்மையையும் அதிகரிப்பது சார்ந்த பரிந்துரைகள் செய்யப்பட்டன.

**தற்போதைய நிலைமை : பொதுத்துறை வங்கிகளின் ஆதிக்கமும், வாராக்கடன்களும்.**

இன்றும் கூட இந்திய வங்கித்துறையில் பொதுத்துறை வங்கிகளின் பங்கு மிகுந்து காணப்படுகிறது. மொத்தமுள்ள கடன்களில் 70

சதவிகிதம் அவர்களுடையது. ஆகவே, ஒட்டுமொத்த வங்கிகளின் செயல்பாடு என்பது அவர்களின் செயல்பாட்டைச் சார்ந்தே உள்ளது. தற்போது வங்கித்துறையில் காணப்படும் உயர்ந்து கொண்டே போகும், பெருமளவிலான வாராக்கடன்களுக்கு பொதுத்துறை வங்கிகள்தான் முக்கிய காரணமாக உள்ளன. மார்ச் 2016 வாக்கில் அவர்களுடைய பங்கு 88 சதவிகிதமாக இருந்தது. காலப்போக்கில் இது மோசமாகிக் கொண்டேவருகிறது. மார்ச் 2015இல் பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன்கள் ரூ.2.7 இலட்சம் கோடியாக இருந்தது, ஜூின் 2017 வாக்கில் இது ரூ.7.33 கோடியாக உயர்ந்தது.

பொதுத்துறை வங்கிகளில் வாராக்கடன்களின் அளவு சராசரியாக 16 சதவிகிதமாக உள்ளது. இது, தனியார் வங்கிகளைக்காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகும். இப்படி உயர்ந்து வரும் வாராக்கடன்கள் பொதுத்துறை வங்கிகளின் நலனை பெருமளவு பாதித்துள்ளன. அவ்வங்கிகளின் சொத்துக்களுக்கு எதிரான இலாபமும், மூலதனப்பங்குக்கு எதிரான இலாபமும் குறைந்து கொண்டே வந்து பத்தாண்டுகளாக 2016இல் முதன்முறையாக நஷ்டத்திலும் காணப்பட்டது.

**அட்டவணை 1 : வங்கிகள் வழங்கிய மொத்தக்கடனில் வாராக்கடன் விகிதம்**

| | மார்ச் 2018 | மார்ச் 2017 |
|---|---|---|
| பொதுத்துறை வங்கிகள் | 3.5 | 15.6 |
| தனியார்துறை வங்கிகள் | 4.2 | 4.6 |
| வெளிநாட்டு வங்கிகள் | 3.0 | 4.5 |
| மொத்த வங்கிகள் | 3.5 | 12.1 |
| ஆதாரம் : இந்திய ரிசர்வ் வங்கி | | |

இன்றைய நிலையில், மார்ச் 2016இல் தனியார் வங்கிகளில்கூட உயர் அளவில் வாராக்கடன்கள் உள்ளன. எல்லா ஷெட்யூல்டு வணிக வங்கிகளின் மொத்த வாராக்கடன் ரூ.6.1 டிரில்லியன் அளவுக்கு இருந்தது. கடன்களின் தரமும் குறைந்து கொண்டே வருவதால் இலாபமும் குறைந்து வருகிறது. மார்ச் 2008 மற்றும் மார்ச் 2017க்கு இடையே, அனைத்து வங்கிகளின், மொத்தக்கடனில் வாராக்கடனின் பங்கு, 3.5 சதவிகிதத்திலிருந்து 12.1 சதவிகிதமாக உயர்ந்தது. 201617ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மொத்த வங்கிகளின் வரி போக, இலாபம், முந்தைய இதே கால கட்டத்தைவிட குறைந்தே காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம், வாராக்கடன்களுக்கு ஒதுக்கப்படும் தொகை, வராத கடன்களை கணக்கிலிருந்து நீக்குதல் மற்றும் வட்டி வருவாய் குறைவு ஆகியவற்றால் ஏற்பட்டதாகும்.

இப்படி, வங்கித்துறை மீது ஏற்பட்டுள்ள தாக்கத்தால் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்களும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இது அல்லாமல், உலகளவில் வங்கிகளுக்கு தேவைப்படும் மூலதன அளவும், பாதிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 2016இல் தொழில் நிறுவனங்களுக்கான கடன் 5.6 சதவிகிதம் உயர்ந்திருந்த நிலையில் 2017இல் அது, 5.1 சதவிகிதம் குறைந்தது. பாசல் III அளவுக்கோல் படியான வங்கிகளின் மூலதனத் தேவையும் உயர் வாராக்கடன்களினால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த மூலதனத் தேவை அளவு, ஜனவரி 2019முதல் அமலுக்கு வரும்.

இந்த சவால்களை சமாளிக்க அரசு, நிதி உதவி செய்துள்ளது. 2015-16இல் இந்திரதனுஷ் என்ற திட்டம் மூலம், பொதுத்துறை வங்கிகளுக்கு கூடுதல் மூலதன நிதி வழங்கியதன் மூலம் அந்த வங்கிகளில் உயர் அளவில் வாராக் கடன்கள் உள்ளதையும் அதனால், பொருளாதாரத்தின் மீது ஏற்பட்டுள்ள தாக்கத்தையும் அது உணர்த்துகிறது. மேலும், தீயவிளைவுகளாக வங்கிகள் மற்றவருக்குக்கொடுக்கும் கடன் குறைவது, வங்கியின் இலாபம் குறைவதுடன், வங்கிகளுக்குத்தேவைப்படும் மூலதனவிகிதமும் குறைகிறது. இதனை எதிர்கொள்ள அக்டோபர் 24ஆம் தேதி, பொதுத்துறை வங்கிகளுக்கு மூலதன நிதியாக மேலும் ரூ.2.1 இலட்சம் கோடியை அரசு அறிவித்தது. இந்த நிதி உதவியால் பொதுத்துறை வங்கிகளின் மூலதனவிகிதம் நிறைவு செய்யப்படுவதோடு, கணக்குகளிலிருந்து வாராக்கடனும் நீக்கப்படுகிறது. இந்திரதனுஷ் திட்டம், மூலதனநிதியை உயர்த்துவதோடு

வங்கிகளின் நிர்வாகத்தை வலுப்படுத்தவும், வங்கிகள் அளிக்கும் சலுகைகளை ஒரே சீராக்கவும் உதவும். இந்தத்திட்டத்தில் உள்ள 7 சிறப்பு அம்சங்களாவன: பொறுப்புடைமைக்கான செயல்திட்டங்கள், பொதுத்துறை வங்கிகளில் தலைமை செயல் அலுவலர் மற்றும் சேர்மேன் பதவிகளையும், பொறுப்புக்களையும் பிரித்தல், பொதுத்துறை வங்கிகளின் உயர்பதவிகளுக்கு நபர்களைத் தேர்வு செய்ய வங்கிகள் வாரியம் அமைத்தல் ஆகியவையாகும். ஆனால், இதனை செயல்படுத்துவது முழுமையாக இல்லை. இது அல்லாமல், கடனைத் திருப்பிக் கொடுக்க இயலாமை மற்றும் திவால் செயல்முறையிலும் வாராக்கடன்களை எதிர்கொள்ளும் வழிகள் விளக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின்படி, வங்கிகள் 270 நாட்களுக்குகள் கடன் வாங்கியவர்களுடன், வாராக்கடன் பற்றிய ஒரு உடன்பாட்டை எட்டவேண்டும்; இல்லையென்றால் அந்தக் கடனை கணக்கிலிருந்து விலக்கவேண்டும்.

## உலகளாவிய நிலைமை மற்றும் வங்கிகளின் செயல் ஆழம் மற்றும் போட்டித்திறன்

உலக வங்கிகளை ஒப்பிடும் போது, இந்திய வங்கிகள் நிதி வசதி, வங்கிகளின் அளவு, அவைகளின் நிதி அமைப்புகள் மற்றும் சந்தை அளவு ஆகியவை அந்நாட்டு மொத்தப்பொருளாதார செயல்பாட்டைக்காட்டிலும் குறைவாகவே உள்ளது. ஒரு வங்கியின் மொத்தப் பொருளாதார வளம், வங்கித்துறையில் அதற்குண்டான பங்கையும் அந்த வங்கியால், ஏற்படும் பொருளாதார வளர்ச்சியையும், ஏழ்மைக் குறைப்பு வாய்ப்புகளையும் வெளிப்படுத்துகிறது.

இந்தியாவின் மாநில அளவிலான செயல்பாட்டினைப் பார்க்கும்போது, வங்கிகளின் நிதி வளமை, கிராமப்புறங்களில் உள்ள ஏழ்மையை போக்குவதில் உதவியுள்ளது தெரியவருகிறது. படம் 1இல் மற்ற நாடுகளை ஒப்பிட்டு, உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வங்கிகளின் மொத்தக்கடன்கள் விளக்கப் பட்டுள்ளன. வளர்ந்துவரும் மற்ற பொருளாதாரநாடுகளை ஒப்பிடும்போது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனியார் வங்கிகளின் கடன் அளவுகளும், வங்கிகளின் வைப்புநிதிக்கு எதிரான கடன் வழங்குதலும் குறைவாகவே உள்ளது. 2015இல் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் இந்திய தனியார் வங்கிகளின் கடன் அளவு 50.2 சதவிகிதமாக இருந்தது. இது சீனாவில் 140 சதவிகிதமாகவும், பிரேசிலில் 71 சதவிகிதமாகவும் இருந்தது. அதுபோலவே, 2015இல் வங்கிகளின் மொத்த வைப்புநிதியில் கடன் விகிதம் இந்தியாவில் 77 சதவிகிதமாக இருந்தது. இது பிரேசிலில் 119 சதகிவிதமாகவும், சீனாவில் 312 சதவிகிதமாகவும் இருந்தது.

**படம் 1 உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வங்கிகள் கொடுத்த மொத்தக்கடன் சதவிகிதமாக, 2015இல்**




ஆதாரம் : உலகளாவிய நிதிசார் தகவல்கள். பன்னாட்டு நிதியம் (IMF)

இந்தியாவில் பெரிய வங்கிகளே ஆதிக்கம் செலுத்தியுள்ளன. புதியன சிலவே உள்ளன. மார்ச் 2016 வரையில், மொத்த சொத்துக்களின் அடிப்படையில் முதல் 10 வங்கிகள், மொத்த சொத்துக்களில் 58 சதவிகிதம் பெற்றிருக்கின்றன. 1991 முதல் 14 பொதுத்துறை வங்கிகளுக்கே உரிமம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அமெரிக்காவில் 1976 முதல் 2009ஆம் ஆண்டு வரை ஆண்டொன்றிற்கு சராசரியாக 130 புதிய வங்கிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தியாவில், வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை குறைவே. மார்ச் 2016இல் மொத்த வங்கிச்சொத்துக்களில், வெளிநாட்டுவங்கிகளின் பங்கு 6 சதவிகிதமாகவே இருந்தது.

## இனிவரும் காலங்களில்

இனிவரும் காலங்களில் இந்திய வங்கித்துறை மிகவும் வலுவானதாகவும் தகுந்த அளவு மூலதனநிதியுடனும், கடன் வழங்க அதிக பலம் பெற்றும், வளங்களை யார் சிறந்த அளவுக்குப் பயன்படுத்தி உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் இருக்கவேண்டும். வலுவான வங்கித்துறையை உருவாக்க அவைகளின் மூலதனநிதியைப் பெருக்க நிர்வாக ஆளுமை சீரமைப்பு, சிறிய வங்கிகளும் துவங்க வசதி, மேம்பட்ட நிதிசார் கண்காணிப்பு, துடிப்பான நிறுவனங்களுக்கான கடன் சந்தையை உருவாக்குதல் மற்றும் திறமையான கடன் வசூல் முறைகள் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

முக்கியமான மூன்று துறைகளை நாம் முதலில் கவனிக்கவேண்டும். முதலாவது,

# இந்தியாவில் வங்கி முறை




ஆளுமையையும் நிறுவனங்களை பலப்படுத்துவதையும் சார்ந்தது - குறிப்பாக பொதுத்துறை வங்கிகள். இவைகளை இவ்வங்கிகளுக்கான மூலதன நிதியை வலுப்படுத்தும் அதே காலகட்டத்தில் இணையாக செயல்படுத்த வேண்டும். வங்கித்துறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் வாராக் கடன்களைக் கட்டுப்படுத்தமுடியும் என்று உலகளாவிய சான்றுகள் கூறுகின்றன. உதாரணமாக, சீனாவில் மூலதன நிதி வலுவாக்கப்பட்டதோடு வங்கித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் நிதிசார் ஒழுங்குமறைகள், கண்காணிப்பு, நிர்வாக ஆளுமை ஆகியவற்றுடன் வெளிப்படைத்தன்மையையையும் மேம்படுத்தி; வலுப்படுத்தியது. இதுபோலவே, 1990இல் ஏற்பட்ட கிழக்காசிய நிதி நெருக்கடிக்குப்பின் தென்கொரியா, நிதிசார் கண்காணிப்பு சேவையை உருவாக்கி வங்கித்துறையில் கண்காணிப்பைப் பலப்படுத்தியது. ஓரளவுக்கு இந்தியஅரசு, வங்கிகளின் ஆளுமை இன்னும் மேம்படவேண்டும் என்று ஏற்கனவே அங்கீகரித்துள்ளது. இந்திரதனுஷ் திட்டத்தில், வங்கி அதிகாரிகளை நியமிப்பதற்கு, சுயமாக செயல்படும் மேல்மட்ட வங்கிவாரியம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது. அப்படிப்பட்ட ஒரு சுயமாக செயல்படும் வாரியம் அமைந்தால் பொதுத்துறை வங்கிகளின் ஆளுமையில் மாற்றம் ஏற்படும். வங்கிகள் பொறுப்பேற்கும் தன்மை செயல்படுத்தப்பட்டால் சிறப்பாக உற்பத்தி செய்யப்படுவதற்கே கடன்கள் வழங்கப்படும் நிலைமை ஏற்படும். இதனை செயல்படுத்துவது, காலக்கெடுவுடன் துரிதமாக நடைபெறவேண்டும்.

வங்கிசார் சீர்திருத்தத்தின் இரண்டாவது பகுதி, தனியார் கடன்சந்தை பற்றியது. கடன் பத்திரச்சந்தைகள் வங்கிக்கடன்கள் போலவே நிதி திரட்ட ஆதாரமாக இருக்கவேண்டும். உடனடி மற்றும் நீண்ட காலக்கடன் பங்குச் சந்தைகள் குறைந்தசெலவில் கடனைத் திரட்ட உதவும். தனியார் நிறுவனங்கள வரும் காலங்களில் கடன் பங்குச் சந்தையிலிருந்து; கடன் திரட்டுவது படிப்படியாக அதிகரித்து, வங்கிகளிலிருந்து கடன் பெறுவது குறையும்.

வங்கித்துறை சீர்திருத்தத்தின் மூன்றாவது பங்கு வங்கித்துறையைப் போட்டிமிக்கதாகச் செய்வது. வங்கித்துறையில் போட்டியையும், புதியன புகுத்தலையும், தனியார் மற்றும் வெளிநாட்டு வங்கிகளிடமும் இந்தியா உற்சாகப்படுத்தவேண்டும். புதிய கொள்கையின்படி அணுகும்போது, வங்கி உரிமம் வழங்கப்படும் என்பது இந்த வழியில் ஒரு நல்ல செயல்பாடாகும். ஆனால், புதிய வங்கிகள் துவங்குவதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும். பெருவங்கிகளின் கீழ் இயங்கும் சுயமான சிறு தனிவங்கிகளாக அனுமதித்தால், வெளிநாட்டுவங்கிகள் இந்தியாவிற்கு வருவதோடு மட்டுமல்லாமல் உலகளவில் ஏற்படும் மோசமான தாக்கங்களிலிருந்தும் தப்பிக்கலாம். காலப்போக்கில் போட்டி மிகுந்து வங்கிகளின் திறமையும், இலாபமும் மேம்படும்.

வரலாற்றுரீதியாக, 1990களிலிருந்து இந்தியவங்கித்துறை சீர்திருத்தங்கள் போட்டியை அதிகரிப்பதிலும், ஆளுமையையும், ஒழுங்குமுறைகளையும் வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன. கடந்த கால அனுபவங்களைக் கொண்டு இந்த வழியில் மேலும் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும்.

- **அத்திஷா குமார்**, நிதி ஆயோக் துணைத்தலைவர் அலுவலகத்தில் பணியாற்றிவரும் பொருளியலாளர்.

# வங்கித்துறையின் பயணம் இதுவரை, இனி வரும் பாதை

- விவேக்குமார், சங்கெட் டாண்டன், சுபதாராவ்

இந்தியப்பொருளாதாரம் 2018ஆம் ஆண்டை நோக்கிப்பயணிக்கும் போது, நளினமான ஆனால் ஆழமான மாற்றங்களைக் காணக்கூடிய வாய்ப்புள்ளதாக அது இருக்கிறது. இந்தியாவின் தனிநபர் டாலர் வருமானம் முதல் முறையாக 2000 என்ற குறியீட்டைத் தொட இருக்கிறது. உலகப் பொருளாதார வரலாற்றில் உள்நாட்டு நுகர்வு பன்மடங்காகப் பெருக்கம் அடைவது, முந்தைய கால ஆடம்பரங்கள் தற்காலத்தேவைகளாக மாறுவது, வாங்கும் சக்தி பெருகுவது ஆகியவற்றோடு தொடர்புடைய ஒரு நுழைவாயில் இதுவாகும்.

பொருளாதார மாற்றத்தில் ஒரு கதாநாயகனின் பாத்திரத்தை இந்திய வங்கிமுறை ஏற்றாக வேண்டும். வங்கிச்சேவைகளில் நீடித்த வளர்ச்சிக்கு உதவுவதோடு மட்டுமின்றி, சேவைகள் வழங்குவதிலும், தீர்வுகள் அளிப்பதிலும் முன்னோடியாகத் திகழவேண்டும்.

**முந்தையகால சீர்திருத்தங்களுக்கு வங்கித்துறை எப்படி எதிர்வினையாற்றியது?**

இதைப்பற்றிக்காண்பதற்கு முன்பாக ஒரு சிறிய வரலாற்றுப் பயணத்தை மேற்கொள்வது சிறந்தது. 1969/1980 ஆகிய ஆண்டுகளில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபிறகு, அதற்கடுத்த சீர்திருத்தம் 1991ஆம் ஆண்டிற்குப்பிறகே நடைபெற்றது. கடன் தரும் வழிமுறைகளில் கட்டுப்பாடுகளைத்தளர்த்துதல், குறிப்பிட்ட சிலருக்கே கடன் தருவதை படிப்படியாகக் குறைத்தல், வங்கி செயல்பாடுகளை ஒரு உள்ளகத்திற்குள் அடக்குதல் (Core Banking System), நவீன யுகத்தனியார் வங்கிகளுக்கு உரிமங்கள் வழங்குதல், போன்றவை 2000 ஆண்டில் வங்கிகளின் விரைவான விரிவாக்கத்திற்குத் துணைபுரிந்தன. நிதியாண்டு 1997இல் வங்கிகளில் இருந்த வைப்பு நிதி ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 19.65 ஆக இருந்தது. இது, நிதியாண்டு 2007இல் 45% ஆக அதிகரித்தது. அதற்கடுத்த 10 ஆண்டுகளில்2017இல் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியை வங்கிகளின் வைப்பு நிதியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது 71.2% ஆக உயர்ந்திருந்தது. கடன் வழங்கலின் விகிதம் 51.9 ஆக இருந்தது. பொருளாதார, நிதிச்சந்தைகளில் உலக அளவில் 2008 முதல் ஏற்பட்ட ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியிலும் இந்த விகிதங்கள் சிறப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

வங்கிகளின் விரிவாக்கத்தின் தொடக்க கட்டத்தில் (1990களில்) பொதுத்துறை வங்கிகளின் ஆதிக்கமே இருந்தது. கடன் வழங்குவதில் ஓரமாக நின்றிந்த தனியார் வங்கிகள் முதன்மையான செயல்பாட்டாளர்களாக மெதுவாக மாற்றம் கண்டன. நிதியாண்டு 2007இல் வசூலாகாத கடன் தொகையில் 20% பங்கினைக்கொண்டிருந்த தனியார் வங்கிகள், தற்போது 2017ஆம் நிதியாண்டில் 29% வசூலாகாத கடனைக்கொண்டுள்ளன. கூடுதல் முறை கடன்வழங்குவதில் 75% தனியார் வங்கிகளே செய்துள்ளன. இந்த புள்ளிவிவரங்கள் தவறானவை என்று சிலர் வாதிடலாம். கடன் வழங்குவதில் சந்தைப்பங்கு தனியார் வங்கிகளில் 2010ஆம் ஆண்டு முதல் நிலையான வகையில் அதிகரித்து வந்துள்ளன. இது பொதுத்துறை வங்கிகளைக்காட்டிலும் அதிகம்.

வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப மிக விரைவாக தங்களை தகவமைத்துக்கொண்டதே, தனியார் வங்கிகளின் விரைவான வளர்ச்சிக்கு காரணம் எனக்கூறலாம். வாடிக்கையாளர்களுக்கு சிறப்பு வகை அனுபவங்கள் கிடைக்கச்செய்து அவை தங்களை தனித்து அடையாளப்படுத்திக்கொண்டன. அதனோடு கூட, மிக அதிக அளவில் வைப்புநிதியைத்திரட்டவும் அவைகளால் முடிந்தது.

**சந்தையில் கடந்த 10 ஆண்டுகளில் தனியார் வங்கிகளின் பங்கு அதிகரித்திருப்பதற்கு உதவியிருக்கும் காரணிகள் இரண்டு வகைப்படும்:**

புதுமையாக்கம்: தொழிலகங்கள், உள்கட்டமைப்பு ஆகியவற்றிற்குத் தேவைப்படும்

பெரும்பாலான நிதியை பொதுத்துறை வங்கிகளே வழங்குகின்றன. இவற்றின் நிதிஇருப்பு தொழில்களின் சரிவுநிலைகளால் பாதிக்கப்படுகின்றது. புதுயுகத்தனியார் வங்கிகளும் அவற்றின் சொத்து மதிப்பில் சிறப்புறாததற்குக் காரணம், தராளமயமாக்கலைப் பயன்படுத்திக்கொண்டு 2000ஆண்டு தொடங்கி மிக பரவலான நிலையில் விரிவாக்கங்களை அவை மேற்கொண்டதுதான். அதிகமான கிளைகளைத்திறந்ததோடு தொழில்நுட்ப மேம்பாடுகளுக்காகவும் அவை அதிகமாக செலவு செய்தன. இதனால் அவற்றின் செயல்திறம் உயர்ந்தது. வாடிக்கையாளர்கள் பெற்ற மகிழ்ச்சியான அனுபவங்களின் காரணமாக வருவாய் தரும் புதிய சேவைகள் அடையாளம் கண்டறியப்பட்டன. தொழில்நுட்ப மேம்பாடுகளை தனியார் வங்கிகள் முன்கூட்டியே அடைந்ததற்கு, விற்பனை முனையக்கருவிகளைப் (POS கருவிகள்) பரவலாக்கியது ஒரு உதாரணம் ஆகும். கடன் தருவதில் 2012இல் 18% பங்களித்துவந்த தனியார் வங்கிகள், 2012இல் 80% இலக்குகளை சென்றடைந்தன. இதற்கு நவீன தொழில்நுட்பங்களை உரிய நேரத்தில் கையாண்டதே காரணம். அது முதற்கொண்டு தனியார் வங்கிகள் நிலையான வகையில் வளர்ந்து வருகின்றன. பொதுத்துறை வங்கிகளிடமும் 57% எனும் அளவுக்கு அதிகமான பங்கு இருப்பது நிலையான முறையில் வருவாய் பெருகுவதற்கான ஆதாரமாகத்திகழ்கிறது. தனியார் துறையின் மற்ற வகையான வருமானம் அவைகளின் மொத்த வருமானத்தில் 20% ஆகவும், பொதுத்துறை வங்கிகளின் மற்ற வகை வருமானம் 14% ஆகவும் இருப்பது கவனிக்கத்தக்கது.

**உற்பத்தித்திறன்:**

வருவாய்க்கும் செலவினத்திற்கும் இடையே உள்ள விகிதம் – CI – (பணியாளர் செலவுகள் + பிறவகை இயக்க செலவினங்கள்) / (வட்டி மூலம் கிடைத்த மொத்த வருவாய் + மற்ற வருமானம்) வங்கிகளின் இந்தக்கணக்கைப்பார்க்கும்போது, தனியார் வங்கிகளுக்கும், பொதுத்துறை வங்கிகளுக்கும் இடையே அப்பட்டமான வேறுபாடு தெரிகிறது. தனியார் வங்கிகளில் CI விகிதம் இறங்குமுகமாக இருக்கிறது. தனியார் வங்கிகளில் 2012 நிதியாண்டில் 47% ஆக இருந்த சிமி விகிதம், 2017 நிதியாண்டில் 43% ஆக குறைந்துள்ளது. பொதுத்துறை வங்கிகளில் இதே காலகட்டத்தில் இந்த விகிதம் 44%லிருந்து 49%ஆக அதிகரித்துக்காணப்படுகிறது. அனைத்து வகையான செலவினங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் வங்கிகள் வருவாய் ஈட்டுவதற்கும், பங்குதாரர்களுக்கு ஈட்டுத்தொகை வழங்குவதற்கும், மேலும் விரிவாக்கம் செய்வதற்குத் தேவைப்படும் மூலதனத்தை ஈட்டுவதற்கும் வழி செய்யும்.

**துரிதம்:**

புதுயுகத்தனியார் வங்கிகள் பொருத்தமான நபர்களைப் பணியமர்த்தவும், அதிக ஊதியம் வழங்கவும், அவர்களை வேலையில் நீடித்து வைத்திருப்பதற்குமான கொள்கைகளை வகுப்பதில் மிகவும் நெகிழ்ச்சியான போக்குகளைக் கொண்டவைகளாக உள்ளன. அதோடு கூட, வங்கிச் செயல்பாடுகள் பற்றி விரைவாக முடிவெடுக்கும் பாங்கினையும் கொண்டுள்ளன. மனிதவள சவால்கள், சொத்துத்தரம் தொடர்பான அக்கறைகள் ஆகியவற்றின் தொடர்பாக சாதகமான விளைவுகளை இதுவரை ஏற்படுத்தியுள்ளன. பொதுத்துறை வங்கிகளில் இதன் தாக்கம் சரிசமமற்ற நிலையில் அதிகரித்துள்ளது.

**பொதுத்துறை வங்கிகளுக்கு உத்வேகத்திற்கான தூண்டுதலை அளிப்பதற்கான அண்மைக்கால சீர்திருத்தங்கள்:**

பொதுத்துறை வங்கிகள் தங்களுக்கு சமானமான தனியார்துறை வங்கிகளுடன் போட்டியிடமுடியாமல் கடந்த 10 ஆண்டுகளாகப் பின்தங்கியுள்ளன. இதனைச் சீர்படுத்த உதவும் விதமாக பொதுத்துறை வங்கிகளுக்கு உத்வேகத்தூண்டுதலை அளிப்பதற்கு அரசாங்கம் சில சீர்திருத்தங்களை அண்மையில் கொண்டுவந்துள்ளது.

- வங்கி நிர்வாகச் சீர்திருத்தத்திற்கென ஒரு நிர்வாகக்குழுவை ஏற்படுத்துவது. நிர்வாகத்திறனை அதிகரிப்பதற்காக, தலைமை நிர்வாக இயக்குநர் பதவியை இரண்டாகப் பிரித்து தலைவர் ஒருவரையும், 5 ஆண்டுகள் பதவிக்காலம் கொண்ட தலைமைச் செயல் அதிகாரி ஒருவரையும் நியமிப்பது.
- பெரிய அளவில் தரப்பட்டிருக்கும் கடன்கள் பற்றிய தகவல்கள் அனைத்தையும் உள்ளடக்கிய மையக் களஞ்சியம் ஒன்றை உருவாக்குவது. வாராக்கடன்கள் பற்றிய தகவல்களைப்

பகிர்ந்துகொள்ள IBC (Insolvency and Bankruptcy Code) எனும் அமைப்பை உருவாக்குவது. இவற்றின் மூலம் வங்கிகளின் மூலதனம் சிக்கிக்கொள்வதையும், கடனைத் திரும்பச் செலுத்தாதவர்களுக்கு மீண்டும் கடன் கிடைப்பதையும் தவிர்க்கமுடியும்.

- 2.11 இலட்சம் கோடி மதிப்பிலான மிகப்பெரிய மறுமூலதனத் திட்டத்தை அரசாங்கம் பொதுத்துறை வங்கிகளுக்காக அண்மையில் அறிவித்துள்ளது. வங்கிகளின் செயல்பாடுகள் சிறப்படைய இது பெருமளவில் உதவும். பொதுத்துறை வங்கிகளுக்கு இடையில் போட்டியை உருவாக்கவும், ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாயம் அளிக்கவும் இது துணை செய்யும்.

## அடுத்த தலைமுறை வங்கிச்சேவைகளுக்கு வங்கிகள் தயார் நிலையில் இருக்கின்றனவா?

2025ஆம் ஆண்டில் இந்தியா உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், பின்வரும் 4டிக்கள் முக்கியமானவை.

- வளர்ச்சி (Development) : இது அரசின் நிதி உள்ளடக்கல் திட்டம், பிற பிரிவுகள், கட்டுமான சீர்திருத்தங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியது ஆகும்.
- கட்டுப்பாடுகளைத்தளர்த்துதல் (Deregulation) : சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்.
- மக்கள் தொகை மாதிரிகள் (Demographics) : சந்தையில் தற்போது இளைஞர்களும், மின்னணுக் கருவிகள் மூலம் பரிவர்த்தனைகள் செய்வோரும் அதிகரித்துள்ளனர்.
- இடையூறுகள் (Disruption) : வங்கிகள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், நிதிவெளிகள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பது இதில் அடங்கும்.

இந்த 4D க்களின் அடிப்படையில் பின்வரும் 7 போக்குகள் அடுத்த தலைமுறை வங்கி இயலை வரையறுக்கும்.

### 1. வங்கிப்பணிகளை தொழில்நுட்பம் வரையறை செய்யும்:

வங்கி இயலின் எல்லைகளுக்கு இனி தொழில்நுட்பம் வழிகாட்டும். மிக அதிக அளவிலான தரவுகள், Cloud Computing, சீர்மிகு கைபேசிகள், புதுமையான பிற கண்டுபிடிப்புகள் ஆகியவை இதில் அடங்கும். வங்கிகளுடன் இடைவினை புரிய பலவிதமான வழிகள் இருப்பதைவிடவும், ஒரே விதமான வழிமுறை இருப்பது வாடிக்கையாளர்கள் வங்கிகளுடன் வினையாற்றும் விதத்தை மறு வரையறை செய்யும். உதாரணமாக, வாடிக்கையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் தரப்படும் சலுகைகள் பற்றி கைபேசிக்குத் தகவல் தெரிவிக்கவும், கானொளிக்காட்சி மூலம் வீடுகளுக்கு தகவல் கூறவும், முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தவும் வங்கிகளுக்கு எதிர்காலத்தில் இத்தகைய நவீன தொழில்நுட்பங்கள் உதவிபுரியும்.

கைபேசிகள் மூலம் வங்கி சேவை என்பதுதன் வருங்கால வளர்ச்சி என்பதை சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. இந்தியாவில் மிக அதிகமான அளவில் கைபேசிக்கருவிகள் இருப்பதால் இந்தச்சேவையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளும் ஏராளமாக இருக்கின்றன. இந்தியாவில் 946 மில்லியன் கைபேசி பயன்படுத்துவோர் உள்ளனர். இந்தவகையில் ஜன்தன் - ஆதார் - கைபேசி மூன்றின் கூட்டும் வங்கி செயல்படும் விதத்தை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவை.

### 2. முன்னோக்கி செல்வதற்கான முக்கிய வழிகள்:

வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான, மலிவான சேவைகளை அளிக்கும் விதத்திலும், போட்டியை அதிகரிக்கும் விதத்திலும் புதுமைகளைப்புகுத்த வங்கிகள் கவனம் செலுத்தவேண்டும். வாடிக்கையாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவது, மோசடிகளை சோதித்து அறிவது, பணம் வழங்கும் வழிமுறைகள், கணக்கு விவரங்கள், உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள் எனும் நடைமுறை போன்றவற்றை தற்போது தொழில்நுட்பச் சேவைகளை வழங்கிவரும் வெளியாரிடம் ஒப்படைப்பதும் முன்னோக்கி செல்வதற்கான முக்கியமான வழிகளாகும்.

### 3. பணமில்லாப் பரிவர்த்தனையும், வங்கிக்கிளைகள் இல்லா பரிவர்த்தனையும்:

பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குப்பிறகு ரொக்கமில்லாப் பரிவர்த்தனைக்கு ஊக்கம்

தரப்பட்டது. ரொக்கப்புழக்கம் இல்லாத வங்கிச்செயல்பாடுகளின் காரணமாக எளிதாக தொழில் செய்வது என்பது புரட்சிகரமான மாற்றத்தைக்கண்டுள்ளது. இணைய இணைப்புக்களின் பெருக்கம் (400மில்லியன் பேர் பயன்படுத்துகின்றனர் - டிசம்பர் 2015 கணக்குப்படி), சீர்மிகு கைபேசிகள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 2014இல் ஒரே ஆண்டில் இரண்டு மடங்கு அதிகரித்து 80 மில்லியன் ஆனது ஆகியவற்றை கணக்கில் கொள்ளவேண்டும்.. மார்கன் ஸ்டான்லி தெரிவித்திருக்கும் கணக்கின்படி, 2013இல் 11 பில்லியன் டாலர் ஆக இருந்த இந்திய இணையச்சந்தை 2020இல் 137 பில்லியன் டாலராக உயரும் வாய்ப்பிருக்கிறது. இது மிக பெரிய வாய்ப்பு என்பதை மறுக்கமுடியாது.

வங்கித்துறை கட்டடத்துக்குள் இருந்துகொண்டு 9 மணி முதல் 5 மணி வரை செயல்படும் நிலை மாறி உலகம் முழுவதும் எந்நேரமும் செயல்படும் 24x7 துறையாக விரைவில் மாற்றம் பெறும். கிளைகள் இல்லாத வங்கி என்பது வருவாய்ப்பெருக்கத்திற்கும், செலவினம் குறைவதற்கும் வழி செய்யும். வளர்ந்த நாடுகளில் வங்கிக்கிளைகள் மூடப்பட்டுவருகின்றன. பாங்க் ஆப் அமெரிக்கா கடந்த 5 ஆண்டுகளில் 1000 கிளைகளை மூடியுள்ளது. வாடிக்கையாளர்களை கைப்பற்றுவதற்காகும் செலவையும் நேரத்தையும் வங்கிகளுக்கு 40% வரை ஆதார் தரவுகள் மிச்சப்படுத்தும்.

### 4. ATM பயன்பாட்டில் புதுமைகள்:

இந்தியாவில் வங்கிகளை நடத்தும்போது, ஒரு வாடிக்கையாளருக்கு ஒருகிளையில் ஆகும் செலவு ரூ.45/-, கைபேசி வங்கிப்பரிவர்த்தனைக்கு ரூ.25/-, ATMஇல் ஒரு வாடிக்கையாளருக்கு ரூ.18/-, இணைய வழிப் பரிமாற்றத்திற்கு ரூ. 4/- என்று உலக வங்கி கணக்கிட்டுள்ளது. இந்தியாவில் ATM களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. ஒவ்வொரு ஒரு மில்லியன் பேருக்கும் சீனாவில் 37 ATMகளும், மலேசியாவில் 52 ATMகளும் உள்ளன. சூரிய சக்தியில் இயங்கக்கூடிய ATMகள் பாதி செலவை வங்கிகளுக்கு மிச்சப்படுத்தும். இவற்றை மின் வசதிப் பற்றாக்குறை உள்ள கிராமங்களிலும், மின்வசதி இல்லாத கிராமங்களிலும் அமைக்கலாம்.

### 5. உள்கட்டமைப்புக்கு நிதி வழங்குதல்:

உலக உள்கட்டமைப்புச் சந்தையில் இந்தியாவின் பங்கு 2015இல் 9 முதல் 10% உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றிற்கான நீண்ட கால முதலீடுகளை வங்கிகள் செய்யும். உள்கட்டமைப்புக் கடன் நிதியம், பசுமை வங்கி போன்ற புதிய மாதிரிகளும் எதிர்காலத்தில் உருவாக இருக்கின்றன.

### 6. MSMEகளுக்கு உதவிட புதிய மாதிரிகள்:

இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் 8% பங்களிப்பு செய்கின்றன. MSMEகளுக்கு தேவைப்படும் ஒட்டுமொத்தக் கடன் அளவு 650 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்று சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI) மதிப்பிட்டுள்ளது. சிறுதொழில்களுக்கு குழுமங்களின் அடிப்படையில் நிதி உதவி, தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு மானியத்துடன் கூடிய நிதிஉதவி, முத்ராவங்கி, கடன் காப்புறுதித் திட்டங்கள், தொழில் தொடங்க வசதிகள் போன்றவை வரும் காலங்களில் முக்கியமான பங்களிப்புகளைச் செய்ய இருக்கின்றன.

### 7. போட்டியும், பலம் பெறுதலும்:

புதிய யுகத்திற்கேற்ற சிறப்பு வகை வங்கிகள் இந்தியாவில் தோன்றவிருக்கின்றன. புதுமைகளைக் கொணருதல், போட்டியிட்டு தொழிலில் நிலைத்திருத்தல் ஆகியவற்றிற்கான முனைப்பு ஆற்றல் மிக்க ஒருங்கிணைப்பிற்கு வழி ஏற்படுத்தும். அதே கணக்கு எண்ணுடன் வேறு வங்கிகளுக்கு மாறிச்செல்லும் வசதி, பெருந்தரவுகளைச் சிறப்புற ஆராய்தல், கடன்கள் வழங்குவதற்கு முந்தைய சரிபார்ப்பு போன்றவை இன்னும் 10-15 ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்துவிடும்.

### முடிவுரை:

இத்தகைய மாற்றங்களை நோக்கி திறம்பட விரைவில் நகர்ந்து செல்லும் தனியார், பொதுத்துறை வங்கிகள் திறமிக்க ஆதாயங்களைப்பெறும். மாற்றங்களை எதிர்பார்த்து அவற்றிற்கேற்ப தகவமைத்துக்கொள்ளும் இந்திய வங்கிகள் மட்டுமே உலகளாவிய வங்கிகளின் பட்டியலில் இடம் பெற முடியும். அத்தகைய வங்கிகள் மட்டுமே அடுத்த 5 ஆண்டுகளில் பொருளாதாரத்தில் உச்சநிலையில் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியப்பொருளாதாரம் நான்காம் இடத்தைப் பெறுவதற்கு உதவ முடியும்.

- **விவேக்குமார்**, Yes Bank குழு செயல் துணைத் தலைவர், மூத்த பொருளியலாளர்.

சங்கெட் டாண்டன், Yes Bank உதவிதுணைத் தலைவர்-பொருளாதாரப்பிரிவு.

**சுபதாராவ்**, Yes Bank குழுத்தலைவர், தலைமைப் பொருளியலாளர்.

●

# வாராக்கடன்கள்: சவால்களும் முன் நோக்கிய பாதையும்

- தீபக் நரங்

கூடுதலாக நிதி வைத்திருப்போரிடம் இருந்து ரொக்கத்தை முதலீடாகப்பெற்று, முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அந்த ரொக்கத்தைக் கடனாக அளித்து, பொருளாதாரத்தில் ரொக்கம் சுழல்வதற்குக் காரணமாக இருப்பதால் வங்கிகளின் நிதி வளர்ச்சிக்கான இயந்திரமாகத் திகழ்கின்றது. பொருளாதாரம் பெருகுவதற்கான விளைவுகளை இது ஏற்படுத்துகிறது. கடன் பெறுவதால் உற்பத்தி ஆதாரங்களின் தேவை உருவாக்கப்படுவதுடன் சரக்குகள் மற்றும் சேவைகள் விநியோகிப்பவர்களின் வருவாய் அளவு அதிகரிக்கிறது. ஒருவர் செய்யும் செலவு என்பது மற்றொருவருக்கு வருவாய் ஆகும். இது உயர்வான ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வழிவகுப்பதுடன் உற்பத்தி சார்ந்த விரைவான வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

கடனளிப்பதில் சுணக்கம் ஏற்படும்போது எதிர்விளைவுகளும், வளர்ச்சிக்குறைபாடும் ஏற்படும். கடன் வளர்ச்சி முடங்கிப்போனதற்கு வங்கிகளின் இருப்புப்பொறுப்புக் கணக்கில் வாராக்கடன்கள் வேகமாக வளர்ந்து வருவது ஒரு முக்கிய காரணமாகும். வரவேண்டிய கடன் பாக்கியில் சுமார் 72% பங்களிப்பு பொதுத்துறை வங்கிகளுடையதாக உள்ளது. மிகைசெயல்திறன், சிரமத்தில் உள்ள நிறுவனங்களின் இரட்டை இருப்பு மற்றும் பொறுப்புக்கணக்கு பிரச்சினையுடன் அதிகரித்து வரும் பொதுத் துறை வங்கிகளின் வாராக்கடன்களுடன் இணைந்து பொருளாதாரத்தில் முதலீடுகளைத் தடுத்துவருகின்றன.

இந்தியாவில் உள்ள வங்கிகளில் உள்ள ஒட்டுமொத்த வாராக்கடன் 2017 செப்டம்பர் 30 அன்று 8.40 இலட்சம் கோடி ரூபாயாக உள்ளது. இது 2017 ஜூன் 30ஆம் தேதி அன்று இருந்த 8.29 இலட்சம் கோடி ரூபாய் உடன் ஒப்பிடுகையில் 1.31 சதவீதம் கூடுதல் ஆகும். கடந்த 2008ஆம் ஆண்டு முதல் தொடங்கிய வங்கிகளின் விரைவான கடன் வளர்ச்சியில் இருந்து தோன்றியதுதான், 2015 செப்டம்பர் முதல் வாராக்கடன்களின் கடுமையான உயர்வுக்கான தோற்றுவாய். 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பொதுத்துறை வங்கிகளின் மொத்தக் கடன்அளவு ரூ. 18 இலட்சம் கோடியில் இருந்து ரூ. 54 இலட்சம் கோடி ஆக உயர்ந்ததுடன் செப்டம்பர் 2017இல் இது ரூ. 55.01 இலட்சம் கோடியாக ஆனது. அரசுக்குச் சொந்தமான வங்கிகளின் வாராக்கடன் பங்களிப்பு சுமார் 90% ஆக உள்ளது.

கடந்த காலாண்டில் அதாவது 2017ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பொதுத்துறை வங்கிகளின் மோசமான கடன்கள் ரூ.7.33 கோடி என்ற அளவில் முதல் காலாண்டு அளவுக்கே நிலையாக இருந்தது. ஆனால் 17 தனியார் துறை வங்கிகளின் வாராக்கடன் 10.5% அதிகரித்து 1.06 இலட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகளில் இருந்து ரூ. 5 கோடி மற்றும் அதற்கு மேல் கடன் பெறும் தகுதி கொண்டவர்கள் எனப்படும் பெரும் கடன்காரர்களின் பங்கு 56 சதவீதமாக உள்ளது என்ற போதிலும், வாராக்கடனில் அவர்களது பங்கு 86.5 சதவீதமாக உள்ளது. ரூ. 20 கோடி முதல் ரூ. 50 கோடி வரை பாக்கி வைத்திருப்போரது கணக்குகள் (எண்ணிக்கை மற்றும் தொகை) வாராக்கடனில் அதிக அளவில் இருக்கிறது. ரூ. 50 கோடி முதல் ரூ. 100 கோடி வரை பாக்கி வைத்திருப்பவர்கள் அதற்கு அடுத்தபடியாக உள்ளனர். கடன் பெற்றவர்களில் 15.2 சதவீதம் பேர் அதிகக்கடன் பெற்ற முதல் 100 இடங்களில் உள்ளனர். ஆயினும், வாராக்கடன்களின் மொத்த விகிதத்தில் அவர்களின் பங்களிப்பு 25.6 சதவீதமாக உள்ளது.

கடந்த 2017 மார்ச் மாதத்தில் மோசமான கடன்களின் விகிதத்தில் தொழில்துறை சுமார் 23 சதவீதமாக உள்ளது. ஆனால் வேளாண்துறை,

சேவைகள் மற்றும் சில்லறை வர்த்தகத்துறையின் விகிதம் முறையே 6.3%, 7% மற்றும் 2.1% ஆக உள்ளது. இதில் தொழிற்சாலைகளின் வாராக்கடனில் பொதுத்துறை வங்கிகளின் விகிதம் 28.8% ஆக உள்ளது. ஆனால் தனியார் மற்றும் வெளிநாட்டு வங்கிகளின் விகிதம் முறையே 9.3% மற்றும் 7.1% ஆக உள்ளது. அடிப்படை உலோகம் மற்றும் அதன் தயாரிப்புகள், சிமெண்ட் மற்றும் அதன் பொருட்கள், ஜவுளி மற்றும் உள்கட்டமைப்பு உள்ளிட்ட தொழிற்சாலைகள் கடன் அழுத்தத்தில் முதன்மையில் உள்ளன.




**குறிப்பு: அடைப்புக்குறிக்குள் உள்ள எண் ஒட்டுமொத்த தொழில் கடனில் அந்தந்த துணைப்பிரிவுகளின் கடனைக் குறிக்கிறது**

ஆதாரம்: நிதியின் நிலைத்ததன்மை பற்றிய அறிக்கை, ஜூன் 2017.

இந்த நிலைமைக்கான காரணங்களைப் பகுத்தாய்வது அனைவரும் விரும்பத்தக்கதாக இருக்கும் என்பதால் அவை பற்றிய நிலவரங்கள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- அ) ஒருவரது முந்தைய கடன் வரலாற்றின் அடிப்படையில் இருப்பு பொறுப்பு கணக்கு அறிக்கையின் அளவை உயர்த்தும் எதிர்பார்ப்புடன் கடன்தாரர்களுக்கு கடன் அளித்தல்
- ஆ) உலகளாவிய திறன்/தேவை விநியோகநிலை குறித்து கணக்கில் கொள்ளாமல் தேவை இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் தங்களது திறனை அதிகரித்துக் கொள்வதற்காக கடன் வாங்குதல்
- இ) பல்வேறு காரணங்களால் திட்டத்தை நிறைவு செய்வதில் தாமதம்.
- ஈ) திரும்பப்பெற வேண்டியதை மீட்பதில் குறைபாடு.
- உ) நிறுவனங்கள் பங்குகள் அல்லது இதரக் கடன் பத்திரங்களை வெளியிட்டு மூலதனச்சந்தையில் இருந்து மூலதனத்தைப் பெறமுடியாமல் வங்கியில் இருந்து பெற்ற கடனை சமபங்காகப் பயன்படுத்தினார்கள். வங்கிகளும் சமபங்குகளின் தோற்றத்தைப் பார்க்கவில்லை.
- ஊ) கூடுதல் நம்பிக்கை கணிப்புகள் காரணமாக வர்த்தகத்தில் தோல்வி.
- எ) விரிவாக்கம்/நவீனமயமாக்கம் ஆகியவற்றுக்கான நிதி வேறு பணிகளுக்குத் திருப்பிவிடப்படுவது. ஒரு நோக்கத்திற்காக பெறப்பட்ட கடன் நிதி அதற்காகப் பயன்படுத்தப்படுவதில்லை.
- ஏ) வேண்டுமென்றே கடனைத் திருப்பித்தராமல் இருப்பது, நிதியை அபகரித்தல், மோசடி, தவறான கணக்கீடு உள்ளிட்டவை.
- ஐ) கடன் பெற்றவர் போலி நிறுவனங்களின் மூலம் ரொக்கத்தை வேறு இடத்திற்குத் திருப்பியளித்தல், ரொக்கத்தின் இறுதிப்பயன்பாட்டை கண்காணிக்க வங்கிகளிடம் போதிய திறனற்ற தன்மை.
- ஒ) கடன் மதிப்பீட்டுக்குறைபாடு மற்றும் விதிகளை உரிய முறையில் பின்பற்றாமை.
- கடன் வளர்ச்சி சதவீதத்திற்கும், ஒட்டுமொத்த வாராக்கடன் சதவீத்த்திற்குமான தொடர்பு.

| | ஒட்டுமொத்த வாராக்கடன் விகிதம் | கடன் வளர்ச்சி |
|---|---|---|
| 2001-02 | 11 | 23.6 |
| 2002-03 | 9.5 | 14.4 |
| 2003-04 | 7.4 | 16.2 |
| 2004-05 | 5.2 | 31 |
| 2005-06 | 3.5 | 31 |
| 2006-07 | 2.6 | 28.5 |
| 2007-08 | 2.4 | 23.1 |
| 2008-09 | 2.4 | 19.6 |
| 2009-10 | 2.5 | 17.1 |
| 2010-11 | 2.4 | 22.3 |
| 2011-12 | 2.9 | 16.9 |
| 2012-13 | 3.4 | 15.1 |
| 2013-14 | 3.8 | 10.9 |
| 2014-15 | 4.3 | 12.6 |
| 2015-16 | 7.6 | 10.7 |
| 2016-17 | 9.3 | 5.08 |




புதிதாக அளிக்கப்பட்ட ஒரு கடனை வாராக்கடன் என வகைப்படுத்துவதில் சுமார் 3 முதல் 4 ஆண்டுகள் பின்னடைவு உள்ளது. வளர்ச்சிக்கட்டத்தில் உருவாக்கப்படும் வாராக்கடன்கள், அளிக்கப்படும் கடன்களின் உயர்வளர்ச்சியில் மறைந்து போய் விடுகின்றன. கடன் பெற்றவர்களின் எண்ணிக்கையை விட கடன் மதிப்பு வேகமாக அதிகரிப்பதன் காரணமாக, மொத்த வாராக்கடன் விகிதம் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதில்லை.

பற்றிய விழிப்புடன் வங்கிகள் இருப்பதுடன் அவற்றை சரி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்து வரவேண்டும். வாங்கிய கடனை வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாமல் இருப்பவர்களுக்கும், சில திட்டங்களுக்கும் புதிய கடனை மறுக்கவேண்டும். அவர்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் கண்காணிப்புக்கான சுற்றறிக்கையை முழு தீவிரத்துடன் பின்பற்றி, முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை கவனத்தில் கொண்டு, கடனைத் திருப்பி அளிக்காதவர்களை வேண்டுமென்றே கடனைத் திருப்பிச்செலுத்தாதவர்கள் அல்லது ஒத்துழைக்காதவர்கள் என அறிவிக்கவேண்டும். கீழே கொடுக்கப்பட்டுள்ள கம்பெனிகள் சட்டவிதிகள் வங்கியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இதனை எஸ்.எஃப்.ஐ.ஓ.வுக்கு பரிந்துரைக்கவும் தேவையான வழிவகைகளை அளித்துள்ளன. கம்பெனிகள் சட்டம் 2013இன் பிரிவு 447இன்படி கம்பெனி விவகாரம் தொடர்பான குற்றம் அல்லது மோசடி குறித்த புதிய விதிமுறை வருமாறு:-

நிறுவனம் அல்லது அதன் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநரின் விருப்பத்திற்கு பாதிப்பை




மேற்கூறப்பட்ட காரணங்களால் கடனைத் திருப்பிச்செலுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளை சிறப்பான முறையில் கண்காணித்து, சூழ்நிலை

ஏற்படுத்தவேண்டும் அல்லது ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்துடன் எந்தவொரு நபரும் செயல்பட்டிருந்தாலோ அல்லது உண்மைகளைப்




புறக்கணித்தல், மறைத்தல், பதவியைத் தவறாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றால் தவறான ஆதாயம் அல்லது இழப்பு ஏற்பட்டிருந்தாலோ அதனை தீவிர மோசடி விசாரணை அலுவலகம் (எஸ்.எஃப்.ஐ.ஓ) விசாரிக்கலாம். கம்பெனிகள் சட்டம் பிரிவு 447இன் கீழ் இந்தச்செயல் தீவிர மோசடியாக அமைந்துள்ளதா என்பது குறித்து இத்தகைய வழக்குகளை எஸ்.எஃப்.ஐ.ஓ. விசாரிக்க அனுப்பிவைக்கலாம்.

நேர்மையற்ற, உள்நோக்கம் கொண்ட, பொய்யான தகவல்களை கடன்தாரர்கள் அளித்திருந்து, வங்கிகள் அதனை நிரூபிக்கமுடியாத நிலை ஏற்பட்டால், வேண்டுமென்றே தவறு செய்யும் கடன்தாரரின் மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பது கடினமாக இருக்கும்.

இத்தகைய குற்றம் நிரூபிக்கப்படும் நபருக்கு குறைந்தபட்சம் 6 மாதம் முதல் அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரையிலும், குற்றத்தில் தொடர்புடைய அளவு தொகையோ அல்லது அதன் மூன்று மடங்கு தொகையோ அபராதம் விதிக்கப்படும்.

இந்த மோசடியில் பொதுமக்கள் நலன் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்தால் 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் தண்டனை வழங்கப்படும்.

கடன் பெற்றவர்கள் திரும்பச் செலுத்தத் தவறிய கடன்பாக்கியை வங்கிகள் மீட்பதற்கு உதவும் நோக்கத்துடன் ஆர்.டி.டி.பி.எஃப்.ஐ. சட்டம், சர்ஃபாசி சட்டம்2002 மற்றும் சமீபத்தில் கொண்டு வரப்பட்ட திவால் சட்ட விதிகள் 2016 போன்ற குறிப்பிடத்தக்க சட்டங்கள் உள்ளன.

இந்தக் கடனுக்காக வங்கிகளிடம் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களை வங்கிகள் கையகப்படுத்தி அவற்றை நீதிமன்றக் குறுக்கீடு இன்றி ஏலம் விட சர்ஃபாசி சட்டம் அனுமதிக்கிறது. இது ஒரு சக்திவாய்ந்த ஆயுதம் என்பதுடன் உரிய திட்டமிடுதல் மூலமும், உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலமும் இந்தச் சொத்துக்களை விற்பனை செய்யலாம் என்பதில் சந்தேகம் இல்லை. இத்தகைய சொத்துக்களை வங்கிகள் ஏலம் விடாமல் இருப்பதற்கு, கடனைத் திருப்பிச்செலுத்தாதவர்கள் வங்கிகளுடன் சமாதானத்திற்கு வரலாம். பொய்யான குற்றச்சாட்டு/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அத்துமீறி நுழைந்ததாக வழக்கு பதிவு செய்து துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாக்கும் வகையில் வங்கி நிர்வாகமும் சில சமயங்களில் உரிய முறையில் நடவடிக்கை எடுத்துள்ளன. இதன்

காரணமாக பணிகள் சீர்குலைக்கப்பட்டு மீட்பு முயற்சிகள் நஷ்டமடைகின்றன. தீபக் நராங் எதிர் ஹரியானா மாநில அரசு மற்றும் மற்றவர்கள் சம்பந்தப்பட்ட முடிவு செய்யப்பட்ட வழக்கில் 2006 செப்டம்பர் 14ஆம் தேதி பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்ற நீதிபதி, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான அலஹாபாத் வங்கியின் உதவிப் பொதுமேலாளர் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுவதைத் தடுத்து அவரை மீட்டதுடன், கற்பனையான ஆவணங்களின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யவும் விசாரணை நடத்தவும் உத்தரவிட்ட மாஜிஸ்திரேட்டின் உத்தரவையும் மறுத்தார். இந்த வழக்கில் நீதிபதி ஆர்.எஸ். மதன் இவ்வாறு தீர்ப்பு கூறினார்:

மனுதாரர்கள் குற்றவியல் நடைமுறை விதிகள் பிரிவு 197 மட்டுமின்றி, கீழே விவரிக்கப்பட்டிருப்பது போல், 2002சட்டத்தின் பிரிவு 32இன் கீழும் மனுதாரர்களுக்கு பாதுகாப்பு தரும் வழக்காகும் இது:

அலுவல் பணியின் நிமித்தமாக, பொது ஊழியர் ஒருவர் செய்த அல்லது செய்யத்தவறிய செயல் என்பது அவர் அந்தப்பணியை செய்யும் போது கடைபிடிக்கவேண்டிய ஒன்றாக இருக்கும் பட்சத்தில், பணியின் போது அலுவல் சார்ந்து மேற்கொள்ளப்பட்டிருந்தால் மட்டுமே, குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு முன்கூட்டியே ஒப்புதல் பெறப்படவேண்டும் என்ற குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197 பொருந்தும்"

செக்யூரிட்டைசேஷன் சட்டம், 2002 பிரிவு 32 - ஒரு செயலுக்கான பாதுகாப்பு என்பது நல்ல நம்பிக்கையில் எடுக்கப்படவேண்டும். பாதுகாக்கப்பட்ட கடன் அளிப்பவர் அல்லது எந்தவொரு அவரது அதிகாரிகள் அல்லது மேலாளர் பாதுகாப்பான கடன் அளித்தவரின் அல்லது கடன்தாரரின் எந்தவொரு உரிமையையும் இந்தச்சட்டத்தின் கீழ் எடுக்கும் போது அல்லது தவறும் போது வழக்கு எதுவும் தொடர முடியாது, விசாரிக்க முடியாது அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கமுடியாது.

எதிர்மனுதாரர் உரியநேரத்தில் வீட்டில் இல்லை. எனவே, மனுதாரர் மீது நடவடிக்கை எடுக்கும்படிக் கோருவதற்கு இரண்டாவது எதிர்மனுதாரருக்கு எந்த முகாந்திரமும் இல்லை. எனவே தற்போதுள்ள புகாரானது தவறிழைத்தவர் அவரது மகன் மூலம், பழிவாங்கும் நோக்கத்துடன், பொய்யான தகவல்களுடன் அளிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அதில் கூறப்பட்டுள்ளது போல் எதுவும் நடக்கவில்லை. எனவே இந்தப்புகாரானது நீதிமன்ற நடைமுறைகளை அவமதிக்கும் செயல் என்பதால் இது மேலும் தொடர அனுமதிக்கமுடியாது.



வருவாய் ஈட்டாத வங்கி சொத்துக்கள்

பல்வேறு வழக்குகளில் இது தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள தீர்ப்புகள் வங்கியின் அதிகாரிகளுக்கு சாதகமாக அமைந்துள்ள போதிலும், இந்த நடைமுறை, இந்தச் சட்டத்தின் கீழ் மீட்பு முயற்சிகளை மேற்கொள்வதில் தோல்வியையே அளித்துள்ளது.

இந்தச்சட்டத்தின் கீழ் 2015-16ஆம் ஆண்டில் 64,519 சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அல்லது கையகப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் 2017 ஜூன் வரை 33,928 என்ற அளவிலேயே இதன் எண்ணிக்கை உள்ளது. இது இன்னும் அதிகமாக அளவில் இருக்கவேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி இந்தச்சட்டத்தின் கீழ் சொத்தை கையகப்படுத்த விண்ணப்பிக்கும் போது, வங்கி அதனைக் கையகப்படுத்துவதைக் கட்டாயமாகும் வகையில் அரசு சட்டத்திருத்தம் கொண்டுவந்தது. வங்கிகளின் முயற்சியைத் தகர்க்கும் இதர தடைகளை கடன்தாரர்கள் உருவாக்குகின்றனர். கடந்த பல காலமாகவே கடன் தாரர்கள் இதனை மேற்கொண்டு வருகின்றனர்.

கடன் பெற்ற நேர்மையாளர்களின் இக்கட்டான சங்கடங்களை வங்கியினரால் புரிந்து கொள்ளமுடியும்.

லூதியானாவைச் சேர்ந்த தொழிலதிபரான சஞ்சய் லோங்வாலியா என்பவர், லூதியானாவில் உள்ள மற்ற தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் அதே விதமான பொருள்களை தாமும் தயாரித்து வருவதாகக் கூறினார். ஒப்பந்தம் செய்து கொண்ட

விகிதத்தில் அவர் வட்டியை செலுத்தி வந்தபோதிலும், உரிய இடைவெளியில் தனது கடன் தவணையை செலுத்தி வந்தநிலையிலும், வரி உள்ளிட்ட அனைத்தையும் நேர்மையான முறையில் செலுத்திய போதிலும், அவர் பெற்ற கடனுக்கான வட்டியைக் குறைக்கவோ, தனது முந்தைய கடனைஅவர் திருப்பிச் செலுத்தியதற்கான கவுரவத்தை அவருக்கு அளிக்கவோ வங்கிகள் மறுக்கின்றன. கடன்தாரர் கடனாகப் பெற்ற ரொக்கத்தை வேறு பக்கம் திருப்பி, பல்வேறு மறுசீரமைப்புத் திட்டங்களின் கீழ் மீண்டும் உடனடியாகக் கடன் பெற்று, வட்டி விகிதச்சலுகை பெற்று, கடனைத் திருப்பிச்செலுத்துவதிலும் சலுகையைப்பெறுவது குறித்து அவர் தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினார். தனது தயாரிப்புக்களை சந்தைப்படுத்துவதிலும் நேர்மையற்ற கடன்தாரருடன் போட்டியிடுவதுடன் எந்த சலுகையையும் அவரால் பெற முடிவதில்லை. நேர்மையின்மைக்கு சலுகை ஏதேனும் அளிக்கப்படுகிறதா என்று அவர் கேள்வி எழுப்புகிறார். கடன் பெற்ற நேர்மையாளர் அவதிப்பட வேண்டுமா? இந்தத் தருணத்தில்தான் நமது மாண்புமிகு பிரதமரின் வார்த்தை என் சிந்தையில் வந்துபோனது. வேண்டுமென்றே கடனை திருப்பிச் செலுத்தாமல் இருப்பவர்கள் சட்டத்தின் வலிமையை உணர வேண்டிவரும் என ஒரு நேர்காணலில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

திவால் சட்ட விதிகளை 2016 டிசம்பர் 1ஆம் தேதி முதல் அமல்படுத்தப்போவதாக அறிவித்து தற்போதுள்ள அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் மாற்றத்தக்கொண்டுவரக்கூடியவை. சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து மீட்புக்கான ஒரு கடுமையான சட்டத்தை கொண்டு வரும் வகையில் மத்திய அரசு இரண்டு முறை அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தது. திவால் சட்ட விதிகள் என்பது வாராக்கடன் என்ற அரக்கனை அழிப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த பிரம்மாஸ்தரமாக உள்ளது. இதன் செயல்திறன் நியாயமான, சரிசமமான தீர்வைக் காண்பதற்கான பயனாளியின் உறுதி மற்றும் நேர்மையான நோக்கத்தைச் சார்ந்ததாகும். இந்த சட்டத்தின் உண்மையான நோக்கத்தைத் தோற்கடிக்கவேண்டும் என்ற தீய எண்ணம் இருந்தால் அதை அழித்தாகவேண்டிய தேவை உள்ளது.

கடனைத் திருப்பிச் செலுத்தத்தவறி கடன்தொகையை வேறு பக்கம் திருப்பி / தங்கள் கணக்கை வாராக்கடனாக ஆக்கிவிட்டு வேறுபெயரில் அந்த நிறுவனத்தை மீண்டும் வாங்க முயற்சிப்பதை சமீபத்தில் கொண்டு வரப்பட்ட அவசரச்சட்டம் சாத்தியமற்றதாக்கியுள்ளது. அரசின் செயல்பாடு இதில் சுறுசுறுப்புடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன் குறிப்பிடத்தக்கதாகவும் அமைந்து, வாராக்கடன்களை ஒழிப்பதுடன் இந்த முறையைக்கொண்டு யாரும் உள்ளே புகுந்து விளையாடக்கூடாது என்ற தெளிவான நோக்கத்தையும் கொண்டுள்ளது. இதனுடன் கம்பெனிகள் சட்டம் 2013இன் பிரிவு 447 இணைந்து கடனை வேண்டுமென்றே திருப்பிச்செலுத்தாமல் இருப்பவர்களின் செயல்பாட்டினைத் தடுத்துள்ளது. வேண்டுமென்றே கடனை திருப்பிச் செலுத்தாமல் இருப்பதை வேறு சில நாடுகளில் இருப்பது போல் தீவிர குற்றச்செயலாக்கி, அதன் மூலம் கடனை வேண்டுமென்றே கட்டாதவர்களின் நோக்கங்களுக்கு சாவு மணி அடிக்க இந்திய ரிசர்வ் வங்கி முன்வர வேண்டும். வங்கிகளில் இருந்து கடன் பெற்று அதனை திருப்பிச் செலுத்தாமல் இருப்பது தங்களது பிறப்புரிமை எனக்கருதுபவர்களின் செயல்களுக்கு இந்த நடவடிக்கைகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். கடனைத் திருப்பிச் செலுத்தாமல் ஏமாற்றுபவர்களுக்கான கணக்கீட்டு நாள் கடைசியாக வந்துவிட்டது.

நிதிகளின் இறுதிப் பயன்பாட்டை உறுதி செய்து கொள்ள தடயவியல் தணிக்கையை வங்கிகள் நடத்த வேண்டிய தேவை வந்துள்ளது. ஃபிண்டெக் எனப்படும் நிதித்தொழில்நுட்ப நிறுவனங்கள் போல் வங்கிகள் கடன் பெறுபவர் மற்றும் அவரது வர்த்தகம் குறித்து தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தீர்வுகளையும், தகவல் மதிப்பீடுகளைப் பயன்படுத்தி உரிய ஆய்வுகளையும் மேற்கொள்ளவேண்டும். கடன் அளிப்பதற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே புலனாய்வு மேற்கொண்டு கடன்பெறுவோர் அதனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவார்களா என்பதைத் தெரிந்துகொள்ளலாம். இதில் அவர்களுக்கு 80 சதவீதத்துக்கு மேல் நம்பிக்கை கிடைக்கவேண்டும். நவி மும்பையைச் சேர்ந்த டி2கே டெக்னாலஜி என்ற நிதித்தொழில்நுட்ப நிறுவனம் இதற்கான மென்பொருள் ஒன்றை உருவாக்கியுள்ளது

என்பதுடன், அதன் முடிவுகள் குறிப்பிடத்தக்க வகையில் உள்ளன என்பதும் இங்கே கருதத்தக்கது. வங்கிகள் தங்களது இளம் பணியாளர்களிடம் உள்ள திறன் பற்றாக்குறையைப் போக்கி அவர்களின் திறனை அதிகரிக்கும் வகையில் பயிற்சி அளிக்க தங்களது மனித வளக்கொள்கைகளை சிறந்த முறையில் மாற்றி அமைக்கவேண்டும்.

அரசும் தனது பங்கிற்கு வங்கி இயக்குநர்கள் வாரியத்தில் நிபுணர்களை நியமிக்கவேண்டும். அவர்களுக்கு இந்தத்துறை குறித்த அறிவாற்றல் இருப்பதுடன் வங்கிச் செயல்பாடுகளில் போதிய அனுபவமும் இருக்கவேண்டும். ஓய்வுபெற்ற வங்கிப் பணிகளில் அப்பழுக்கற்ற பெயர் பெற்ற மேலாண் இயக்குநர் மற்றும் செயல் இயக்குநர் போன்ற நிர்வாகிகளை வங்கிகளின் இயக்குநர் குழுவுக்குத் தேர்வு செய்வது முறையில் சிறந்ததாக இருக்கும். வாராக்கடன் மீட்புகளை விரைவுபடுத்த அரசு இன்னும் கூடுதலான கம்பெனி சட்ட தேசியத்தீர்ப்பாயங்களையும் (NCLT), அதிக எண்ணிக்கையிலான கடன் வசூல் தீர்ப்பாயங்களையும் கொண்டிருக்கவேண்டும். தற்போதுள்ள அமர்வுகள் நோக்கத்தை அடைவதற்கு போதுமானதாக இல்லை. பணிச்சுமையை ஈடுகட்டும் வகையில் நீதிபதிகளின் பலம் அதிகரிக்கப்படவேண்டும். தனிநபர்கள், உரிமையாளர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் திவாலானதாக அறிவிப்பு வரும்போது இந்தத்தேவை என்பது உறுதியாக உணரப்படும்.

திவால் சட்ட விதிகள் நடைமுறைக்கு வந்த பின்னர் உருவாகும் நிலைமை, கடன் வாங்கும் கலாச்சாரம் மற்றும் எதிர்காலத்தில் வங்கிகள் கடன் அளிப்பதை மேலும் பாதுகாப்பானதாக்கும். வங்கிகளுக்கு நிம்மதி எண்ணம் கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த அதிரடி மாற்றத்திற்காக அரசுக்குப் பாராட்டுக்கள். கடன் பெறுவோரின் எண்ணத்தில் நிச்சயம் மாற்றம் ஏற்படும்.

---

- **பேராசிரியர் தீபக் நரங்,** யுனைடெட் வங்கியின் முன்னாள் செயல் இயக்குநர். புனேயில் உள்ள வங்கி மேலாண்மைக்கான தேசியநிறுவனத்தின் பேராசிரியர். மேலே தெரிவிக்கப்பட்டிருப்பவை அவரது தனிப்பட்ட கருத்துகள். ●

இந்திய அரசின் வெளியீட்டுப்பிரிவு இந்தியிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியாக பாரத் 2018 (இந்தி), INDIA 2018 (ஆங்கிலம்) ஆகிய ஆண்டு நிகழ்வுகள் பற்றிய சான்றாதாரங்களுடன் கூடிய இரண்டு புத்தகங்களை வெளியிடுகிறது. அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகள் பற்றிய முக்கியமான பல தகவல்களை உள்ளடக்கிய ஆண்டுத்தொகுப்பு நூல்கள் இவை.

சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட இது போன்ற புத்தகங்கள் ஒரு இலட்சம் பிரதிகளுக்கும் மேல் விற்பனையாயின. INDIA 2018 புத்தகம் கல்வியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், இளைஞர்கள், நூலகங்களுக்கு ஏற்றது. துல்லியமான, நம்பகமான தகவல்களைக் கொண்டிருக்கும் இந்த நூலினை நிறுவனங்களும் பொதுமக்களும் கூட பயன்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு வகைப்பட்ட போட்டித்தேர்வுகளை எதிர்கொள்வதற்கும் இந்த நூல் உதவிடும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.
மேலதிக விவரங்களுக்கு:
**வணிக மேலாளர்**
வெளியீட்டுப்பிரிவு
'A' WING இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை 600090
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.
தொலைபேசி எண்: 044-24917673.
மின்னஞ்சல் முகவரி: bsme.chennai@yahoo.in

**INDIA 2018**

**Annual Reference Book**

# வங்கி மறுமூலதனம்

- அசுதோஷ் குமார்

கடந்த சில ஆண்டுகளாக வாராக்கடன் அதிகரித்ததன் காரணமாக கடும் அவதிகளை சந்தித்து வரும் பொதுத்துறை வங்கிகளின் ஆரோக்கியம் குறித்து இந்த ஆண்டு அக்டோபர் 24ம் தேதி மத்திய அரசு முக்கியமானதொரு முடிவை மேற்கொண்டது. பொதுத்துறை வங்கிகளின் இருப்பு மற்றும் பொறுப்பு அறிக்கையில் கூறப்பட்ட வாராக் கடன் சுமை, அவற்றின் கடன் அளிக்கும் திறனை மோசமாக பாதிக்கச் செய்து, அதன் காரணமாக தனியார் முதலீடுகள் மற்றும் தனியார் துறையின் மொத்த தனியார் முதலீடு உருவாக்கம் கடுமையாக பாதிக்கப்பட்டது. பொதுத் துறை வங்கிகளில் உள்ள வாராக்கடன் 2017 ஜூனில் அதிகபட்சமாக 7.33 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது, இது 2015 மார்ச் மாதத்தில் 2.73 இலட்சம் கோடி ரூபாயாக இருந்தது. இரண்டு ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகளின் நடைமுறையில் மோசமான கடன்கள் மூன்று மடங்கு அதிகரித்திருப்பதையே இது காட்டுகிறது. உள்நாட்டு வங்கிகளின் கடன்களில் 10 சதவீதம் வாராக்கடனாக உள்ளது என்ற தகவல் வங்கிகளின் அமைப்பு முறை சந்திக்கும் சவாலை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

கடந்த அக்டோபர் 24ம் தேதி உள்நாட்டு வங்கி செயல்முறைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ரூ. 2,11,000த்திற்கான மறுமூலதனத் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளித்து அதனை சந்தைக் கடன், பட்ஜெட் ஆதரவு மற்றும் மிக முக்கியமாக - வங்கி மறுமூலதன பத்திரங்கள் அறிமுகம் போன்றவற்றின் கலவை மூலமாக பெறவும் முடிவு செய்தது. இந்தத் திட்டத்தை அறிவித்த நிதி அமைச்சர் அருண் ஜேட்லி, "வங்கிகளை பலப்படுத்துவது மூலம் அதிக வேலைகள், அதிக வளர்ச்சி மற்றும் அதிக முதலீடு கிடைக்கும்" என்றார். பட்ஜெட் ஆதரவு மூலம் ரூ. 18,000 கோடி, சமபங்குகள் மூலம் ரூ. 58,000 கோடி மற்றும் வங்கி மறுமூலதன பத்திரங்கள் விநியோகிப்பதன் மூலம் ரூ. 1,35,000 கோடி திரட்டி அதன் மூலம் வங்கி மறுமூலதனத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பத்திரங்கள் எவ்வாறு வங்கி செயல்முறைக்குப் பயன் அளிக்கப்போகின்றன என்பதைப் பார்க்கலாம். பத்திரங்கள் விநியோகத்தின் பரந்த வரையறைகள் குறித்து நிதி அமைச்சகத்தில் உள்ள நிதிச் சேவைகள் துறை பொருளாதார விவகாரங்கள் துறையுடன் ஒருங்கிணைந்து இறுதி செய்யும். பத்திர விநியோகம் மூலம் எந்த வங்கி பெற இருக்கும் மூலதன அளவு எவ்வளவு என்பது குறித்த சரியான விவரங்கள் அடங்கிய அறிவிப்பு மிகவும் முக்கியமாகும். அறிமுகப்படுத்தப்படும் போது, இந்த பத்திரங்கள் முதலாவதாக இருக்கும் எனக் கூறப்பட்டது. அடுத்த சில மாதங்களிலேயே முழுமையான ரூ. 1,35,000 கோடி வங்கிகளின் செயல்முறையில் ஈடுபடுத்தப்படும் என்பது இதன் பொருள்.

இந்த மறுமூலதனப் பத்திரங்கள் எவ்வாறு செயல்படும் என்பதையும் அதனால் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்களையும் இப்போது பார்க்கலாம். இந்தப் பத்திரங்களை அரசு வெளியிடுவதற்கும் அவற்றை வங்கிகள் நேரடியாக விற்பனை செய்வதற்கு அனைத்து சாத்தியக்கூறுகளும் உள்ளன. இவ்வாறு செய்வதால், ரொக்கமானது வெளியே செல்லாமல், வெறும் கணக்கீட்டுப் பதிவாக மட்டும் இருக்கும். ரொக்கம் கை மாறாமல் இருப்பது கூடுதல் நிதிச்சுமையால் அரசு பாதிக்கப்படாமல் தடுக்கும்.

இந்த பத்திரங்களை கடன் அளிப்போர் இரண்டாம் சந்தையில் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கிறதா இல்லையா என்பதை பார்க்க வேண்டியுள்ளது. இந்தப் பத்திர விநியோகத்தின் வரையறைகள் நிதி அமைச்சகத்தால் தற்போது உருவாக்கப்பட்டு வருகிறது என்பதால், நுணுக்கமான விவரங்களைப் புரிந்துகொள்ள அறிவிப்புக்காக காத்திருக்க வேண்டும். எனினும் இது வங்கிகளின் மூலதன அடித்தளத்தை விரிவுபடுத்தும் என்பதால் இரண்டு சூழல்களிலும் வங்கிகளுக்கு பயன் அளிப்பதாக இருக்கும் என்று வாதிடப்படுகிறது. மேலும் இந்தப் பத்திரங்களை இரண்டாம் சந்தையில் விற்பனை செய்வதற்கு அரசு ஒப்புதல் அளித்தால்

அதன் மூலம் வங்கிகள் அதிக ரொக்கத்தை ஈட்டவும், தங்களது கடன் புத்தகத்தை அதிகரித்துக் கொள்ளவும் உதவும். மறுபக்கம் இந்தப் பத்திரங்களை இரண்டாம் சந்தையில் மறு விற்பனை செய்வதற்கு வங்கிகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்காவிடில், அது வட்டி வருவாயை ஈட்டித் தரும் முதலீடுகளாக இருக்கும். இரண்டில் எதுவாக இருந்தாலும், மறுமூலதனப் பத்திரங்களை வெளியிடுவது வங்கிச் செயல்முறைக்கு பயனளிப்பதாக இருக்கும்.

ரொக்க மதிப்பிழப்பு நடவடிக்கைக்கு பின்னர் வங்கிகளுக்கு வந்துள்ள முதலீடுகளை வைத்துப் பார்க்கும் போது, இந்தப் பத்திரங்களை வெளியிடுவது சரியான திசையில் ஒரு நடவடிக்கையாகும். வங்கிகள் போதுமான அளவு மூலதனத்திற்கு ரொக்கம் அளிப்பதில்லை. ரொக்க மதிப்பிழப்பு செய்யப்பட்ட 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்களில் 90% வங்கிகளுக்குள் வந்துவிட்டதாக இந்திய ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

இந்தப் பத்திரங்கள் வெளியிடப்படுவதை திவால் சட்ட விதிகள் கண்ணோட்டத்தின் மூலமாகவும் கணிக்கலாம். கடந்த ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த விதி, தற்போது சுமார் 300 கணக்குகளுக்கு தீர்வு காண பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 12 கணக்குகள், ரூ. 2.25 இலட்சம் கோடி மதிப்பிலான பெரிய அளவு வாராக்கடன் ஆகும். இவை கடந்த ஜூன் மாதம் இந்திய ரிசர்வ் வங்கியால் தேசிய கம்பெனிகள் சட்ட நடுவர் மன்றத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. மேலும் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் உள்ள 29 நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கும் தீர்வு காணப்படுவதில் ஒரு முடிவு எட்டப்பட்டால் அந்த நிறுவனங்களைக் கொண்டு இன்னொரு பட்டியல் இந்த மாத இறுதியில் தேசிய கம்பெனிகள் சட்ட நடுவர் மன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட உள்ளது. பல்வேறு நிறுவன கடன்தாரர்கள் தீர்வு காண முன்வரும் நிலையில் அதற்கான நஷ்டத்தை (இந்த நஷ்டம் ஹேர்கட் என வங்கிகள் மொழியில் கூறப்படுகிறது) வங்கிகளே ஏற்க வேண்டி இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. அதிக அளவு வாராக்கடன் உள்ள கணக்குகள் சிலவற்றில் 60% வரையிலான நஷ்டத்தை வங்கிகளே ஏற்க வேண்டி இருக்கும் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

அதிக அளவு வாராக்கடன் உள்ள 50 கணக்குகளில் 60% அல்லது ரூ. 2,40,000 லட்சம் கோடி அளவுக்கு நஷ்டத்தை (ஹேர்கட்) வங்கிகளே ஏற்க வேண்டி இருக்கும் என கிரிசில் தர அமைப்பு கடந்த ஜூலையில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க துறைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இந்த நிறுவனங்கள் உலோகத் துறையில் 30%, கட்டுமானத் துறை 25% மற்றும் மின்சாரத்துறை 15% ஆகவும் உள்ளன. இந்த ஆண்டு மார்ச் 30ஆம் தேதிப்படி இந்தத் துறைகள் பொருளாதாரத்தில் உள்ள மொத்த வாராக்கடனில் சுமார் பாதி அளவுக்கு உள்ளன.

“4 இலட்சம் கோடி அளவுக்கு கடன் வைத்துள்ள 50 பெரிய சொத்துக்களில் 60% அல்லது 2.4 இலட்சம் கோடி அளவுக்கு ஹேர்கட் என்னும் நஷ்டத்தை வங்கிகள் ஏற்க வேண்டி இருக்கும்” என்று அந்த தரப்படுத்தும் முகமை கூறியுள்ளது.

இந்த நஷ்டத்தை நான்கு பிரிவுகளாகவும் அந்த முகமை வகைப்படுத்தி உள்ளது. இந்த வகைகள் ஆழமானவை (75 சதவீதத்துக்கும் அதிகம்), தீவிரமானவை (5075 சதவீதத்துக்கும் அதிகம்), நடுத்தரம் (2550 சதவீதத்துக்கும் அதிகம்) மற்றும் குறைந்தபட்சம் (25 சதவீதத்துக்கும் குறைவானது) ஆகும். 25% கடன்களுக்கு குறைவான அல்லது நடுத்தரமான அளவு ஹேர்கட்கள் தேவைப்படலாம் என்றும் எஞ்சியவைக்கு தீவிரமான சுமார் 40% ஆழமான ஹேர்கட்கள் தேவைப்படலாம்.

துறைகளைப் பொறுத்தவரையில் மின்சாரத் துறைக்கு நடுத்தரமான ஹேர்கட்களும், உலோகம் மற்றும் கட்டுமானத்துறைகளுக்கு தீவிரமான ஹேர்கட்களும் தேவைப்படலாம் என்றும் அந்த தரப்படுத்தும் முகமை கூறியுள்ளது. ஆழமான ஹேர்கட் தேவைப்படும் பெரும்பாலான கடன்கள் நீடிக்காத வர்த்தகங்களைக் கொண்ட நிறுவனங்களுடையது என்பதால் கடனை மீட்க அவற்றை விற்பனை செய்வது தேவை எனகிறது கிரிசல். நடுத்தரமான அல்லது தீவிரமான ஹேர்கட்கள் தேவைப்படும் நிறுவனங்கள் மூலதன செலவினங்களுக்காக கடன் பெற்றுள்ளன. தேவைக் குறைவு அல்லது திட்டத்திற்கு வரன்முறை விவகாரங்களில் சிக்கி காலம் மற்றும் செலவினம் அதிகரித்த நிறுவனங்கள் சாத்தியமற்றவை ஆகியுள்ளன.

மேலும், குறைந்தபட்ச ஹேர்கட் தேவைப்படும் நிறுவனங்கள் தற்கால பின்னடைவைச் சந்திக்கின்றன என்பதால் காலப்போக்கில் அவற்றை சரிசெய்து

கொள்ள முடியும் என்றும் கிரிசில் கூறியுள்ளது. “பொருளாதார நலனைக் கருத்தில் கொண்டு அந்த நிறுவனத்தை ஒதுக்கித் தள்ளுவதற்குப் பதில் கசப்பான நடவடிக்கை எடுப்பது உகந்தது” என்கிறது தரப்படுத்தும் முகமை.

திவால் முடிவு எடுக்கப்படுவது மற்றும் பேசில் 3 அடிப்படையில் மூலதன விதிகளை எதிர்கொள்ளும் போது ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்ய தேவைப்படும் மூலதனத்தை அளிப்பது பொதுத்துறை வங்கிகளின் முதன்மைப் பங்குதாரராக திகழும் அரசின் முதன்மை பொறுப்பு ஆகும். இந்த இடத்தில் மறுமூலதன பத்திரங்கள் பொருத்தமானவை என்பதால் அது அவசியமாகிறது. எனினும் வெளியிடப்படும் பத்திரங்களின் அளவு, விநியோகிப்பவர், சந்தாதாரர், டிக்கெட் அளவு மற்றும் கூப்பன் விலை உள்ளிட்ட விவரங்களை அரசு வெளியிட்டால் மட்டுமே ஒரு தெளிவு ஏற்படும்.

எனினும் இந்தப் பத்திரங்கள் விநியோகம் பொருளாதாரத்தில் குறிப்பாக நிதிப் பற்றாக்குறையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது சுவாரஸ்யமானது. இந்தப் பத்திரங்களின் ஆண்டு வட்டிச் செலவு ரூ. 8,000 கோடி முதல் ரூ. 9,000 கோடியாக இருக்கும் என் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பத்திர விநியோகம் பணவீக்கத்தை அதிகரிக்காது என்றும் நிதிப்பற்றாக்குறையை மேலும் பரவச்செய்யாது என்றும் பொருளாதார ஆலோசகர் அர்விந்த் சுப்பிரமணியம் கூறியுள்ளார். எனினும் இது நிதிப்பற்றாக்குறையை பரவலாக்குமா இல்லையா என்பது கணக்கீட்டு முறையை சார்ந்ததாகும்.

மறுமூலதனப்பத்திரங்கள் வெளியீடு குறித்த அறிவிப்பு வெளியான மறுநாள் தில்லி பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய பொருளாதார ஆலோசகர் அர்விந்த் சுப்பிரமணியம், ரூ. 1.35 இலட்சம் கோடிக்கு மறுமூலதனப்பத்திரங்கள் வெளியிட்டு அதற்கு ரூ. 8000 முதல் ரூ. 9000 கோடி வரை வட்டி கொடுப்பதால் பொருளாதார நடவடிக்கைகள் அதிகரித்து சொத்துக்கள் உருவாக்கப்படும் என்பதால் பணவீக்கம் உயராது அல்லது நிதிப்பற்றாக்குறை விரிவடையாது என்றும் கூறினார். அவர் தனது உரையில், மேலும் இந்தியக் கணக்கீட்டு முறையில் மறுமூலதனப்பத்திரங்கள் கடனை அதிகரிக்கச் செய்யும் என்பதால் நிதிப் பற்றாக்குறையை ஏற்படுத்தும் என்றாலும், ஐ.எம். எஃப். முறையில் கணக்கிடப்பட்டால் அவ்வாறு ஏற்படாது என்றார்.

இதனிடையே இந்தப்பத்திர விநியோகம் பல்வேறு வங்கித்துறை சீர்திருத்தங்களுடன் வரவேண்டும். இது குறித்து சுட்டிக்காட்டியுள்ள அரசு இதில் உறுதியுடன் இருப்பதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. நவம்பர் 12ஆம் தேதி குருக்கிராமில் நடைபெற்ற பொதுத் துறை வங்கிகள் மந்தனில் பேசிய நிதிச் சேவைகள் துறை செயலர் ராஜீவ் குமாரும், மூலதன விரிவாக்கம் என்பது நம்பகத்தன்மையுடன் இருக்கவேண்டும் எனக் கூறியுள்ளார். “ஒவ்வொன்றும் வங்கித்துறை சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட்டது, இது குறித்து ஒவ்வொரு இயக்குநர் குழுவும் குறுகிய காலத்திற்குள் பரிசீலித்து என்ன வகையான வர்த்தகம் மற்றும் எவ்வாறு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்து பரிசீலிக்க வேண்டும். வரப்போவது எளிதாக பெறப்பட்ட ரொக்கம் இல்லை என்பது மிகவும் முக்கியமானது. இதன் தொடர்ச்சியாக ஏராளமான சீர்திருத்தங்கள் தேவை” என்று குமார் தெரிவித்தார். ஒருங்கிணைப்புக்கான ஒரு தெளிவான திட்டத்துடன் ஒரு நிலைப்பாட்டை இயக்குநர் குழு எடுப்பதும் வங்கிச் சீர்திருத்தங்களில் அடங்கும்.

குமார் கருத்தின்படி மறுமூலதனம் தானாக வராது. அதற்கு முன்னதாக முழுமையான சீர்திருத்தங்களும் வரவேண்டும். பத்திரங்கள் குறித்து அவர் கூறுகையில் அதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் நடப்பு ஆண்டிலேயே இருக்கும் என்றார்.

இதனிடையே, மறு மூலதன நடவடிக்கைக்கு இந்திய நிறுவனங்கள் ஆதரவு தெரிவித்துள்ளன. பட்ஜெட்டுக்கு முந்தைய தனது கோரிக்கைகளை நிதி அமைச்சர் அருண் ஜேட்லியிடம் அளித்துள்ள இந்தியத் தொழில் கூட்டமைப்பு வங்கித்துறையை பலப்படுத்துவதற்கான யோசனைகளைத் தெரிவித்துள்ளது. “மறுமூலதனப்பத்திரங்களை மறுவிநியோகம் செய்ய வங்கிகள் அனுமதிக்கப்படலாம் என்றும் அவற்றை நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பொது மக்களும் கூட வாங்கலாம்” என இந்திய தொழில் கூட்டமைப்பு கூறியுள்ளது.

- **அசுதோஷ் குமார்**, BTVI செய்தித் தொலைக்காட்சியில் உதவி ஆசிரியர்.

•

# திவால் பிரச்சினைக்குத் தீர்வு - புதிய சகாப்தத்தில் நுழையும் வணிகம்

- இந்திவ்ஜால்தாஸ்மனா

உலக வங்கியால் அண்மையில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டுக்கான எளிதாக வணிகம் செய்வதற்கேற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா 30 இடங்கள் முன்னேறி 100ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இதற்கான காரணங்களில் முக்கியமானதாகக் கூறப்படுவது திவால் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் இந்தியா கடைபிடித்துவரும் அற்புதமான அணுகுமுறையாகும். இந்த அளவீட்டில் இந்தியா இன்னும் 103ஆவது இடத்தில் தான் இருக்கிறது என்றாலும், 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பட்டியலில் இருந்த 137ஆவது இடத்துடன் ஒப்பிடும்போது இது குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். அதுமட்டுமின்றி, இந்த விஷயத்தில் இந்தியப் பொருளாதாரம் கடந்த ஆண்டுகளில் எந்தவித முன்னேற்றமுமின்றி ஊர்ந்து கொண்டிருந்தது. உதாரணமாக இந்த விஷயத்தில் கடந்த 2016ஆம் ஆண்டில் 136ஆவது இடத்திலும், 2015ஆம் ஆண்டில் 137 ஆவது இடத்திலும் இந்தியா இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திவால் சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் இந்தியாவில் திவால் நடவடிக்கைக்கான ஒழுங்குமுறை அமைப்பான திவால் மற்றும் திவால் நிலை வாரியத்திடம் புதிய திவால் சட்டத்தை ஒப்படைத்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்த பிறகு தான் இந்த விஷயத்தில் இந்தியாவின் முன்னேற்றம் உணரப்பட்டது. திவால் அறிவிப்பு குறித்த விதிகள் இன்னும் இறுதி செய்யப்படாததால், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர்களை திவாலானவர்களாக அறிவிப்பது தொடர்பான வரையறைகள் இதுவரை அறிவிக்கை செய்யப்படவில்லை. ஒரு தனிநபரோ அல்லது நிறுவனமோ அதன் கடன்காரர்களுக்கு தர வேண்டிய கடனை திரும்பத் தர முடியாத நிலை ஏற்படும் போது அவர்கள் திவாலான நிலை ஏற்படுகிறது. கடன் கொடுத்தவர்களுக்கு தர வேண்டிய கடனை மாற்றியமைப்பதன் மூலம் திவால் நிலையை சரி செய்ய முடியும். ஒருவேளை இந்த முறையில் சிக்கலைத் தீர்க்க முடியவில்லை என்றால் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் உரிமையை மாற்றியமைக்கவோ அல்லது கடனை அடைப்பதற்காக சொத்துக்களை விற்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு திவால் பிரச்சினைக்கு தீர்வு காண சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஒரு தொழிலில் நுழைவதற்கும், அதிலிருந்து வெளியேறுவதற்குமான நன்றாக வரையறுக்கப்பட்ட, கால வரையரையுடன் கூடிய விதிகள் தான் எளிதாக வணிகம் செய்வதற்கான முக்கிய அம்சமாகும்.

இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்புவரை திவால் பிரச்சினையைத் தீர்க்க எடுத்துக்கொள்ளப்பட்ட கால அவகாசம் மிகவும் அதிகமாகும். திவாலானவர்களிடமிருந்து பணத்தை வசூலிப்பது தொடர்பாக ஏராளமான வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதற்குக் காரணம் திவால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்த பல்வேறு சட்டங்களின் எல்லைகள் ஒன்றுடன் ஒன்று குறுக்கிடுவது தான். புதிய சட்டம் இயற்றப்படுவதற்கு முன் ஒப்பந்தங்கள் சட்டம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கடன்பாக்கியை வசூலிப்பதற்கானச் சட்டம், நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் உத்தரவாதமளித்தல் சட்டம், உத்தரவாதங்களை செயலாக்கும் சட்டம் உள்ளிட்ட 12 சட்டங்கள் திவால் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நடைமுறையில் இருந்தன. ஆனால், இந்தச் சட்டங்களின் மூலம் தேவையான தீர்வுகளை ஏற்படுத்தமுடியவில்லை. அதுமட்டுமின்றி, நலிவடைந்த தொழில்நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டமும், 1956ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் விதிகளை இரத்து செய்ததும் கூட திவால் சிக்கலைத் தீர்ப்பதில் எந்த உதவியும் செய்யவில்லை.

தனிநபர் திவால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மாநில நகரங்கள் திவால் சட்டம், மாகாண திவால் சட்டம் ஆகியவை 100 ஆண்டுகளுக்கு முன் முறையே 1909, 1920 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டவை ஆகும். இந்தச் சட்டங்களை இரத்து செய்வதற்கான வசதி புதிய திவால் சட்டத்தின் 243 ஆவது பிரிவில் உள்ளது. ஆனால், அந்தப் பிரிவும், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர்களின் திவால் சட்டப்பிரிவுகளும் இன்னும் அறிவிக்கை

செய்யப்படாததால் இந்தச் சட்டங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன.

நிறுவனங்களின் திவால் நிலை குறித்த பிரச்சினைகளை தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயம் விசாரிக்கிறது. தனிநபர்களின் திவால் நிலை குறித்த சிக்கல்களை கடன் வசூல் தீர்ப்பாயம் கவனித்துக்கொள்கிறது.

நிறுவனங்களின் திவால் நிலை குறித்த பிரச்சினைகளுக்கு குறித்த காலத்திற்குள் தீர்வு காண்பதற்கு புதிய திவால் சட்டம் வகைசெய்கிறது. திரும்பச்செலுத்தத்தவறிய கடன் தொகை ஒரு இலட்சரூபாய்க்கும் அதிகம் என்றால் கடனாளி மீது கடன் கொடுத்தவர் திவால் நடவடிக்கையைத் தொடங்கலாம். இதற்காக அவர் தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயத்தை அணுகலாம்.

புதிய திவால் சட்டம் என்பது முந்தைய தீர்வு முறைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். ஏனெனில், கடன் வாங்கியவர் மீதான திவால் தீர்வு நடவடிக்கையை கடன் கொடுத்தவர் தொடங்க இந்தச்சட்டம் வகை செய்கிறது. முந்தைய சட்டங்களில் கடன் வாங்கியவர் தான் தம்மை திவாலானவராக அறிவிக்கக்கோரி மனு செய்யமுடியும். கடன் கொடுத்தவர், அவரிடம் இருந்து கடனை வசூலிக்க சட்டப்பூர்வமான வேறு வழிகளில் தான் முயற்சிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரத்தில் கடன் வாங்கிய நிறுவனங்களும் தங்களை திவாலாக அறிவிக்கக்கோரி தனியாக மனு தாக்கல் செய்ய முடியும்.

தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயத்தில் வழக்கு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் அடுத்த 180 நாட்களில் விசாரணை முடித்து தீர்ப்பளிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் விசாரணைக்காலத்தை மேலும் 90 நாட்களுக்கு நீடித்துக் கொள்ளமுடியும்.

அதே நேரத்தில் வழக்கு விசாரணையை 90 நாட்களுக்குள் முடித்துக்கொள்ளவும், தேவைப்பட்டால் மேலும் 45 நாட்களுக்கு நீடித்துக்கொள்ளவும் புதிய திவால் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. எனினும், 50 இலட்ச ரூபாய்க்கும் குறைவான முதலீடு அல்லது ஆண்டுக்கு ரூ.2 கோடிக்கும் குறைவான வருவாய் ஈட்டும் சிறிய தனியார் நிறுவனங்கள் மட்டுமே இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். முந்தைய நிதியாண்டில் மொத்த சொத்துக்களின் மதிப்பு ரூ.1 கோடிக்கும் குறைவாக உள்ள பட்டியலிடப்படாத நிறுவனங்களும் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

திவால் தீர்வு நடவடிக்கைகளின் போது கடன் வாங்கியவர்களின் நிறுவனத்தை மாற்றியமைக்க முடியுமா? வணிகத்துக்கு மீண்டும் புத்துயிரூட்டமுடியுமா? என்பது குறித்து கடன் கொடுத்தவர்கள் ஆய்வு செய்வார்கள். இந்த காலக்கட்டத்தில் கடன் கொடுத்தவர்களின் கோரிக்கைகள் கிடப்பில் போடப்படும். திவால் தீர்வு நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்தால், அதன்பின்னர் சொத்துக்களை விற்பனை செய்யும் நடைமுறை தொடங்கும்.

உரிமம் பெற்ற திவால் தீர்வு வல்லுநர்கள் திவால் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இத்தகைய வல்லுநர்கள் குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாவது பட்டயக் கணக்காளர்கள் அல்லது கம்பெனி செயலாளர்கள் அல்லது காஸ்ட் அக்கவுண்டன்ட்கள் அல்லது வழக்கறிஞர்கள் அல்லது நிர்வாகத்துறையில் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்கவேண்டும். அதுமட்டுமின்றி, திவால் நடைமுறை குறித்த தேர்வையும் எழுதி தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். தேசிய திவால் நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற யாரும் திவால் தீர்வு வல்லுநராக மாறலாம்.

திவால் தீர்வுக்கான விண்ணப்பம் திவால் மற்றும் திவால் நிலை வாரியத்தால் 14 நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான உறுதி அளிக்கப்பட்டவுடன் இடைக்கால திவால் தீர்வு வல்லுநரை தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயம் அமைக்கும். இடைக்கால திவால் தீர்வு வல்லுநர் என்பவர் 30 நாட்களுக்கு மட்டுமே பணியில் இருப்பார். அவர் கடனாளியின் சொத்துக்கள் மற்றும் நிறுவனத்தின் இயக்கத்தை தனது பொறுப்பில் எடுத்துக்கொள்வார். அதுமட்டுமின்றி, கடனாளியின் பொருளாதார விவரங்களைத் திரட்டுவார். கடன் கொடுத்தவர்கள் குழுவையும் அவர் ஏற்படுத்துவார். கடன் கொடுத்த அனைவரும் இந்தக்குழுவில் இருப்பார்கள்.

கடன் வாங்கிய நிறுவனத் தரப்பைச் சேர்ந்த கடன்தாரர்கள் மட்டும் இக்குழுவில் சேர்க்கப்படமாட்டார்கள். சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் இயக்கத்துடன் தொடர்புடைய கடன்தாரர்களும் இந்தக்குழுவில் சேர்க்கப்படுவார்கள். ஆனால், அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படாது. எனினும் இத்தகையவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின்

மொத்தக்கடனில் குறைந்தது 10 விழுக்காடு அளவுக்கு கடன் கொடுத்திருக்க வேண்டும்.

அமைக்கப்பட்ட நாளில் இருந்து 7 நாட்களுக்குள் கடன் கொடுத்தவர்கள் குழு கூட்டப்படும். அக்கூட்டத்தில் தற்காலிக திவால் தீர்வு வல்லுநரை நிரந்தர வல்லுநராக நியமித்துக்கொள்ளலாமா? என்பது குறித்து 75% வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

கடன்வாங்கிய நிறுவனத்தின் சொத்துக்கள் விற்கப்படும் போது எந்த வரிசையில் கடனைத் திருப்பிக்கொடுக்க வேண்டும் என்பதையும் புதிய திவால் சட்டம் வரையறுத்திருக்கிறது. உத்தரவாதம் பெற்று கடன் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் முழுக்கடன் தொகையும் முதலில் வழங்கப்படும். அடுத்ததாக உத்தரவாதம் பெறாமல் கடன் கொடுத்தவர்கள், வணிக அடிப்படையில் கடன் கொடுத்தவர்கள் ஆகியோருக்கு கடன் திரும்பச் செலுத்தப்பட்ட பிறகு, அரசாங்கக்கடன்கள் கடைசியாகத் தான் செலுத்தப்படும்.

இந்தப்பட்டியலில் கட்டுமான நிறுவனங்கள் இடம்பெறாததால் வீடுவாங்குபவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இதற்கு எதிர்ப்பு எழுந்ததால் வீடு வாங்குபவர்கள் எஃப் படிவத்தைத் தாக்கல் செய்யலாம் என்று திவால் மற்றும் திவால் தீர்வு வாரியம் அறிவித்தது. ஆனாலும், அது முன்னுரிமைப்பட்டியலில் எங்குமே இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காலம் செல்லச்செல்ல புதியசட்டத்தை செயல்படுத்துவதில் பல்வேறு நடைமுறைச்சிக்கல்கள் எழுந்தன.

உதாரணமாக, புதிய திவால் சட்டத்தின்படியான முதல் நிறுவனக்கடன் திவால் வழக்கை விசாரித்த தேசிய நிறுவனச் சட்டத்தீர்ப்பாயம், சம்பந்தப்பட்ட நிறுவனம் செலுத்தவேண்டிய கடன் தொகையில் 90 விழுக்காட்டுக்கும் மேல் தள்ளுபடி செய்துவிட்டது. இந்தத்தீர்ப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. உலக அளவிலான மகிழுந்து நிறுவனங்களுக்கு அலுமினியம், அலாய் சக்கரங்களைத் தயாரித்து வழங்கி வந்த சினர்ஜிஸ் & டூரய் ஆடோமோடிவ் நிறுவனத்தை, சினர்ஜிஸ் கேஸ்டிங்ஸ் நிறுவனம் வாங்கிய போது, அந்த நிறுவனம் வாங்கியிருந்த ரூ.900 கோடியில் ரூ.54 கோடியை செலுத்தினால் போதுமானது என்று தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது.

அதுமட்டுமின்றி, அந்தத்தொகையை செலுத்துவதற்கான நிபந்தனைகளும் கூட மிகவும் எளிமையாக அமைந்திருந்தன. செலுத்தவேண்டிய ரூ.54 கோடியில் ரூ.20 கோடியை மட்டும் உடனடியாக செலுத்தவேண்டும் என்றும், மீதமுள்ள தொகையை அடுத்த 5 ஆண்டுகளில் செலுத்திக் கொள்ளலாம் என்று தீர்ப்பாயம் ஆணையிட்டது. சினர்ஜிஸ் & டூரய் செலுத்தவேண்டிய ரூ.900 கோடியில் கடன் அசல் என்பது ரூ.215 கோடி மட்டுமே. மீதமுள்ள ரூ.685 கோடி வட்டி உள்ளிட்ட பிற நிலுவைத்தொகைகளை உள்ளடக்கியதாகும்.

தொழில் மற்றும் நிதிச்சீரமைப்பு வாரியத்தில் விசாரணையில் இருந்த 93,000 வழக்குகளில் சினர்ஜிஸ்-டூரய் வழக்கும் ஒன்றாகும். இது புதிய திவால் சட்டத்தின்படி தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயத்துக்கு ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட வழக்குகளில் ஒன்றாகும். நீண்ட காலமாக திருப்பிச்செலுத்தப்படாமல் இருக்கும் கடன்களை வசூலிப்பதற்காக திவால் நடவடிக்கைகளைத் தொடங்கும்படி வங்கிகளுக்கு ஆணையிட இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரமளிக்கும் வங்கி ஒழுங்குமுறை அவசரச் சட்டம் [இந்த அவசரச் சட்டம் பின்னர் வங்கி ஒழுங்குமுறை (திருத்தம்) சட்டம் 2017 என்ற பெயரில் சட்டமாக இயற்றப்பட்டுவிட்டது] கடந்த மே மாதம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் திவால் தீர்வு நடவடிக்கை மேலும் வேகம் பெற்றது.

பொதுத்துறை வங்கிகளின் வாராக்கடன்களின் அளவு உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இந்தக்கடன்களில் பெரும்பாலானவை மின்சாரம், இரும்பு, சாலைக்கட்டமைப்பு, ஜவுளி ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களால் பெறப்பட்டவை ஆகும்.

அவசரசட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து 12 பெரிய வாராக்கடன்களை புதிய திவால் சட்டத்தின்படி திவால் தீர்வு நடவடிக்கைகளுக்கு அனுப்பும்படி வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி ஆணையிட்டது. வாராக்கடன்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு காணும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட ரிசர்வ் வங்கியின் ஆலோசனைக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திவால் தீர்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்ட 12 பெரிய கடன்களை வாங்கிய நிறுவனங்களின் விவரம் வருமாறு:

பூஷன் ஸ்டீல்ஸ், லான்கோ இன்பிரா, எஸ்ஸார் ஸ்டீல்ஸ், பூஷன் பவர், அலோக் இன்டஸ்ட்ரீஸ்,

அம்டெக் ஆட்டோ, மோன்னெட் இஸ்பாட், எலெக்ட்ரோஸ்டீல் ஸ்டீல்ஸ், எரா இன்பிரா, ஜெய்பீ இன்பிராடெக், ஏபிஜி ஷிப்யார்டு, ஜோதி ஸ்ட்ரக்ச்சர்ஸ் ஆகியவை வாராக்கடன்களை வைத்துள்ள 12 நிறுவனங்கள் ஆகும். வங்கிகளின் ஒட்டுமொத்த வாராக்கடன்களில் 25% இந்த நிறுவனங்களின் கணக்குகளைச் சேர்ந்ததாகும். 2017ஆம் ஆண்டு மார்ச் மாத நிலவரப்படி இந்திய வங்கிகளின் வாராக்கடன்கள் அளவு ரூ.7.11 இலட்சம் கோடி ஆகும். இதில் இந்த 12 நிறுவனங்கள் செலுத்தவேண்டிய தொகை மட்டும் ரூ.1.78 இலட்சம் கோடி ஆகும்.

நிதிச்சேவை நிறுவனமான மோதிலால் ஓஸ்வால் வெளியிட்ட அறிக்கைப்படி 2017ஆம் ஆண்டில் திவால் தீர்வுக்காக தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயத்துக்கு அனுப்பப்பட்ட 376 வழக்குகளில் பெரும்பான்மையான 187 வழக்குகள் செயல்பாட்டுக்கடன் வழங்குபவர்களாலும், 122 வழக்குகள் நிதிநிறுவனக்கடன் வழங்குபவர்களாலும் தொடரப்பட்டவை ஆகும். மீதமுள்ள வழக்குகள் மட்டுமே கடன் வாங்கிய நிறுவனங்களால் தொடரப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக்கடன்களுக்குத் தீர்வு காணப்படுவது பெரு நிறுவனங்களுக்கு கடன் தருபவர்களுக்கு மிகவும் சாதகமானதாக அமையும். எனினும், தொடக்கத்தில் இந்த நடவடிக்கை மிகவும் மந்தமாகவே தோன்றுகிறது. தொடக்கத்தில் இரு நிறுவனங்களின் திவால் பிரச்சினைகளுக்கு மட்டுமே, அதுவும் கடனில் பெரும்பகுதி தள்ளுபடி செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டது. சொத்துகளை விற்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. 14 கடன் வழக்குகள் மேல்முறையீட்டுக்கு சென்றுள்ளன என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

12 நிறுவனங்களின் கடன்தொகையில் பெரும்பகுதியை தள்ளுபடி செய்வது குறித்த விவகாரமும் இந்திய ரிசர்வ் வங்கியின் பரிந்துரைப்படி தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிறுவனங்களின் திவால் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் உள்ள மற்றொரு பிரச்சினை என்னவென்றால், திவால் நிலையில் உள்ள ஒரு நிறுவனத்தை ஏலத்தில் விடும்போது, அந்த நிறுவனத்தின் உரிமையாளர்களே குறைந்த தொகைக்கு ஏலம் கேட்பதாகும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், ஒரு நிறுவனத்தின் உரிமையாளர்களே வேறு பெயரில் அந்த நிறுவனத்தை ஏலத்தில் எடுப்பதைத் தடுக்கும் வகையில் புதிய திவால் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. திவாலாகும் நிலையில் உள்ள நிறுவனத்தை, அதன் உரிமையாளர்களே குறைந்த தொகைக்கு ஏலத்தில் எடுத்து மீண்டும் மோசமாக நிர்வாகம் செய்யக்கூடும் என்று கடன் வழங்கியவர்கள் தரப்பு அச்சம் தெரிவிப்பதால், அதைப்போக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புதிய நடைமுறைகளின்படி, ஒரு நிறுவனத்தை வாங்குவதற்கான ஏலத்தில் பங்கேற்பவர்களை கடன் வழங்கியவர்கள் குழு ஆய்வு செய்யும் என்பதால், ஒரு நிறுவனத்தின் பெயரில் கடன் வாங்கி, திரும்பச் செலுத்தாதவர்களே அந்த நிறுவனத்தை குறைந்த தொகைக்கு ஏலம் எடுக்கமுடியாது. புதிய விதிகளின்படி சொத்துக்களை வாங்க முன்வரும் அதன் பழைய உரிமையாளர் உள்ளிட்ட அனைவரின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்காக, அதுகுறித்த விவரங்கள் கடன் தீர்வு திட்டத்தில் இருப்பதை திவால் தீர்வு வல்லுநர்கள் உறுதி செய்வார்கள். ஏலத்தில் பங்கேற்கவரும் சொத்து உரிமையாளர்களின் நம்பகத்தன்மை மற்றும் கடனை திருப்பிச்செலுத்துவதற்கான திறன் ஆகியவற்றை நிரூபிப்பதற்கு கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

சொத்துக்களை ஏலத்தில் எடுக்க முன்வருவோர் அவர்களுக்கு எதிரான குற்றநடவடிக்கைகள், தகுதி நீக்கங்கள், தண்டனைகள், இந்திய ரிசர்வ் வங்கி விதிகளின்படி வேண்டுமென்றே கடனை திரும்பச் செலுத்தாதவராக வகைப்படுத்தப்பட்டிருக்கிறார்களா? என்ற விவரங்கள், செபி அமைப்பால் தடை செய்யப்பட்டிருத்தல் உள்ளிட்ட விவரங்களை இப்போது தெரிவித்தாக வேண்டும்.

எனினும், ஏலத்தில் விடப்படும் சொத்துகளின் ஏலத்தில் அவற்றின் உரிமையாளரே பங்கேற்பதற்கு தடைவிதிப்பது குறித்த விவரங்கள் தெளிவாக இல்லை. அதனால், கடனை வேண்டுமென்றே திரும்பச்செலுத்தாதவர்கள், போலி உரிமையாளர்கள் மட்டுமின்றி, திவால் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் உரிமையாளர் அல்லது சகோதர நிறுவனங்களும் ஏலத்தில் பங்கேற்க முடியாத அளவுக்கு புதிய திவால் சட்டத்தில் திருத்தம் செய்து அவசரச்சட்டத்தை மத்திய அரசு பிறப்பித்திருக்கிறது. இந்த

அவசரச்சட்டத்தின் மூலம் இந்திய திவால் சட்டத்தில் 29 ஏ என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டிருக்கிறது.

அவசரச்சட்டத்தில் இடம்பெற்றுள்ள வாசகங்களின்படி, திவால் நிறுவனச்சொத்துகள் ஏலத்தில் விடப்படும் போது அதன் உரிமையாளர்களும், ஓராண்டுக்கும் மேல் வாராக்கடன் வைத்துள்ள அதன் சகோதர நிறுவனங்களின் உரிமையாளர்களும் பங்கேற்பது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், எதார்த்தத்தில் இந்தத் தடையை நடைமுறைப்படுத்த முடியாது. ஏனெனில், வாராக்கடன் ஓராண்டை எட்டுவதற்கு முன்பாகவே அதன் அசல் மற்றும் வட்டியை செலுத்துவதன் மூலம் சொத்துகளை சரிசெய்து தகுதி பெற்றுவிடமுடியும்.

ஆனால், ஒரு திவால் மனுவை தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயம் ஏற்றுக்கொண்டுவிட்டால் இது சாத்தியமல்ல. அதாவது, மேலே குறிப்பிடப்பட்ட 12 பெரிய கடன் கணக்குகளுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்களை அவற்றின் உரிமையாளர்களோ அல்லது அவற்றின் துணை நிறுவனங்களோ வாங்கமுடியாது.

இது தவிர, நிறுவனத்திற்குக் கடன்உத்தரவாதம் அளித்தவர்களும் அந்த நிறுவனங்களை ஏலத்தில் எடுக்க முடியாது. சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளருடன் தொடர்புடைய வேறு நிறுவனங்களும் திவால் நடைமுறையில் பங்கேற்கமுடியாது.

திவால் நடைமுறையில் சம்பந்தப்பட்ட நிறுவன உரிமையாளருடன் தொடர்புடைய வேறு நிறுவனங்கள் என்பதற்கான விளக்கமும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக வாராக்கடன் பட்டியலில் ஓராண்டுக்கும் மேல் உள்ள உத்தம் கால்வா நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்தில் எடுக்க ஆர்செலர் மிட்டல் போன்ற நிறுவனங்கள் முன்வந்தால் அவற்றின் கடனைச்செலுத்தும் திறனைப் பற்றிக் கவலைப்படாமல், ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படும்.

உத்தம் கால்வா நிறுவனத்தில் அதன் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தமுடியாத அளவுக்கு சிறியஅளவில் தான் தங்களுக்கு பங்கு இருப்பதாகவும், இயக்குநர்கள் குழுமத்தில் தங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை என்றும், நிர்வாகத்தின் முடிவுகளில் ஆதிக்கம் செலுத்துவதில்லை என்றும் கூறி அதன் சொத்துக்களை ஏலத்தில் எடுக்க ஆர்செலர் மிட்டல் விருப்பம் தெரிவித்தது. உத்தம் கால்வா நிறுவனத்தின் உரிமையாளர் ஆர்செலர் மிட்டல் இல்லை என்பதால் உத்தம் கால்வா நிறுவனத்தை சீரமைக்கும் போது அதில் இரும்பு சார்ந்த சொத்துக்களை ஏலத்தில் எடுப்பதில் இருந்து ஆர்செலர் மிட்டல் நிறுவனத்தைத் தடுக்க முடியாது.

உத்தம் கால்வா நிறுவனத்தில் ஆர்செலர் மிட்டல் நிறுவனம் 29% பங்குகளை வைத்திருக்கிறது. அதுமட்டுமின்றி மிக்லானி குடும்பத்துடன் இணைந்து அந்த நிறுவனத்தை நடத்துபவர்களில் தாங்களும் ஒருவர் என்று மும்பை பங்குச்சந்தையில் தாக்கல் செய்த விவரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு நிறுவனத்தின் வாக்களிக்கும் உரிமையில் 20 விழுக்காட்டுக்கும் அதிகமாக வைத்திருப்பவர்களும், 2 விழுக்காட்டுக்கும் கூடுதலாக பங்கு வைத்துள்ள இயக்குநர்களும் அந்த நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று இந்திய திவால் சட்டம் கூறுகிறது.

ஆனால், ஒரு நிறுவனத்தில் 10% பங்கு வைத்திருந்தாலோ, நிறுவனத்தின் நிர்வாகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலோ அவர் அந்த நிறுவனத்தை நடத்துபவர்களில் ஒருவராகக் கருதப்படுவார் என்று செபி சட்டம் கூறுகிறது.

இவ்வாறாக, ஒரு நிறுவனத்தின் சொத்துக்களை ஏலத்தில் எடுப்பதிலிருந்து தடுக்க, தொடர்புடைய நிறுவனங்கள் என்றால் என்ன? என்பதற்கு இன்னும் தெளிவான வரையறை தேவைப்படுகிறது.

இந்திய திவால் சட்டப்படி தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ள 12 நிறுவனங்களில் 5 இரும்பு நிறுவனங்கள், அம்டெக்ஆட்டோ நிறுவனம் ஆகியவற்றின் சொத்துக்களை வாங்க சில நிறுவனங்களிடம் இருந்து திட்டங்கள் வந்திருக்கின்றன.

திவால் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்ட 12 நிறுவனங்களின் கணக்குகள் தவிர, 29 நிறுவனங்களின் வாராக்கடன்களை திசம்பர் 13ஆம் தேதிக்குள் பேசி வசூலிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் அல்லது அந்த நிறுவனங்களின் கணக்குகளை தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயத்துக்கு அனுப்பும்படி வங்கிகளை ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

சமநிலை என்பதற்கான விளக்கம் இங்கு அளிக்கப்படுகிறது. 29நிறுவங்களின் திவால் சிக்கலைத்தீர்க்க அந்த நிறுவனங்களின் கணக்குகளை தேசிய கம்பெனிகள் சட்டத் தீர்ப்பாயத்திற்கு அனுப்புவதற்கு முன்பாக, அவற்றுடன் பேச்சு நடத்தி தீர்வு காண வங்கிகளுக்கு கால அவகாசம்

வழங்கப்படும் நிலையில், முந்தைய பட்டியலில் இடம் பெற்றிருந்த 12 நிறுவனங்களுக்கு மட்டும் கால அவகாசம் வழங்கப்படாதது ஏன்?

திவால் பிரச்சினைக்குத் தீர்வு காணும்போது ஒன்றுக்கு ஒன்று முரன்பாடான விஷயங்கள் வந்துகொண்டுதான் இருக்கும். ஆனாலும், திவால் சிக்கலில் சிக்கிக்கொண்ட நிறுவனங்கள் அவற்றிலிருந்து எளிதாக வெளியேறவோ அல்லது சீரமைக்கவோ வகைசெய்வதற்கான சோதனை முயற்சிகள்தான் இந்தியாவில் வணிகம் செய்வதை மேலும் எளிதானதாக மாற்றும். அதேநேரத்தில் இந்த நடவடிக்கை இழுத்துக்கொண்டே செல்லும் நிலையையோ அல்லது வணிகம் செய்வதை கடினமாக மாற்றும் வகையிலோ எதுவும் நடந்துவிடாதவாறு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக, சினர்ஜி & டூரய் வழக்கில், கடனை மறு சீரமைத்து தேசிய கம்பெனிகள் சட்டத்தீர்ப்பாயம் அளித்த தீர்ப்பை எதிர்த்து எடெல்வெய்ஸ் என்ற சொத்து சீரமைப்பு நிறுவனம் தேசிய கம்பெனிகள் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. இதற்காக அந்த நிறுவனம் கூறியுள்ள காரணங்களில் ஒன்று, இந்திய திவால் சட்டத்தில் திருத்தம் செய்து பிறப்பிக்கப்பட்ட அவசரச்சட்டத்தின்படி சினர்ஜி காஸ்டிங்ஸ் நிறுவனம் சினர்ஜி & டூரய் நிறுவனத்துடன் தொடர்புடைய நிறுவனம் என்பதாகும். சினர்ஜி காஸ்டிங்ஸ் நிறுவனத்துக்கும், சினர்ஜி & டூரய் நிறுவனத்துக்கும் இடையில் போலியான நிதிப் பரிமாற்றங்கள் நடந்ததாகக் கூறப்படும் அதை விட பெரிய குற்றச்சாட்டு குறித்து தேசிய கம்பெனிகள் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் விசாரணை நடத்தி வருகிறது.

**- இந்திவ்ஜால்தாஸ்மனா, பிசினஸ் ஸ்டாண்டர்டு இதலில் பொருளாதார விவகாரங்கள் பிரிவு ஆசிரியர்.**

●

## அலுவலக இடமாற்றம்

திட்டம் மாத இதழின் அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது. சென்னை, பெசன்ட் நகர், இராஜாஜி பவனில் A Wing தரைதளத்தில் உள்ள இந்திய அரசின் புத்தக வெளியீட்டுப்பிரிவு அலுவலகத்தில் இருந்து திட்டம் அலுவலகமும் செயல்படும்.

திட்டம், யோஜனா, குருஷேத்ரா நடப்பு இதழ்களும், பழைய இதழ்களும் இந்த அலுவலகத்தில் விற்பனைக்கு உள்ளன. இந்திய அரசின் வெளியீட்டுப்பிரிவு வெளியிட்டுள்ள தமிழ், ஆங்கிலம், இந்தி மொழி புத்தகங்களும் இங்கு காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

வெளியீட்டுப்பிரிவின் வெளியீடுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

திட்டம் இதழ் பற்றிய தொடர்புகளுக்கும், வெளியீட்டுப்பிரிவின் வெளியீடுகளை ஒரே இடத்தில் பெறவும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**திட்டம் மாத இதழ்**

A Wing
இராஜாஜி பவன்
பெசன்ட் நகர்
சென்னை 600 090

தொலைபேசி எண்: 044-24917673.
திட்டம் மாத இதழ் மின்னஞ்சல் முகவரி: editorthittam@yahoo.co.in
வெளியீட்டுப்பிரிவு மின்னஞ்சல் முகவரி: bsme.chennai@yahoo.in

# இந்தியாவில் பொதுத்துறை வங்கிகளை சீரமைப்பதற்காக இந்திரதனுஷ் திட்டம்

- D.S. மாலிக்

பொதுத்துறை வங்கிகளின் மூலதனத்தை மேம்படுத்த அடுத்த இரண்டு ஆண்டுகளில் அவற்றிற்கு ரூ.2.11இலட்சம் கோடி வழங்குதல், கடன்களை திருப்பிக்கொடுக்க இயலாமை மற்றும் திவால்சார் சட்ட திருத்தங்கள், பொதுத்துறை வங்கிகளை ஒன்றோடு ஒன்று இணைப்பதைத் துரிதப்படுத்த தனி செயல்முறை போன்ற திட்டங்களை அரசு அறிவித்தது. இதற்குப்பின் நிதி சேவைத்துறையில் பரபரப்பு நிலவுகிறது. இவை, பொதுத்துறை வங்கிகளை சீரமைக்க திடீரென்று அறிவிக்கப்பட்ட முயற்சிகளாகக் கருதப்படலாம். ஆனால், இவை சில காலங்களாகவே திட்டமிடப்பட்டு இப்போது அறிவிக்கப்பட்டவையாகும். பொதுத்துறை வங்கிகள் இந்தியப்பொருளாதாரத்தில் முக்கியமான பங்காற்றுவதால் தற்போதைய அரசு 2014இல் பதவிக்கு வந்தவுடனேயே இது பற்றிய பேச்சுக்கள் எழுந்தன. கடந்த சில ஆண்டுகளில், உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு கடன் வழங்கும் பொதுத்துறை வங்கிகள், இத்திட்டங்களுக்கான அனுமதிகளை அளிப்பதிலும், நிலங்களைக் கையகப்படுத்துவதிலும் தாமதங்கள், உலகளாவிய மற்றும் உள்நாட்டுத் தேவைகள் குறைவது போன்ற நிலைமைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. இதனால் அவற்றின் இலாபமும் பாதிக்கப்பட்டது. இதனை சீர் செய்ய 2015இல் அரசு "இந்திரதனுஷ் திட்டத்தை" அறிவித்தது. ஆகஸ்டு 14, 2014இல் மத்திய அரசு அறிவித்த இந்தத் திட்டம் 1970இல் அரசு பல வங்கிகளை நாட்டுடைமை ஆக்கிய பிறகு பொதுத்துறை வங்கிகளை சீரமைக்க அவைகளுக்கு மூலதன நிதி வழங்குவதற்குகென எடுக்கப்படும் ஒரு முக்கிய சீர்திருத்த நடவடிக்கையாகும்.




இந்திரதனுஷ் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

### இந்திரதனுஷ் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்

- **நியமனங்கள்:** சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநர் பதவிகளை வெவ்வேறாகப் பிரிக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்து இனிமேல் ஏற்படும் காலி இடங்களைப் பூர்த்தி செய்யும்போது, பொதுத்துறை வங்கிகளின் தலைமைச் செயல்அலுவலரை மேலாண்மை மற்றும் தலைமைச் செயல் அலுவலர் என்றும், மற்றொருவரைத் தேர்ந்தெடுத்து பொதுத்துறை வங்கியின் அன்றாட செயல்களில் அதிகாரம் ஏதுமில்லாத சேர்மேனாகவும் நியமிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.
- **வங்கிகளின் வாரியம்:** தற்போதுள்ள நியமனக்குழுவுக்கு பதிலாக மேன்மிகு பலவகைத் திறன் கொண்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வாரியத்தை அமைத்து, அது பொதுத்துறை வங்கிகளின் முழு நேர இயக்குநர்களையும், சேர்மேன்களையும் நியமனம் செய்யும். அனைத்து பொதுத்துறை வங்கிகளின் இயக்குநர் குழுமங்களோடு, தொடர்ந்து அவர்கள் தொடர்பில் இருந்து வங்கிகளின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் தேவையான உத்திகளை வழங்குவார்கள்.

- **மூலதன நிதி அளித்தல்**: தற்போது எல்லா பொதுத்துறை வங்கிகளும் பாசல் III மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின் தேவை நிலைமைகளுக்கு ஏற்ப மூலதன நிதியைக்கொண்டுள்ளன. ஆனாலும் கூட பேசல் III குறியீட்டுக்கும் கூடுதலாகவே பொதுத்துறை வங்கிகளின் மூலதன நிலைமை இருக்கவேண்டும் என்று இந்தியஅரசு விரும்புகிறது. 2019 நிதியாண்டு வரையிலான ஆண்டுகளுக்கு ரூ.1,80,000 கோடி தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வங்கிகளின் அளவு மற்றும் அவர்கள் வளரக்கூடிய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்த நிதியாண்டில் கடன் வளர்ச்சி 12 சதவிகிதம் அதிகரிக்கும் என்ற நிலையிலும், அடுத்த மூன்று ஆண்டுகளில்; 12 லிருந்து 15 சதவிகிதம் வரை உயரும் என்று கருத்தில் கொண்டு; இந்த மதிப்பீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மொத்தத் தேவையில் இந்திய அரசு பட்ஜெட் மூலமாக கீழ்க்கண்ட காலகட்டத்தில் ரூ.70,000 கோடி ஒதுக்கீடு செய்ய உள்ளது.

| | |
|---|---|
| நிதியாண்டு 2015-16<br>ரூ.25,000 கோடி | நிதியாண்டு 2016-17<br>ரூ.25,000 கோடி |
| நிதியாண்டு 2017-18<br>ரூ.10,000 கோடி | நிதியாண்டு 2018-19<br>ரூ.10,000 கோடி |

- (A) பொதுத்துறை வங்கிகளின் சிரமங்களை குறைப்பது: கடந்த பல ஆண்டுகளாக பொதுத்துறை வங்கிகளின் பெரும்பான்மையான கடன்கள், உள்கட்டமைப்புத்துறை மற்றும் அடிப்படைத்துறை சார்ந்த திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. பல காரணங்களுக்காக இந்தத்திட்டங்கள் இடையில் நின்று விட்ட நிலையிலும், பாதிப்புகள் ஏற்பட்ட நிலையிலும் கொடுக்கப்பட்ட கடன்கள் வாராக்கடன்கள் ஆகிவிட்டன. சமீபத்தில் நடைபெற்ற ஆய்வில், மின்சாரம், எஃகு, மற்றும் சாலைத்துறைகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் ஆராயப் பட்டுள்ளன. இந்தத்துறைகளில் சம்பந்தப்பட்டவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதற்குப்பின் எடுக்கப்பட்ட சில முடிவுகளாவன :
- திட்டக் கண்காணிப்புக்குழு (அமைச்சரவை செயலகம்) / சம்மந்தப்பட்ட அமைப்புகளோடு தொடர்புகொண்டு கொடுக்கப்படவேண்டிய அனுமதி / உரிமங்கள் வேகமாக வழங்கச் செய்யப்படும்.
- திட்டங்களை செயல்படுத்துவதற்கான கொள்கைமுடிவுகள் எடுக்கும்வரை சம்மந்தப்பட்ட அமைச்சகங்களும், துறைகளும் செயல்பாடுகளை மேற்கொள்ளும்.
- இந்தத்திட்டங்களுக்கு நீண்ட காலத்திற்கு தேவையான எரி பொருட்களை வழங்க நிலக்கரி மற்றும் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகங்கள் தேவையான கொள்கைகளை மேற்கொள்ளும். மின்விநியோக நிறுவனங்கள் சீர்திருத்தங்களை மேற்கொள்ள உதவிகள் செய்யப்படும்.
- இந்தத்திட்டங்களை மீண்டும் செயல்படுத்தத் தேவையான கூடுதல் மூலதனப்பங்கைக் கொண்டுவர திட்டச்செயல்பாட்டாளர்கள் வற்புறுத்தப்படுவார்கள். அப்படி அவர்களால் செய்ய இயலாத நிலைமையில் இந்தத்திட்டங்களை வேறொருவர் செய்து முடிப்பதற்கு அல்லது அதன் மேலாண்மையை எடுத்துக்கொள்ள வங்கிகள் பரிசீலனை செய்யும். இந்தத்துறைகள் சார்ந்த இறக்குமதிக்கான வரிகளை அரசு மாற்றியமைக்கும். எஃகு பொருட்கள் மீதான இறக்குமதி வரி உயர்வு முடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.
- ஏற்கனவே உள்ள கடன்களை மாற்றியமைக்க வங்கிகள் முற்படும்போது, அதற்கு வேண்டிய அனுமதியை இந்திய ரிசர்வ் வங்கி வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(B) கடன்சார் சிக்கல்களை சமாளிக்க வழிகள் மற்றும் வாராக்கடன் பற்றிய விவர வெளியீடு: வாராக்கடன்களை சமாளிக்க கடன் வசூல் ஆணையம் மற்றும் பிறமுறைகள் தவிர கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- "கடன் வாரா நிலைமையை முன்னதாக அறிதல், கடனைத் திரும்பப்பெற வழக்குகளை விரைவாக முடித்தல் : பொருளாதாரத்தில் வாராக் கடன்களை சீர்படுத்த வழிமுறைகள்" என்ற தலைப்பில் வழிகாட்டு முறைகளை 2014இல் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டு உடனடியாக வாராக்கடன்களை அறிந்து அவற்றை வசூல் செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஒத்துழைப்பு தராத கடனாளி என்ற புதிய ஒரு வகையை இந்திய ரிசர்வ் வங்கி அறிமுகப்படுத்தி அப்படிப்பட்டவர்களுக்கு எந்த ஒரு வங்கியாவது கடன் கொடுத்தால் அது வாராக்கடன் என்று கணக்கில் காட்டப்படவேண்டும் என்று கூறியுள்ளது.

- வாராக்கடன்களை பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து வாங்கி கடன்காரார்களிடமிருந்து வசூல்செய்யும் சிறப்பு நிறுவனங்கள் இப்படிப்பட்ட கடன்களை வாங்கும்போது, பாதுகாப்பு வரவாக முன்பிருந்த 5 சதவிகிதத்திற்கு பதிலாக 15 சதவிகிதம் வழங்க வேண்டும். இதனால் இப்படிப்பட்ட கடன்களை வாங்கும் நிறுவனங்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளும். இதன் மூலம் வாராக்கடனுக்கு எதிராக கிடைக்கும் தொகையும் உயரும்.
- மத்திய அரசு, சண்டிகர், பெங்களூரு, எர்ணாகுளம், டேராடுன், சிலிகுரி மற்றும் ஐதராபாத் நகரங்களில் மேலும் ஆறு புதிய கடன் வசூல் ஆணையங்களை அமைத்து, வங்கித்துறையிலுள்ள வாராக் கடன்களை வசூலிக்க முடிவெடுத்துள்ளது.
- **அதிகாரமளித்தல்:** வங்கிகள் வாராக்கடன்களை வசூலிக்கத் தேவையான முடிவுகளை சுயமாக எடுக்கலாம் என்றும் இதில் அரசின் தலையீடு இருக்காது என்றும் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- **பொறுப்புணர்வுக்கான செயல்முறைகள்** :
- பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடுகளை மதிப்பிட "முக்கியமான செயல்பாட்டுக்குறியீடுகள்" என்ற செயல்முறை வெளியிடப்பட்டுள்ளது.
- மோசடிக்கடன்கள் பற்றி உடனடியாக மத்திய புலனாய்வு நிறுவனத்திடம் பதிவு செய்யவேண்டும் என்றும் அவ்வழக்குகளை தினம்தினம் கண்காணிக்கவேண்டும் என்றும் பொதுத்துறை வங்கிகளுக்கு நிதி அமைச்சகத்தின் நிதிசார் சேவைகள் துறை சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.
- பெரிய மோசடிக்கடன்கள் மற்றும் வங்கி ஊழியர்களின் துணையோடு செய்யப்பட்ட மோசடிகள் என்று கருதப்படுபவை மீது, ஊழல் தடுப்புக்கண்காணிப்பு மிகைப்படுத்தப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட கடன் மோசடிகளை எதிர்கொள்ள வேண்டிய வழிவகைகளை மே 2015இல் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.
- **ஆளுமைசார் சீர்திருத்தங்கள்** : 2015 துவக்கத்தில் புனேயில் நடைபெற்ற "க்யான் சங்கம்" என்ற கூட்டத்தில் ஆளுமைசார் சீர்திருத்த முதல் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர்இ பொதுத்துறை வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களின் சேர்மன் மற்றும் மேலாண்மை இயக்குநர்கள் கலந்துகொண்டனர். பிரச்சினைகளை நேரடியாக ஆராய்ந்து தெரிந்துகொள்ள பிரதம மந்திரி திரு. நரேந்திர மோடி, நிதியமைச்சர் திரு. அருண்ஜெட்லி மற்றும் அப்போதைய இணை அமைச்சர் திரு.ஜயனத்; சின்ஹா ஆகியோர் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். பிரதம மந்திரி அரசின் மேல் மட்ட எண்ணங்களைப் பிரதிபலித்து, வங்கி அமைப்புகளின் மேம்பாடு, நிதிசார் சுயசெயல்பாடு ஆகியவற்றை உறுதி செய்து வங்கிகளின் அன்றாட வணிகம்சார் செயல்பாடுகளில் அரசின் தலையீடு இல்லாமல் பார்த்துகொள்ளப்படும் என்று; வாக்குறுதி அளித்தார். பொதுத்துறை வங்கிகளிடமிருந்து தாம் எவற்றை எல்லாம் எதிர்பார்க்கிறார் என்பதை எல்லாம் அவர் விளக்கினார். கடன்சார் சிக்கல்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை வலுவாக்கவேண்டும் என்று இந்தக்கூட்டம் பரிந்துரைத்தது. இதன்படி பொதுத்துறை வங்கிகளின் பணியாளர்சார் மேலாண்மைச் செயல்பாடுகள் மேம்படுத்தப்பட்டு, தடைகள் நீக்கப்பட்டு பொதுவான வளங்களை எல்லா வங்கிகளும் இணைந்து பயன்படுத்தும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. வங்கிகளின் தலைமைக் குழுக்களுக்கு அதிக அதிகாரமளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## கடந்த ஒரு ஆண்டாக வங்கித்துறைசார் சீர்திருத்தங்களின் மிகப்பெரிய முயற்சிகள் பின்வருமாறு :

- **கடனைத்திரும்பச்செலுத்த இயலாமை மற்றும் திவால் சட்ட நெறிமுறைகள்** : மே 28, 2016இல் கடன் திரும்பச்செலுத்த இயலாமை மற்றும் திவால் சட்ட நெறிமுறைகள் 2016 இயற்றப்பட்டு, கட்டுக்குள்ளான கடன் பொறுப்பு அமைப்புகள் (கட்டுப்படுத்தப்பட்ட கடன் பொறுப்பு கூட்டு நிறுவனங்கள் மற்றும் கட்டுப்பாடான கடன் பொறுப்பு உள்ள மற்ற நிறுவனங்கள்), கட்டுப்படுத்தப்படாத கடன்பொறுப்பு கூட்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் போன்றவர்கள் சார்ந்த பலவகையான சட்டங்களை ஒன்றினைத்து புது சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கடன் திருப்பிக் கொடுக்க இயலாமை மற்றும் திவால் சட்டத்தில் சமீபத்தில் திருத்தம் செய்யப்பட்டு, வேண்டுமென்றே கடனை திருப்பிக் கொடுக்காமல் இருப்பவர்கள், தங்கள் கடன்களுக்காக அடமானம் வைத்த சொத்துக்களை மீண்டும் ஏலம் எடுப்பது விலக்கப்பட்டுள்ளது.
- பொதுத்துறை வங்கிகளின் மூலதன நிதியை அதிகரித்தல். பொருளாதாரத்தில் கடன் வழங்கலையும், வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்க பொதுத்துறை வங்கிகளின் மூலதன

நிதியை அதிகரிக்க அரசு முயற்சி செய்துள்ளது. இதனால், அந்த வங்கிகள் அதிக மூலதன நிதியைத் திரட்டமுடியும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் திரட்டப்படும் மூலதன நிதி ரூ.2,11,000 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் இதற்காக ரூ.18,139 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், மூலதன நிதிக்காக ரூ.1,35,000 கோடி பத்திரங்கள் வழங்க; ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது அல்லாமல், அரசின் மூலதன பங்கை குறைத்துக்கொள்ளும் அதே நேரத்தில், பொதுத்துறை வங்கிகள் நிதிச்சந்தையிலிருந்து ரூ.58,000 கோடி அளவிற்கு பொதுமக்களிடமிருந்து மூலதன நிதி திரட்டுவார்கள். இதனால், கடன் வழங்கலும் வேலை வாய்ப்புகள் உருவாக்கலும் மிகுதியாகும்.

- **வங்கிகளின் இணைப்பு**: கடந்த சில ஆண்டுகளாகவே பொதுத்துறை வங்கிகளின் இணைப்பு இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்திட்டத்தில் இருந்தாலும், இந்திய ஸ்டேட் வங்கியின் 6 துணை வங்கிகள் மற்றும் பாரதிய மகிளா வங்கி, இந்திய ஸ்டேட் வங்கியோடு இணைந்ததைத் தவிர, வேறு எந்த ஒரு இணைப்பும் ஏற்படவில்லை. மற்ற இணைப்புகளில் குறிப்பிட்டுக்கூறும் அளவுக்கு இருந்தது சில தனியார் வங்கிகள் மட்டுமே. சில பொதுத்துறை வங்கிகள் இணைந்து வலுப்பெற்றால், வாராக்கடன்களை எதிர்கொள்ள வசதியாக இருக்கும் என்று இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் Dr. உர்ஜித் பட்டேல் கூறியுள்ளார்.

**பொதுத்துறை வங்கிகளின் இணைப்பை மேற்பார்வை செய்யும் நிதி அமைச்சரின் தலைமையிலான இந்தியஅரசின் குழு**

**பொதுத்துறை வங்கிகளை இணைக்க அதிவேக மாற்று வழிகள்**

21 அரசுடைமை வங்கிகளை இணைக்க நிதியமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் அமைச்சர்கள் குழு நியமனம்

பொதுத்துறை வங்கிகளுக்கு ரூ.2.11 கோடி மூலதன நிதி வழங்கல் அறிவிப்பை அடுத்து அரசு அறிவிப்பு

மற்ற அமைச்சர்கள்: இரயில்வே மற்றும் நிலக்கரி அமைச்சர் திரு. பியூஷ் கோயல், பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன்

**இணைப்பினால் ஏற்படும் பயன்கள்** :

- ஒரே பகுதியில் பல வங்கிகள் கடன் வழங்குவதைத் தவிர்க்கலாம்.
- இழப்புகளை எதிர்கொள்ள வங்கிகள் வலுப்பெறும்.
- வாராக்கடன்களை சமாளிக்க உதவும்
- இதோடு பொதுத்துறை வங்கிகளுக்கு மூலதன நிதி அளிப்பதால் அவை வேகமாக வளரும்.

இதற்கிடையே மத்திய அரசு பொதுத்துறை வங்கிகளின் இணைப்பிற்கு மாற்று முறையை செயல்படுத்த மத்திய நிதி அமைச்சர் திரு. அருண் ஜெட்லி தலைமையில் ஒரு அமைப்பை ஏற்படுத்தியது. அதன் பிற உறுப்பினர்கள் இரயில்வே மற்றும் நிலக்கரி அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் ஆகியோர். பொதுத்துறை வங்கிளி;ன் இணைப்புக்கான மாற்று வழிகள் இந்த குழுவின் முன் வைக்கப்படும். இதை ஆராய்ந்து இந்தக்குழு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மத்திய அமைச்சரவைக்கு பரிந்துரைகள் வழங்கும். இணைப்பின் மூலம் இரண்டிற்கு மேற்பட்ட வங்கிகளைக்கூட ஒன்றாக இணைக்க பரிந்துரைகள் செய்யப்படலாம். இதற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன் இந்திய ரிசர்வ் வங்கி தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கும். எந்த வகையில் வங்கிகளை இணைத்தால் சிறப்பாக இருக்கும் என்று இந்த மாற்றுவழிக்குழு முடிவுசெய்து வங்கிகள் நாட்டுடைமையாக்கல் சட்டம் 1970 மற்றும் 1980இன் அடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளும்.

இறுதிகட்ட செயல்முடிவுகள் மத்தியஅரசின் ஒப்புதலைப்பெற்று நாடாளுமன்ற இரு அவைகளுக்கும் சமர்ப்பிக்கப்படும். இந்த மாற்று இணைப்பை நிதிசார் சேவைகள் அமைச்சகம் செயல்படுத்தும்.

இது அல்லாமல், அடுத்த சில மாதங்களில் ‘இந்திரதனுஷ் 2.0’ என்ற திட்டத்தை அறிவித்து கடன்வழங்கும் எல்லா பொதுத்துறை நிறுவனங்களும் பாசல் III இலக்கின்படி உலகளாவிய நிதிநிறுவனங்களின் நிதிவளமையைப் பெற்று சிறப்பாகச் செயல்படும் வண்ணம் அவற்றிற்கு மேலும் மூலதன நிதி அளிக்க உள்ளது. ஆனால்இ பொதுத்துறை வங்கிகளின் கடன்தரத்தை இந்திய ரிசர்வ் வங்கி முழுவதுமாக ஆராய்ந்த பின்னரே இந்த நடவடிக்கை செயல்படுத்தப்படும். அதன்படி பொதுத்துறை நிறுவனங்களுக்கு மூலதனநிதி வலுவூட்டல், இந்திரதனுஷ் II திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

- **டி.எஸ்.மாலிக்**, தலைமை இயக்குநர் (M&C), இந்திய அரசின் நிதித்துறை

# நிதிசார் உள்ளடக்கலை சாத்தியமாக்குவதில் வங்கிகளின் பங்கு

- சரண்சிங், சிவகுமாரரெட்டி

சமூகத்தின் அனைத்துப்பிரிவினரும், குறிப்பாக எளிதில் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய குழுவினரும் ஏற்கத்தக்க செலவில் நியாயமான, வெளிப்படையான வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள, முதன்மை நீரோட்ட நிறுவனங்களில் பொருத்தமான நிதிசேவைகளைப்பெறுவதற்கும், நிதிசார் முதலீடுகளை செய்வதற்கும் உறுதியை ஏற்படுத்தித்தரும் வழிமுறையே நிதிசார் உள்ளடக்கல் என்பதாகும் (இந்திய அரசு, 2008). எளிதில் பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய மக்கள் குழுவினரின் குறிப்பாக ஏழைகளின் வாழ்க்கையை வங்கி நிதி உதவி மூலம் நிலையான வருமானம் கிடைக்கும்படி செய்து மாற்றியமைப்பதே இதன் நோக்கம். (ரெட்டி, 2017).

உண்மையில், பொதுவான நம்பிக்கைக்கு மாறாக, இந்தியா நிதிசார் உள்ளடக்கலில் முன்னோடியாகத்திகழ்கிறது. கூட்டுறவுக்கடன் சங்கங்கள் சட்டம், 1904 இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்திற்கு உத்வேகத்தை அளித்தது. வட்டிக்கு பணம் கொடுப்பவர்களைக்காட்டிலும் எளிய முறையில் கடன்கள் கிடைக்க வழி செய்வதே கூட்டுறவு வங்கிகளின் நோக்கம். இந்தியாவில், நிதிசார் உள்ளடக்கல் முயற்சிகள் வெளிப்படையாக 19555ஆம் ஆண்டு ஸ்டேட் பாங்க் தேசியமயமாக்கப் பட்டதிலிருந்து தொடங்கியது. 1967இல் சமுதாய வங்கிகள் பற்றிய விவாதம் தொடங்கியது. அதன் பிறகு, 14 தனியார் வங்கிகள் 1969இல் தேசியமயமாக்கப்பட்டன. கடன் வழங்க எந்தப்பிரிவுக்கு முன்னுரிமை தருவது என்பது முக்கியத்துவம் பெற்றது. வங்கிகளை அறியாத மக்களுக்கு கடன் வழங்குவது என்பது இதன் பொருள். 1980இல் மேலும் 8 தனியார் வங்கிகள் பொது உடமையாக்கப்பட்டன. கிராமப்புறங்களில் வசித்துவரும் மக்களுக்கு இவை சேவையை விஸ்தரித்தன. அது முதற்கொண்டு, வங்கிகள் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு போதிய கவனம் செலுத்தி கடன்களை வழங்க ஆரம்பித்தன.

இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI), வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியும் (NABARD) குறு கடன்கள் வழங்குவதிலும், கிராமங்களில் வங்கி முகவர்களை (BCs) நியமிப்பதிலும் ஒருமுகப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. 1975 முதல் மண்டல கிராமப்புற வங்கிகளை உருவாக்கி செயல்படுத்திவருவதும், 1989 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட சேவைப்பகுதி அணுகுமுறையும், சுய உதவிக்குழுக்களை வங்கிகளுடன் இணைக்கும் திட்டம் ஆகியவை பிற வகை முன்முயற்சிகளாகும் (1989, 1990).

மிகச் சமீப ஆண்டுகளில், குறிப்பாக நவம்பர் 2005 முதல் நிதிசார் உள்ளடக்கலுக்காக தனிவகைபட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் எனும் வங்கிகளின் முயற்சியை ரிசர்வ் வங்கி எளிமைப்படுத்தியுள்ளது. எளிய வகை வங்கிக்கணக்குகளை ஆரம்பித்துக்கொள்ளவும், கடன் பெறும் வசதிகளை அதிகரித்தும் ரிசர்வ் வங்கி வழி செய்துள்ளது. வங்கிகளின் நிதிநிலைக்கு பங்கம் ஏற்படாமல், அவற்றின் கடன் வழங்கும் சக்திகேற்ப நிதிசார் உள்ளடக்கலை செயல்படுத்த ரிசர்வ் வங்கி எச்சரிக்கை மிகுந்த கொள்கைகளை வகுத்துள்ளது. வங்கிகளில் தொழில்நுட்ப மேம்பாடுகளை ஊக்குவிக்கவும், கையில் கொண்டுசெல்லக்கூடிய சிறு வகைகருவிகளுடன் உள்ளடங்கிய கிராமங்களுக்கு வங்கிகள் சென்று தாமே முன்னின்று செயலாற்றும் திட்டங்களையும் ரிசர்வ் வங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

## வங்கிச் சேவைகள் அனைவரையும் எட்டுவது குறைவாகவே இருக்கிறது

நிதிசார் உள்ளடக்களுக்கு எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளுக்குப்பிறகும் வங்கிச்சேவைகள் அனைவரையும் எட்டுவது குறைவாகவே இருக்கிறது. வறுமை, குறைவான வருமானம், வங்கிகள்

தொலைவில் இருத்தல் போன்ற பல்வேறு நிலைமைகள்முக்கியமான தடைகளாக இருக்கின்றன. 2011ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 58.7% வீடுகளும், கிராமப்புறங்களில் 54.4% வீடுகளும் மட்டுமே வங்கிச்சேவைகளை அடையக்கூடியவைகளாக இருக்கின்றன (அட்டவணை 1).

**அட்டவணை 1: வங்கிச்சேவைகளைப்பெறும் வீடுகளின் சதவீதம்**

**(வீடுகளின் எண்ணிக்கை கோடிகளில்)**

| வீடுகள் | 2001மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி | | | 2011மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி | | |
|---|---|---|---|---|---|---|
| | வீடுகளின் மொத்த எண்ணிக்கை | வங்கிச் சேவைகளைப் பெறும் வீடுகளின் எண்ணிக்கை | சதவீதம் | வீடுகளின் மொத்த எண்ணிக்கை | வங்கிச் சேவைகளைப் பெறும் வீடுகளின் எண்ணிக்கை | சதவீதம் |
| கிராமம் | 13.8 | 4.2 | 30.1 | 16.8 | 9.1 | 54.4 |
| நகரம் | 5.4 | 2.7 | 49.5 | 7.9 | 5.3 | 67.8 |
| மொத்தம் | 19.2 | 6.8 | 35.5 | 24.7 | 14.5 | 58.7 |

ஆதாரம்: இந்திய அரசு

## இந்தியாவில் வங்கி விரிவாக்கமும், வட்டிக்குக் கடன்கொடுக்கும் தனி நபர்களும்:

அரசாங்கமும், ரிசர்வ் வங்கியும் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக வங்கிக்கிளைகள் அதிகரித்துள்ளன. ஆயினும், வட்டிக்குப்பணம் கொட்டுக்கும் தனி நபர்களும்தொடர்ந்து அதிகமான அளவில் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றனர். 1935ஆம் ஆண்டு ரிசர்வ் வங்கி உருவாக்கப்பட்டபோது இந்தியாவில் 946 வங்கிக்கிளைகளே இருந்தன. மார்ச்1969இல் வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட போது மொத்தம் 8262 வங்கிக்கிளைகளில், 1833 ஊரகக்கிளைகளும், 3342 நகரிய ஊரகக்கிளைகளும் இருந்தன. இவற்றில் இம்பீரியல் வங்கியின் கிளைகள் 160, பங்குச்சந்தைக்கிளைகள் 160, இந்திய பங்கு வணிகக் கிளைகள் 688 ஆகியவையும் அடங்கும். 3 இலட்சம் பேர்களுக்கு ஒரு வங்கிக்கிளை என்ற அளவு தான் இருந்தது. இதுபோன்ற சூழலில் வங்கிகள் தேசியமாக்கப்பட்ட பிறகும் கூட, கிராமப்புறங்களில் தனி நபர்கள் வட்டிக்கு விடுவது அதிகமாக இருந்தது. காரணம் வங்கிக்கிளைகள் மிகக்குறைவு, அவைகளும் தொலைதூரத்தில் இருந்தன. வங்கிக்கிளைகள் மேலும் அதிகரிக்கப்பட்டு, கடன் வழங்குதலை அரசாங்கம் ஊக்குவித்த நிலையிலும் 1991 க்குப்பிறகும் கிராமப்புறங்களில் வட்டிக்குக் கடன்கொடுக்கும் தனி நபர்களின் பங்கு அதிகமாகவே இருக்கிறது. (படம் 1).

**படம் 1: நிறுவனங்கள் சார்ந்த, நிறுவனங்கள் சாராத கிராமப்புற கடன் வழங்கல்:**




குறிப்பு: முறைசாரா வழிகள்: வட்டிக்குப்பணம் தரும் தனி நபர்கள். முறைசார்ந்த வழிகள்: கூட்டுறவு சங்கங்கள்,வங்கிகள், வணிக வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள்.

ஆதாரம்: அகில இந்திய கடன் மற்றும் முதலீட்டுக் கணக்கெடுப்பு, NSSO.

## அரசாங்கத்தின் சிறப்புவகை முயற்சிகள்:

ஒவ்வொரு வீட்டிற்க்கும் வங்கிக்கணக்கு இருக்கவேண்டும் என்ற பிரதமரின் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதம மந்திரி ஜன் தன் யோஜ்னா (PMJDY) திட்டம்ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு வங்கிக்கணக்காவது இருக்கவேண்டும் என்ற

நோக்கத்தோடு செயல்பட்டுவருகிறது. டிசம்பர் 6, 2017 கணக்கின்படி 30.7 கோடி வங்கிக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 18.1 கோடி கணக்குகள் கிராமப்புறங்களிலும், 12.7 கோடி கணக்குகள் நகர்ப்புறங்களிலும் தொடங்கப்பட்டுள்ளன. ரூபே அட்டைகளின் எண்ணிக்கை 23.1 கோடியாக அதிகரித்துள்ளது. இதன் முன்னேற்றம் திருப்தி அளிப்பதாக இருக்கிறது. டிசம்பர் 6, 2017 கணக்கின்படி வணிக வங்கிகளில் ரூ.69,841.2 கோடி வைப்புப் பணம் வங்கிகளால் பெறப்பட்டுள்ளது (அட்டவணை 2).

**அட்டவணை 2: பிரதமரின் ஜன்தன் யோஜ்னா திட்டத்தின் நிலவரம் (டிசம்பர் 6, 2017 கணக்குப்படி) (கோடிகளில்)**

| வங்கியின் பெயர்/வகை | பயனடைந்தோர் எண்ணிக்கை | | | கணக்குகளில் வைப்பு (கோடிகளில்) | பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள ரூபே அட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | கிராமம் | நகரம் | மொத்தம் | | |
| பொதுத்துறை வங்கிகள் | 13.3 | 11.5 | 24.8 | 55646.6 | 18.6 |
| மண்டல ஊரக வங்கிகள் | 4.2 | 0.8 | 4.9 | 12033.9 | 3.6 |
| தனியார் வங்கிகள் | 0.6 | 0.4 | 1.0 | 2160.6 | 0.9 |
| ஒட்டு மொத்தம் | 18.1 | 12.7 | 30.7 | 69841.2 | 23.1 |

ஆதாரம்: இந்திய அரசு https://pmjdy.gov.in/account

நகரங்களிலும், பெருநகரங்களிலும் வங்கிக்கிளைகள் அதிகரித்ததைப் போலவே கிராமங்களிலும் வங்கிக் கிளைகள் அதிகரிக்கத் தொடங்கின (அட்டவணை 3).

**அட்டவணை 3:**
**வசிப்பிடங்கள் வாரியாக வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை**

| ஆண்டு | கிராமம் | நகரிய கிராமம் | நகரம் | பெருநகரம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1969 | 1833 | 3342 | 1584 | 1503 | 8262 |
| 1979 | 13337 | 7889 | 5037 | 3939 | 30202 |
| 1989 | 33014 | 11166 | 7524 | 5995 | 57699 |
| 1999 | 32857 | 14168 | 9898 | 8016 | 64939 |
| 2009 | 30943 | 19282 | 15356 | 14288 | 79869 |
| 2017 | 48806 | 38201 | 24574 | 26478 | 138059 |

குறிப்பு: வங்கிகளின் நிர்வாக அலுவலகங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

ஆதாரம்: இந்தியப்பொருளாதாரப்புள்ளிவிவரம் பற்றிய ரிசர்வ் வங்கி கையேடு.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், ஸ்டேட் வங்கியும் அதன் தோழமை வங்கிகளும் கிராமப்புறங்களில் அதிகமான கிளைகளை ஆரம்பித்தன (அட்டவணை 4).

**அட்டவணை 4:**
**வங்கிகள் வாரியாக கிளைகளின் எண்ணிக்கை - 2015**

| வங்கியின் வகை | கிராமம் | நகரிய கிராமம் | நகரம் | பெருநகரம் | கூடுதல் |
|---|---|---|---|---|---|
| ஸ்டேட் வங்கியும் அதன் இணைவங்கிகளும் | 8029 | 6593 | 4304 | 3622 | 22548 |
| பொதுத்துறை வங்கிகள் | 21605 | 16956 | 13083 | 11703 | 63347 |
| மன்டல ஊரக வங்கிகள் | 14613 | 3748 | 1071 | 228 | 19660 |
| தனியார் வங்கிகள் | 4302 | 6457 | 4521 | 4698 | 19978 |
| வெளிநாட்டு வங்கிகள் | 8 | 12 | 57 | 247 | 324 |
| இந்தியாவில் மொத்தம் | 48557 | 33766 | 23036 | 20498 | 125857 |

ஆதாரம்: இந்திய அரசு

பொதுத்துறை வங்கிகள் காலகாலமாக சமுதாய வங்கியியலில் ஈடுபட்டுவருகின்றன. வங்கி வசதி இல்லாத இடங்களில் கிளைகளை உருவாக்கி சேவையாற்றிவருகின்றன. தனியார் துறை வங்கிகளும் அண்மைக்காலங்களில் ஊரகச் சேவைகளில் ஈடுபட்டுவருகின்றன (அட்டவணை 5).

**அட்டவணை 5: வங்கிகளில் கடன் நிலுவை**

**(கணக்குகள் மில்லியனில், தொகை பில்லியன் ரூபாயில்)**

| வங்கியின் வகை | 1996 மார்ச் | | 2016 மார்ச் | |
|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | வசூலாகாத கடன் தொகை | கணக்குகளின் எண்ணிக்கை | வசூலாகாத கடன் தொகை |
| ஸ்டேட் வங்கியும் அதன் இணைவங்கிகளும் | 14.2 | 742 | 26.8 | 16113 |
| பொதுத்துறை வங்கிகள் | 25.7 | 1300 | 56.4 | 35146 |
| மன்டல ஊரக வங்கிகள் | 13.1 | 73 | 23.4 | 2068 |
| தனியார் வங்கிகள் | 2.4 | 202 | 50.3 | 18129 |
| வெளிநாட்டு வங்கிகள் | 1.2 | 229 | 5.5 | 3770 |
| இந்தியாவில் மொத்தம் | 56.7 | 2547 | 162.4 | 75226 |

ஆதாரம் ரிசர்வ் வங்கி

வணிக வங்கிகள் நாட்டின் வடக்குப்பகுதியில் உள்ள கிராமப்புற, நகர்ப்புற கிராமங்களுக்கு கடன் வழங்குவதில் குறிப்பிடத்தகுந்த பங்கினைச் செய்தன (அட்டவணை 6). நாட்டின் கிழக்கு, வடகிழக்குப் பகுதிகளிலும்னகர்ப்புறக்கடங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இருந்தது.

**அட்டவணை 6: வணிக வங்கிகளின் கடன் வழங்கல்;**

**(ரூபாய் பில்லியனில்)**

| | 1996 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமம் | நகரிய கிராமம் | நகரம் | பெருநகரம் | கிராமம் | நகரிய கிராமம் | நகரம் | பெருநகரம் |
| வடக்கு மண்டலம் | 77 | 53 | 85 | 261 | 1774 | 1990 | 2964 | 10502 |
| வடகிழக்கு மண்டலம் | 12 | 8 | 8 | | 181 | 252 | 220 | - |
| கிழக்கு மண்டலம் | 59 | 37 | 46 | 116 | 866 | 714 | 1351 | 2837 |
| மத்திய மண்டலம் | 66 | 58 | 71 | 47 | 1352 | 1226 | 2231 | 1708 |
| மேற்கு மண்டலம் | 64 | 57 | 60 | 646 | 913 | 1368 | 1414 | 20703 |
| தெற்கு மண்டலம் | 109 | 155 | 172 | 278 | 2270 | 3813 | 4784 | 9789 |
| இந்தியாவில் மொத்தம் | 386 | 369 | 444 | 1348 | 7358 | 9363 | 12966 | 45540 |

ஆதாரம்: ரிசர்வ் வங்கி.

வேளாண்துறைக்கு அதிகமாகக் கடன் வழங்குவதில் ஊரகவங்கிகள், கூட்டுறவு வங்கிகளைக்காட்டிலும் வணிக வங்கிகள் வெற்றிகரமாகச் செயல்பட்டன (அட்டவணை 7).

**அட்டவணை 7: வேளாண் கடன் இலக்குகளும் சாதனையும்**

**(ரூபாய் பில்லியனில்)**

| ஆண்டு | வணிக வங்கிகள் | | கூட்டுறவு வங்கிகள் | | ஊரக வங்கிகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 2013-14 | 4,750 | 5,090 | 1,250 | 1,199 | 1,000 | 827 | 7,000 | 7,116 |
| 2016-17 | 6,250 | 7,998 | 1,500 | 1,428 | 1,250 | 1,232 | 9,000 | 10,658 |

ஆதாரம்: ரிசர்வ் வங்கி ஆண்டறிக்கை

**கடன் வழங்குவதை அதிகரிக்க புதுமையான முயற்சிகள்:**

வங்கி வசதி இல்லாத பகுதிகளில் வங்கி சேவைகளை வழங்குவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நடமாடும் வங்கிகள், வங்கி கியோஸ்க்குகள், வங்கி முகவர்கள் போன்ற பலவகையான மாற்று முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. வங்கிகளுக்குள் நுழைந்திராத ஏராளமானவர்களுக்கு வங்கி சேவையை அவர்கள் வசிக்கும் இடத்தைத் தேடிச்சென்று முகவர்கள் மூலம் வழங்க முயற்சி நடக்கிறது. இதனால் வாடிக்கையாளர்களுக்கு போக்குவரத்து செலவும் இதர செலவுகளும் குறைகின்றன. நேரமும் மிச்சமாகிறது. வேலைகள் பாதிப்பதில்லை. வங்கி முகவர்கள் வசதி இப்போது நகர்ப்புற குடிசைப்பகுதிகள், உள்ளடங்கிய ஊரகப்பகுதிகளில் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 6 இலட்சம் கிராமங்களுக்கு வங்கிச்சேவைகளை வணிகவங்கிகள் வெற்றிகரமாக விரிவுபடுத்தியுள்ளன. மார்ச் 2010இல் 33,378 ஆக இருந்த வங்கிச்சேவை மையங்கள் 2017 மார்ச்சில் 50,860 ஆக அதிகரித்துள்ளன. வங்கி முகவர்கள் சேவை 34,316 என்ற எண்ணிக்கையிலிருந்து மிக அதிக அளவு அதிகரித்து 5,47,233 ஆக உள்ளது. வங்கிப்பரிமாற்றங்கள், வங்கிக்கணக்கு எண்ணிக்கைகள் ஆகியவற்றில் கடந்த 7 ஆண்டுகளில் பன்மடங்கு வளர்ச்சி காணப்படுகிறது (அட்டவணை 8). வங்கி முகவர்கள் மூலம் வங்கிகளில் செலுத்தப்பட்டுள்ள தொகை ஏறத்தாழ 26 மடங்கும், வங்கிகிளைகள் மூலம் செலுத்தப்பட்டுள்ள தொகை 15 மடங்கும் அதிகரித்துள்ளன. தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ள வங்கிப்பரிமாற்றங்கள் கடந்த காலங்களில் அதிகமாகியுள்ளன. பிரதமரின் ஜன் தன் யோஜனா திட்டம் 2014க்குப்பிறகு மிகச்சிறந்த பலன்களை அளித்துவருகிறது.

**அட்டவணை 8: நிதிசார் உள்ளடக்கலில் வங்கிகளின் செயல்பாடுகள்**

ஆதாரம்: ரிசர்வ் வங்கி

**(மார்ச் மாத்துடன் முடிவுற்ற ஆண்டு)**

| தொகை (பில்லியன் ரூபாயில்) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | வங்கி சேமிப்புக் கணக்கு | | மிகைப்பற்றுக் கணக்கு | விவசாயி கடன் அட்டை | பொது கடன் அட்டை | தகவல் தொடர்பு தொழில் நுட்பங்கள் |
| | கிளைகள் | வங்கிமுகவர்கள் | | | | |
| 2010 | 44 | 11 | 0.1 | 1,240 | 35 | 7 |
| 2014 | 273 | 39 | 16 | 3,684 | 1,097 | 524 |
| 2017 | 691 | 285 | 17 | 5,805 | 2,117 | 2,652 |

| அளவு (Million) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | வங்கி சேமிப்புக் கணக்கு | | மிகைப்பற்றுக் கணக்கு | விவசாயி கடன் அட்டை | பொது கடன் அட்டை | தகவல் தொடர்பு தொழில் நுட்பங்கள் |
| | கிளைகள் | வங்கிமுகவர்கள் | | | | |
| 2010 | 60 | 13 | 0.2 | 24 | 1 | 27 |
| 2014 | 126 | 117 | 6 | 40 | 7 | 329 |
| 2017 | 254 | 280 | 9 | 46 | 13 | 1,159 |



**குறிப்பிட சில பிரச்சினைகளும் யோசனைகளும்:**

நிதிசார் உள்ளடக்கல் முயற்சியில் காணப்படும் சில இடைவெளிகள் பற்றி ஆராய்வது அவசியம். முதலில், நிதிசார் உள்ளடக்கலில் மாற்றுத்திறனாளிகள், முதியோர், பார்வைத்திறன், கேட்கும் திறன் பாதிக்கப்பட்டோர் ஆகியோரைச் சேர்க்கவேண்டும். ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுநெறிமுறைகள் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் அணுகக்கூடியதாக இருக்கவேண்டும். மிகச்சில கிஜிவிகளும், வங்கிக்கிளைகளும் மட்டுமே மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடியவைகளாக இருக்கின்றன.

நிதிசார் உள்ளடக்கலை விரிவாக்குவதற்கு ஏராளமான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால், கருவிகள் அடிக்கடி பழுதாவதும், தொலைத்தொடர்பு இணைப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளும், கையடக்கக்கருவிகளில் உள்ள பிரச்சினைகளும் முறைசார வங்கிப்பரிவர்த்தனைகளில் சங்கடங்களை உருவாக்குகின்றன. கைரேகை, கண்ணின் கருவிழி அடையாளங்களை அணுகக்கூடிய கையடக்கமான பன்மொழிக் கருவிகள் ஊரக மக்களிடம் நம்பிக்கையை உருவாக்கத் தேவைப்படுகின்றன. பணம் செலுத்தவும், எடுக்கவும் உதவக்கூடிய சிறுகருவிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். புதிய கணக்குகளைத் தொடங்குவதற்கு ஆவணங்களை நுட்பமாகப் படம்பிடிக்கும் கருவிகள் தேவை.

ஊர்க மக்களின் சமூக பொருளாதர் நிலைகளை கணக்கில் கொண்டு நெகிழ்ச்சியுடைய வங்கி முதலீட்டுத்திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். உதாரணமாக, வணிக வங்கிகளில் உள்ள மாதம் தோறும் தொடர்ந்து முதலீடு செய்யும் திட்டங்கள் (RD) மாத ஊதியம் பெறுவோருக்குப் பொருத்தமான வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன. இவற்றை ஊரக மக்களின் வருவாய்க்கும், தன்மைக்கும் ஏற்ப மாற்றி அமைக்கவேண்டும்.

நிதிசார் உள்ளடக்கலை கண்காணிக்கும் பொறுப்பை அர்ப்பனனிப்பு கொண்டுள்ள நிதிநிறுவனங்களிடம் அளிக்கவேண்டும். வேலாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசியவங்கி (National Bank for Agriculture and Rural Development – NABARD) இதற்குப்பொருத்தமானது.

நிதியைக்கையாளும் அறிவினை வழங்குவது சவால் மிகுந்த காரியம். வங்கிகள் இதற்குப் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. நிதியைக்கையாளும் அறிவினை வழங்குவதற்கு கல்லூரிகள் அளவில் வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்துவதையும், காமிக் புத்தகங்கள் வெளியிடுவதையும், மாஜிக் காட்சிகள் நடத்துவதையும் சில வங்கிகள் செய்கின்றன. வாடிக்கையாளர்களுடன் நல்லுறவு இருப்பது மிக முக்கியமானது ஆகும். இதற்கான தகவல்களை தரப்படுத்துவது அவசியம்.

**முடிவுரை:**

வணிக வங்கிகளும், குறிப்பாக பொதுத்துறை வங்கிகளும் நிதிசார் உள்ளடக்கலை நாட்டில் ஏற்படுத்த கிராமங்களிலும், நகரிய ஊரகப்பகுதிகளிலும் மிக முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளன. வங்கிகளின் கிளைகள் அதிகரிக்கப்படுவதுடன் காப்பீடு, ஓய்வூதிய முதலீடுகளை இந்தப்பகுதிகளில் அதிகரிக்கவும் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

---

- **சரண்சிங்**, பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைக் கழகத்தின் முன்னாள் ஆராய்ச்சி இயக்குநர்.

- **சிவகுமாரரெட்டி**, பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைக் கழகத்தில் பகுபாய்வாளர்

# இந்தியாவில் கிராம வங்கிச்சேவை சந்திக்கும் பிரச்சினைகளும், சவால்களும்

- மஞ்சுளா வாத்வா

“இந்தியா கிராமங்களில்தான் வாழ்கிறது” என்று நமது தேசத்தந்தை கூறியதற்கு ஏற்ப ஊரக வளர்ச்சியானது, இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் கட்டாயத்தேவையாக இருக்கிறது. நாடு சுதந்திரம் பெற்றதில் இருந்து நமக்கான கொள்கைளை வகுப்பவர்கள் இந்தியாவில் ஊரக வளர்ச்சிக்குப் போதுமான முக்கியத்துவத்தைத் தொடர்ந்து அளித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த 70 ஆண்டுகளில், கூட்டுறவுக்கடன் அமைப்புகளை உருவாக்கியதில் இருந்து, பொதுத்துறை வங்கிகளை தேசியமயமாக்கி அவற்றின் கிளைகளை ஊரகப்பகுதிகளில் தொடங்கி வங்கிச்சேவைகளை விரிவாக்கி, 1976ஆம் ஆண்டில் மண்டல ஊரக வங்கிகளைத்தொடங்கியது வரை இந்தியாவில் முறைசார் ஊரக நிறுவனக்கட்டமைப்பு உருப்பெற்று பன்மடங்காக விரிவு பெற்றுள்ளது. இந்த அளவிற்கு விரிவாக்கத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தபோதிலும் நமது ஊரகமக்கள் தொகையின் பெரும் பகுதியினர் துரதிருஷ்டவசமாக இன்னமும் நிதிசார் சேவையைப் பெறமுடியாதவர்களாகவே இருக்கின்றனர். இவர்கள் இன்னமும் வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களின் பிடியில் சிக்கித்தவிக்கின்றனர். இதுதான் இன்று மிகவும் அக்கறையுடன் கவனிக்கப்படவேண்டிய ஒரு விஷயமாக உள்ளது.

இன்றைய காலகட்டத்தில்கூட உலகஅளவில் வங்கிச்சேவையைப் பெறாத வயது வந்தோரில் 24சதவிகிதம் பேர் நமது நாட்டில்தான் உள்ளனர்.



அதாவது தெற்காசியாவில் வங்கிச்சேவையைப் பெறாத வயது வந்தோரில் மூன்றில் இரண்டு பங்கினர் நம் நாட்டினர்தான். வங்கிச்சேவையைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கக்கூடிய ஊரகப்பகுதிகளில் வசிக்கும் சுமார் 31கோடி இந்தியர்கள் முறைசார்ந்த வங்கிச்சேவையைப் பெறஇயலாதவர்களாக உள்ளனர். எஸ்.எல்.பி.சி அளித்துள்ள அறிக்கையில் ஜுன் 30, 2016 அன்றுள்ளபடி இந்தியாவில் உள்ள மொத்தம் 6,00,000 கிராமங்களில் 4,52,151 கிராமங்களுக்கு வங்கிச்சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதில் 14,976 கிராமங்கள் வங்கிக்கிளைகள் மூலமும், 4,16,636 கிராமங்கள் வணிகத்தொடர்பாளர்கள் (பி.சி) மூலமும் சேவை பெறுகின்றன. 20,539 கிராமங்கள் ஏ.டி.எம்கள், மொபைல் வேன் முதலான பிறமுறைகள் மூலம் வங்கிச்சேவையைப் பெறுகின்றன. குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய விஷயம் என்னவென்றால், பௌதீக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் மோசமாக இருக்கும் நிலைமையே நிதிசார் சேவைகைளை அணுகிப்பெறுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதாகும். ஊரக இந்தியாவில் மின்சாரவசதி எந்த அளவிற்குக் கிடைக்கிறது என்கின்ற உண்மை நிலையானது இங்கே தரப்படுகின்றது.

ஊரகப்பகுதி மக்களின் சராசரியான எழுத்தறிவு விகிதம் 71% என்ற நிலையில், பெரும்பாலான கிராமப்புற இந்தியர்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே திறந்திருக்கும் வங்கிக் கிளைகளுக்குச் சென்றுவந்தால், அவர்களின் வேலை கெட்டு ஒரு முழு நாள் கூலியைத் தியாகம் செய்ய வேண்டியதாக உள்ளது. அரசு சாராத தொண்டு நிறுவனங்கள், சுயஉதவிக்குழுக்கள், சிறுகடன் அளிக்கும் நிறுவனங்கள், வணிகத்தொடர்பாளர்கள் போன்ற ஓரளவு முறைசார் சேவை அளிப்பவர்களையும், வர்த்தக உதவியாளர்கள் போன்று இடைநிலையில் உதவுபவர்களையும் வங்கிகள் பயன்படுத்தி, ஊரக மக்கள் கடன்சேவைகளையும், சேமிப்புச்சேவைகளையும் பெற உதவுகின்றனர். எனினும், இந்த வழிமுறையில் சில குறிப்பிட்ட சேவைகள் மட்டுமே வழங்கப்படுகின்றன. மேலும் இந்த வழிமுறைகளில் பல இடைவெளிகளும் உள்ளன.

**இந்தியாவை மின்மயமாக்குதல்**
**மின்வசதி பெற்றுள்ள கிராமப்புற வீடுகளின் சதவீதம்**




இவை தவிர, பல வங்கிகள் ஊரகச்சந்தையை பொருளாதார மேம்பாட்டு வாய்ப்பாகப் பார்க்காமல், நெறிமுறைப்படுத்துவதற்கு தேவையுள்ள ஒரு

சந்தையாகவே பார்க்கின்றன. இதற்கான வெளிப்படையான காரணங்களில் சில இங்கு தரப்படுகின்றன: ஊரகப்பகுதியில் உள்ள வீடுகளில் வருவாயும், செலவு முறைகளும் சீரற்று இருப்பதால், இங்கு வாராக்கடன்கள் வங்கிகளுக்கு அதிகமாகவே உள்ளன. ஊரகப்பொருளாதாரம் என்பது பருவமழை மாற்றங்களையே பெரிதும் சார்ந்திருப்பதால் இந்த நிலையானது பிரச்சினையை மேலும் பெரிதாக்குகிறது. அரசியல்ரீதியாக முன்னெடுக்கப்படும் கடன் தள்ளுபடி நடவடிக்கைகள் வங்கியாளர்களின் சிரமத்தை மேலும் அதிகரித்துவிடுகின்றன. கிராமங்களில் வைப்புநிதி பரிமாற்றம், கடன் பரிமாற்றம் ஆகிய இரண்டுக்குமான சராசரித்தொகை அளவானது சிறியதாகவே இருக்கிறது. இதன் அர்த்தம் என்னவென்றால், வங்கியின் ஒரு கிளை அல்லது விநியோக அமைப்பு இலாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் இயங்க அதிக அளவிலான வாடிக்கையாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்பதுதான். ஊரக மக்களில் பெரும்பகுதியினர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருப்பதால் ஏ.டி.எம், மொபைல் மூலமான வங்கிச்சேவை அல்லது இணையம் மூலமான வங்கிச்சேவை போன்ற தொழில்நுட்பம் சார்ந்து இயங்கும் விநியோகச்சேவை முறைகளை ஊரகமக்களால் எளிதாகப் பயன்படுத்த முடிவதில்லை. எனவே, அவர்கள் வங்கிக்கிளையையே பெரும்பாலும் சார்ந்து இருக்கிறார்கள். இதனால் சேவை வழங்கும் செலவானது வங்கிகளுக்கு அதிகரிக்கிறது. சீரற்ற வருவாய், வெகு சீக்கிரத்தில் செலவாகிவிடும் கையிருப்பு, எதிர்பாராமல் செய்யவேண்டிய மருத்துவச்செலவுகள், குடும்பத்திற்கான அவசரகாலச்செலவுகள் ஆகியன ஊரகப்பகுதி மக்களுக்கு தரப்பட்டக் கடன்களைத் திரும்பப்பெறுவதில் வங்கிகளுக்கு பாதகமான காரணிகளாக உள்ளன.

ஏழ்மை நிலையில் உள்ள பிரிவினருக்கு அடிப்படையான சேமிப்புச்சேவைகளும் உற்பத்திச்செலவுகள், அவசரக்காலச் செலவுகளுக்கான சிறுகடன் வசதியும் தேவைப்படுகின்றன. விவசாயிகளுக்கும், விவசாயிகளின் சங்கங்களுக்கும் பெரிய அளவில் கடன் தேவைப்படுகிறது. உற்பத்தி, விவசாய உள்ளீட்டுப்பொருட்கள், பதப்படுத்துதல்,




“கிராமமக்களும் வங்கிச்சேவையைப் பெறக்கூடியவர்கள்தான்'' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய ஊரக நிதிச்சேவைக்கான முறை உருவாக்கப்பட வேண்டும். அதே போன்று, ஊரக வாடிக்கையாளர் என்றால் விவசாயிகள் மற்றும் படிக்காதவர்கள் என்று மட்டுமே வரையறை வைத்துக்கொள்ளாமல் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொண்டு பயன்படுத்தவும் கூடிய ஒரு தலைமுறையையும் உள்ளடக்கவேண்டும். இதன் மூலம், தேவையை மையமாகக் கொண்ட வடிவமைப்பு, பலவித நிதிச்சேவைத் திட்டங்கள், சேவைகளை வழங்கக் கூடிய திறன் ஆகியன அனைவரையும் உள்ளடக்கிய நிதிச்சேவைத்துறை மூலம் உருவாக்கப்படவேண்டும். பலதரப்பட்ட ஊரக வாடிக்கையாளர்களுக்கு சேவை அளிக்கும் நீடித்த, நிலையான நிறுவனங்கள் கொண்ட நிதிச்சேவை பிரிவுதான் இன்றைய காலத்தின் தேவையாகும். அனைவரையும் உள்ளடக்கியதாக அதேசமயம் நீடித்து இருப்பதான ஊரக நிதிச்சேவை அமைப்பை உருவாக்கி அபிவிருத்தி செய்வது மிகவும் சவாலானதாக உள்ளது. இதனோடு உருவாகின்ற பிரச்சினைகளை முழுமையாகப் புரிந்துகொள்ளவும் வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைகளை 7 பெரும் பிரிவாகக் கீழ்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம். அவை:

1. வங்கிச்சரக்குகளின் செயல்உத்தி
2. செயல்முறைகள்
3. கூட்டுவணிகம்
4. பாதுகாப்பு
5. இலாபம்
6. உற்பத்தித்திறன்
7. ஊழியர்

**1. வங்கிச்சரக்குகளின் செயல் உத்தி**: குறைந்த அளவு நிதிப்பரிமாற்றங்களை மேற்கொள்பவர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்வதற்காக, வசதிக்கேற்ற நெகிழ்ச்சித்தன்மை, தொடர்ந்து கிடைத்தல் மற்றும் வங்கிச் சரக்குகளை கையாளுவதில் சௌகரியம் ஆகிய விஷயங்களை விட்டுக் கொடுக்காமல் பல்வேறு வகைப்பட்ட வங்கிச்சரக்குகள் மற்றும் சேவைகள் தொகுப்பை உருவாக்கமுடியுமா? வறுமையைக் குறைக்கவும் பின்தங்கிய ஊரகப் பகுதிகளில் வளர்ச்சி விகிதங்களை அதிகரிக்கவும் உதவக்கூடிய அளவு தாக்கத்தை அதிக அளவில் எந்த விதமான வங்கிச்சரக்குகள் ஏற்படுத்தும்?

**2. செயல்முறைகள்**: பின்தங்கியவர்கள், பாதிப்புக்கு ஆளாகக்கூடிய மக்கள் பிரிவினரைச் சென்றடைந்து சேவைகளை அளிக்க வங்கிகளுக்கு எந்தவிதமான வர்த்தகச் செயல்முறைகள் உதவியாக இருக்கும்? நிதிப்பொருத்தப்பாட்டுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் வாடிக்கையாளர்களை அவர்கள் இருக்கும் இடத்துக்கே சென்று நடைமுறைச் சிக்கல்கள் இல்லாமல் சேவைகளை அளிக்க எத்தகையச் செயல்முறைகள் உதவியாக இருக்கும்?

**3. கூட்டு வணிகம்**: பல்வேறு வகையான சேவை அளிப்பவர்களிடம் இருந்து நிதிசார்சேவைகளை அணுகிப்பெறுவதில் வங்கிச்சேவைகளையே பெறாத/ போதுமான வங்கிச்சேவை பெறாத மக்கள் பிரிவினர் எதிர்கொள்ளும் தடைகள் யாவை? வணிகத் தொடர்பாளர்கள் (பி.சி), சுயஉதவிக்குழுக்கள், சிறுகடன் அளிக்கும் நிறுவனங்கள் (எம்.எஃப்.ஐ) போன்ற வங்கி - வங்கிசாராத கூட்டுவணிகம் நிதிசார் சேவைகளை அணுகுதல் மற்றும் பெறுதலில் திறம்படச் செயலாற்றுகிறதா?

**4. பாதுகாப்பு**: மோசடிகளில் இருந்தும், நிதிச்சேவைகளைத் தவறாகப் பயன்படுத்தப்படுவதில் இருந்தும் ஊரக நிதிச்சேவைகளை அளிப்பவர்கள், பெறுபவர்கள் என இரு தரப்பினரையும் பாதுகாப்பதற்குத் தேவைப்படும் நடவடிக்கைகளும், ஏற்பாடுகளும் யாவை?

**5. இலாபம்**: ஊரகப்பகுதி வாடிக்கையாளர்களுக்கு சிக்கனமாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலும் சேவைகள் வழங்குவதை ஊக்குவிக்கக்கூடிய வகையில் வர்த்தகச்செயல் உத்திகளும், விநியோக மாதிரிகளும் இருக்கின்றனவா? அதேசமயம் ஊரக நிதிச்சேவையை வழங்குபவர்கள் நீண்டகால அடிப்படையில் இலாபகரமாக செயல்படுவதை இவை உறுதி செய்கின்றனவா? பொருத்தமான விலை மாதிரியின் மூலமாக பணம் செலுத்தவிரும்பும் வாடிக்கையாளரின் விருப்பத்தை நாம் எவ்வாறு நிறைவு செய்வது?

**6. உற்பத்தித்திறன்**: ஊரகப்பகுதிகளில் வழங்கப்படும் நிதிசார் சேவைகளின் உற்பத்தித்திறனை நாம் எவ்வாறு அதிகப்படுத்துவது? நிதிசார் சேவைகள் மேலும் ஆக்கப்பூர்வமாகவும் உகந்த சரியான அளவிலும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு நிதியோடு இதர மூலவளங்களை (உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானால் ''கிரெடிட் பிளஸ்'' அணுகுமுறை) ஒருங்கிணைப்பதற்குத் தேவைப்படும் உத்திகள் யாவை?

**7. ஊழியர்**: வங்கியின் ஊரகக்கிளைகளில் பணியாற்றும் ஊழியர்கள், அனைவருக்கும் வங்கிச்சேவை என்று இப்போது மேற்கொள்ளப்படும் இயக்கத்தின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அளவிற்கு திறம்படைத்தவர்களாக இருக்கிறார்களா? அதாவது அறிவுநிலை, தொழில்சார்திறன் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றில் அவர்கள் திறன்படைத்தவர்களாக இருக்கிறார்களா? எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களாக மாறக்கூடியவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குத் தக்க சமயத்தில் ஆலோசனையும் கூடவே தேவைப்படும் பல்வேறு வங்கிச் சேவைகளை அளிக்கவும் இந்த ஊழியர்களுக்கு திறன், புரிதல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு இருக்கிறதா?

நெல்சன் மண்டேலா இவ்வாறு கூறி இருக்கிறார், ''அதிக வசதி படைத்தவர்களுக்குக் கூடுதலான வசதிகளை ஏற்படுத்தித்தருகிறோம் என்பது நமது வளர்ச்சிக்கானது அல்ல. மாறாக ஒன்றும் இல்லாதவர்களுக்குப் போதுமான அளவு வசதியை ஏற்படுத்தித்தருவதுதான் வளர்ச்சிக்கான சவால் ஆகும்''. இப்போது நாம் இந்தச்சோதனையில் இறங்கிப்பார்ப்போம். ஊரக வங்கிச் சேவைகள் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும்



பார்வையை உள்ளடக்கி நமது அரசு எடுத்துவரும் முன்னோடி நடவடிக்கைகளை இப்போது அலசி ஆராய்வோம்.

இந்தியாவில் அனைவருக்கும் நிதிச்சேவை என்பதை நோக்கிய முறையான முயற்சி 2005இல் எடுக்கப்பட்டது. இந்த நிதிச்சேவையை இந்தியன் வங்கியின் தலைவர் கே.சி.சக்கரவர்த்தி தொடங்கிவைத்தார். கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வங்கிச்சேவைகள் கிடைக்கின்றன என்ற பெருமையுடன் இந்தியாவின் முதல் கிராமமாக மங்கலம் கிராமம் மாற்றப்பட்டது. பாரத ரிசர்வ் வங்கி அனைவருக்கும் நிதிச்சேவைகள் என்ற நடவடிக்கைகளை ஒரு இயக்க அணுகுமுறை போன்று மேற்கொண்டது. புதிய வங்கிச்சரக்குகளை அறிமுகப்படுத்துதல், கறாரான நெறிமுறைகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், நீடித்த வகையிலும், எண்ணிக்கையில் மதிப்பிடக்கூடிய வகையிலும் நிதிச்சேவைகள் அனைவருக்கும் கிடைக்கச்செய்தல் போன்ற மற்ற ஆதரவான நடவடிக்கைகள் எனப் பல செயல்உத்திகளை ஒருங்கிணைத்து இந்த இயக்கச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகள் இங்கே தரப்படுகின்றன. பணம் டெபாசிட் செய்யாமலேயே வங்கிக்கணக்கு ஆரம்பித்தலை ஊக்கப்படுத்துதல், சிறு அளவில் மேற்கொள்ளப்படும் வைப்புத்தொகைகளுக்கும், கடன்களுக்கும் பொதுக்கடன் அட்டைகள் (ஜி.சி.சி) தருதல், ஆண்டு டெபாசிட் ரூபாய் 50,000க்கும் குறைவு என்ற அளவுடன் கணக்குகளை ஆரம்பிக்க நினைப்பவர்களுக்கு விதிகளைத் தளர்த்துதல் ஆகியன சில நடவடிக்கைகள் ஆகும். எளிதில் கடன் கிடைக்கச்செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏழைகளுக்கும் முன்னுரிமை இல்லாத பிரிவினருக்கும் பொதுக்கடன் அட்டைகள் (ஜி.சி.சி) வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் சிக்கல்கள் ஏதும் இல்லாமல் கடன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில், 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வங்கிகளால் 50 மில்லியனுக்கும் மேல் விவசாயக்கடன் அட்டைகள் (கே.சி.சி) வழங்கப்பட்டு உள்ளன. ஜனவரி 2006இல் பாரத ரிசர்வ் வங்கியானது அரசு சாராத தொண்டு நிறுவனங்கள், (என்.ஜி.ஓ / எஸ்.ஹெச்.ஜி), சிறுகடன் வழங்கும் நிறுவனங்கள், ஏனைய சிவில் அமைப்புகள் ஆகியவற்றின் சேவைகளை நிதிச்சேவைகள் மற்றும் வங்கிச் சேவைகளை வழங்க இடைநிலையினராக (இடைத்தரகர்) வர்த்தகவங்கிகள்

பயன்படுத்திக்கொள்ளலாம் என அனுமதித்தது. இந்த இடைநிலையினர் வர்த்தக வங்கிகளின் சார்பாக வர்த்தகஉதவியாளர்களாக அல்லது வணிக உதவியாளர்களாக செயல்படுகின்றனர். மேலும், வர்த்தகவங்கிகளை அனைவருக்கும் நிதிச்சேவை என்ற பிரச்சார இயக்கத்தைத் தொடங்குமாறு பாரத ரிசர்வ் வங்கி அறிவுறுத்தி உள்ளது. இதன் பயனாக, புதுச்சேரி மற்றும் சில யூனியன் பிரதேசங்கள், இமாச்சலப்பிரதேசம், கேரளா போன்ற மாநிலங்கள் தங்களது அனைத்து மாவட்டங்களிலும் அனைவருக்கும் நிதிச்சேவை அளிக்கப்பட்டுள்ளது என அறிவித்துள்ளன. பாரத ரிசர்வ் வங்கியின் 2020ஆம் ஆண்டுக்கான தொலைநோக்கு பார்வையானது சுமார் 600 மில்லியன் புதிய வாடிக்கையாளர் கணக்குகள் தொடங்கப்பட்டு தகவல்தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் பல்வேறு விநியோகமுறைகள் மூலம் சேவைகள் அளிக்கப்படவேண்டும் எனச்சொல்கிறது. ஆனால் அதேசமயம் பல மாநிலங்களில் அனைவருக்கும் நிதிச்சேவை என்ற இலக்கை அடைவதில் தடைக்கற்களாக எழுத்தறிவு இன்மை, குறைந்தவருவாய், குறைந்தசேமிப்பு, ஊரகப்பகுதிகளில் வங்கிக்கிளைகள் இல்லாதது போன்றவை தொடர்ந்து இருக்கின்றன. மேலும், சட்டம் மற்றும் நிதி கட்டமைப்புகளும் போதுமான அளவில் இல்லை. இப்போது இந்தப்பிரச்சனைகளை நாம் ஒவ்வொன்றாக அலசிப்பார்ப்போம்:

1. வணிகஉதவியாளர் (பி.சி) மாதிரியானது ஏழை கிராம மக்களைச் சென்றடைவதற்கு வெகு சிறப்பாகச் செயல்பட்டாகவேண்டும். அதற்கென கீழ்வரும் விஷயங்கள் செயல்படுத்தப்படவேண்டும்:

- குறைந்த வருவாய் உடைய வாடிக்கையாளர்கள், அதிலும் குறைந்த தொகையையே பரிமாற்றம் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு சேவை புரிவதால் வணிக உதவியாளர்களுக்கு போதுமான அளவு வருமானம் கிடைப்பதில்லை. வணிக உதவியாளர்கள் சரியான முறையில் சேவை ஆற்றுவதற்கு வங்கிகள் அவர்களுக்கு ஏற்படும் வருவாய்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வணிக உதவியாளர்களுக்குப் போதுமான வருவாய் கிடைப்பதால், அவர்கள் கிராம மக்களை அவர்களின் வீடுகளிலேயே சந்தித்து வங்கிச்சேவைகளை வழங்குவார்கள்.
- வணிகஉதவியாளர்களின் செயல்பாடுகளைத் திறம்படக் கண்காணிப்பதற்கும் பணத்தைக் கையாள்வதில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கும் அதேபோன்று வாடிக்கையாளர்களின் குறைகளைத் தீர்த்துவைப்பதற்கும் வங்கிகள் பொருத்தமான தூரங்களில் குறு அளவுக் கிளைகளைத் திறக்கவேண்டும்.
- மேலும் வணிக உதவியாளர்கள் திறம்படப் பணியாற்றுவதற்குத் தேவையான பயிற்சிகளையும், தொழில்திறன் மேம்பாட்டுத் திட்டங்களையும் வங்கிகள் தொடங்கவேண்டும்.

2. ஊரகப்பகுதி ஏழைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய, அவர்களுக்குப் பொருத்தமான, வாங்கமுடிந்த விலையில் புதியதான வங்கிச்சேவைச் சரக்குகளை வடிவமைத்தல் என்பது அவசியம் தேவையான ஒன்றாகும்.

- வட்டிக்குக்கடன் கொடுப்பவர்களிடம் இருந்து கிராமமக்கள் கடன் வாங்குவதைத்தடுப்பதற்கு, வங்கிகள் மிக எளிய முறையில் கடன் விநியோக வழிமுறைகளை உருவாக்கவேண்டும். மேலும் இந்த வழிமுறைகளில் கூடுமானவரை நெகிழ்ச்சித்தன்மை இருக்கவேண்டும்.

3. ஐ.சி.டி வசதிகள் நிரம்பிய சூழ்நிலையில், வங்கிச்சேவையில் அனைவரையும் உள்ளடக்குதல் என்ற இலக்கை நடைமுறையில் அடைய தொழில்நுட்பம் மிகப் பெரும் உந்துசக்தியாக இருக்கும்.

- கிராமமக்களுக்குச் சேவை அளிப்பதற்காக வங்கிகள் ஏ.டி.எம் கட்டமைப்பை ஊரகப்பகுதிகள் மற்றும் வங்கிகள் இல்லாத பகுதிகள் ஆகியவற்றுக்கு விரிவுபடுத்தவேண்டும். இதனோடு கூடவே போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். மேலும் நிதிசார்கல்வியறிவைப் பரவலாக்க பிரச்சாரங்களும் மேற்கொள்ளப்படவேண்டும்.
- ஊரகப்பகுதிகளில் சிறுஅளவு தொகையே பரிமாற்றங்களுக்கு செலவிடப்படும். இதனால் ஏற்படும் ஒட்டுமொத்த பரிமாற்றச்செலவைக் குறைப்பதற்கு உள்நாட்டு ரூபே கார்டுகளைப் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவேண்டும்.
- நமது நாட்டின் உச்சநிலை வேளாண் மற்றும் ஊரக வங்கியான நபார்டு வங்கி ஏற்கனவே கிசான் கடன் அட்டைகளை மின்னணு கடன் அட்டைகளாகவும் ரூபே கேசிசி அட்டைகளாகவும் மாற்றுவதற்கு பல புதிய நடவடிக்கைகளைத்

தொடங்கி இருக்கிறது. அதனோடு வங்கிகள் பன்நோக்கு பயன்பாட்டு அட்டைகள் (மல்ட்டி பர்பஸ் கார்டு) வழங்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்த அட்டைகள் ஊரகப்பகுதி மக்களின் தேவைகளுக்கு ஏற்ப பணம் செலுத்தும் அட்டையாக, கேசிசி அட்டையாக மற்றும் ஜிசிசி அட்டையாக பயன்படலாம்.

- ஊரக இந்தியாவில் மார்ச் 2017ஆம் ஆண்டின் நிலவரப்படி, 506 மில்லியன் மொபைல் சந்தாதாரர்கள் உள்ளனர். எந்த வகையான மொபைல் போனிலும் இயங்கக்கூடிய, ஒரு செயலியைப் பயன்படுத்தி இரகசியக்குறியீடு மூலம் தரப்படும் எஸ்.எம்.எஸ் அடிப்படையில் பணப்பரிமாற்றம் செய்யும் சாத்தியம் உள்ளிட்ட வாய்ப்புகளைப் பரிசீலித்துப்பார்க்கவேண்டும்.
- நபார்டு வங்கி வெளியிட்டுள்ள அண்மைக்கால சுற்றறிக்கையின் ஷரத்துக்கு ஏற்ப, வங்கிகள் மிகப்பெரும் ஊரகக்கூட்டுறவுக் கட்டமைப்பாக இருக்கின்ற தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு அமைப்புகளை வணிக உதவியாளர்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- குடிபெயர்ந்து வாழும் மக்களுக்கு, பணம் செலுத்தும் வசதியானது மிக முக்கியமானது ஆகும். எனவே குடிபெயர்ந்து வந்தவர்களுக்கு செலவு இல்லாத, எளிமையான பணம் செலுத்தும் வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டியது மிகவும் அவசியமானது ஆகும்.
- வங்கிகள் தங்களது ஊழியர்களையும், வணிக உதவியாளர்களையும் ஏழை கிராம மக்களைக் கையாள்வதற்கு ஏற்ப தயார்படுத்துவதற்கு அவர்களுக்கு பயிற்சி வகுப்புத்திட்டங்களைத் தொடங்கவேண்டும். வங்கியின் மனிதநேய முகத்தை வெளிப்படுத்துவதாக இது இருக்கும்.
- அனைவரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள நிதிச்சேவையை அடைவதற்காகக் கடன் கொடுக்கும் போது பெரிய விவசாயிகளைவிட சிறு விவசாயிகளுக்கு முன்னுரிமை தரவேண்டும்.
- தங்களது வங்கி உள்ளகத்தின் அடித்தளத்தை (Core Banking System – CBS) அளவிடமுடியும் என்பதை வங்கிகள் உறுதிப்படுத்தவேண்டும்.
- ஊரக வங்கிச்சேவைகளை மேம்படுத்துவதற்கு மின்னணு பரிமாற்ற அமைப்புகளை மேம்படுத்தவேண்டிய தேவை உள்ளது.
- வேலைவாய்ப்பு மற்றும் இதர வாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலம் ஊரகப் பகுதிகளில் கடன் ஏற்புத்திறனை அதிகரிக்க அரசு / வங்கிகள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.
- ஊரகப்பகுதிகளில் வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளதை அண்மைக்காலத்தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. மார்ச் 2010இல் ஊரகப் பகுதிகளில் இருந்த வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை 33,378 ஆகும். இவை மார்ச் 2016இல் 51,830 வங்கிக்கிளைகளாக அதிகரித்துள்ளன. அதே போன்று வங்கிக்கிளை இல்லாத வங்கிச்சேவை அளிக்கும் இடங்களின் எண்ணிக்கை மார்ச் 2010இல் 34,316 என இருந்தது. இது மார்ச் 2016இல் 534,477 ஆக அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பானது வங்கிக்கிளை இல்லாமலேயே வங்கிச்சேவை அளிக்கும் இடங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன என்பதைக் காட்டுகிறது. அதேசமயம் தனியார் வங்கிகளை எடுத்துக்கொண்டால், அவற்றின் ஊரகக்கிளைகளின் பங்கு மொத்த ஊரகக்கிளைகளில் 20% மட்டுமே உள்ளது. இது மார்ச் 2017 நிலவரமாகும். எனவே தனியார் வங்கிகள் தங்களது ஊரகக்கிளைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டிய தேவையும் உள்ளது.
- அறிக்கையின்படி, இந்தியாவில் உள்ள 6இலட்சம் கிராமங்களில் சுமார் 18,000 கிராமங்களில் மட்டுமே மின்சாரம் இல்லை. எனவே அரசு போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை விரைவில் உருவாக்கித் தரவேண்டும். அதாவது பௌதீக மற்றும் டிஜிட்டல் தொடர்பு, தடையில்லாத மின் விநியோகம் முதலான உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.
- வங்கிகளில் பயன்படுத்தப்படும் படிவங்கள் அனைத்தும் மாநில மொழிகளிலும் இருப்பது என்பது மிகவும் அவசியமானதும் கட்டாயமானதுமாகும். குறைந்தபட்சம் இவை

முக்கியமான மொழிகளிலாவது இருக்கவேண்டும். நிதிசார் கல்வி முயற்சியின் ஒரு அங்கமாக, பொதுமக்களுக்கு ஆங்கில மொழி மீது உள்ள பயத்தைப்போக்க உதவும் நடவடிக்கைகளை வங்கிகள் எடுக்கவேண்டும்.

- 1,54,882 அஞ்சல் நிலையங்களோடு உலகின் மிகப்பெரிய அஞ்சல் கட்டமைப்பு உள்ள நாடாக இந்தியா உள்ளது. இதில் 1,39,182 அஞ்சல் நிலையங்கள் (89.86%) ஊரகப்பகுதிகளில் உள்ளன. இந்தப்பின்னணியில் பார்க்கும்போது, அவற்றுக்கு உள்ள சாதகமான அம்சங்களால் அஞ்சல் நிலையங்கள் சிறப்பான, ஆக்கப்பூர்வமான பங்களிப்பு அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் முயற்சிகள் எடுக்கப்படவேண்டும். இந்தத் திசையில் இந்திய அரசு தொடங்கியுள்ள இந்திய அஞ்சல் வங்கி சந்தேகமே இல்லாமல் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக உள்ளது.
- நபார்டு வங்கியின் சுயஉதவிக்குழுக்கள் - வங்கிகள் இணைப்புத்திட்டமானது உலகிலேயே மிகப்பெரிய சிறுகடன் திட்டமாக உள்ளது. எனினும் அவற்றின் நீடித்ததன்மை, குறுதொழிலாக பரிணமித்தல் தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்பட வேண்டியவையாக உள்ளன.
- வணிக உதவியாளர்களின் சேவைகளைப் பெறுபவர்கள் பெரும்பாலும் எழுத்தறிவு இல்லாதவர்கள் ஆவர். இவர்களுக்கு தொழில்நுட்ப வசதிகளை எவ்வாறு பயன்படுத்துவது எனத்தெரியாது. எனவே, இவர்கள் வணிக உதவியாளர்களால் தவறான முறையில் வழிநடத்தப்படலாம்.

மேலே கூறிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கமும் அதே போன்று பாரத ரிசர்வ் வங்கியும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றன. அவற்றில் சில:

1. மக்கள் நிதித்திட்டத்தின் (ஜன் தன் யோஜனா) கீழ் 26 கோடி வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டது மிகப்பெரும் வெற்றியாகும்.
2. சிறு அளவுக் கடன்களை வழங்குவதற்கு நுண் அலகு மேம்பாட்டு மறுநிதி முகமையை (முத்ரா வங்கி) உருவாக்கியது.
3. அடல் ஓய்வூதியத்திட்டம், பிரதமமந்திரி விபத்துக்காப்பீட்டுத்திட்டம், பிரதம மந்திரி ஆயுள் காப்பீட்டுத்திட்டம் போன்ற சமூக நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் தொடங்கப்பட்டன. இவை சமூகப்பாதுகாப்பு அளிக்கும் திட்டங்கள் ஆகும்.
4. வங்கி உதவியாளர்கள், வர்த்தக உதவியாளர்கள் மூலமாக வங்கிச்சேவைகளை வழங்குதல்.
5. கடன் மற்றும் பணம் செலுத்தும் பரிமாற்றங்களுக்கு முன் மொழியப்பட்டுள்ள சலுகைகள்.
6. பணப்பரிமாற்றங்களுக்குப் பதிலாக ஆதார் இணைக்கப்பட்ட சிறிய அளவு ஏ.டி.எம்-கள்




7. 11 பேமெண்ட் வங்கிகள் மற்றும் 10 நிதிசார் சிறிய வங்கிகளுக்கு தரப்பட்டுள்ள புதிய உரிமங்கள் மூலம் பல்வேறுபட்ட வங்கிச்சேவைகளை மேம்படுத்துதல்

❖ எவ்வாறாக இருந்தாலும் இத்தகைய தொடக்க முயற்சிகள் குறிப்பிடத்தக்க சில சவால்களை உருவாக்குகின்றன: பிரதமரின் மக்கள் நிதித்திட்டத்தில் (பி.எம்.ஜே.டி.ஒய்) பல நிலைகளில் கணக்குகள் தொடங்கியது பிரச்சினையாக உள்ளது. பி.எம்.ஜே.டி.ஒய்-இன் கீழ் தொடங்கப்பட்ட பெரும்பான்மையான வங்கிக்கணக்குகளில் பணமே இருப்பு இல்லை. அவை வெற்றுக்கணக்குகளாகவே உள்ளன. இந்தக்கணக்குகளால் வங்கிகளுக்குச் செலவுதான் அதிகரித்துள்ளது. நிரந்தர வருவாய்க்கு வழி ஏதும் இல்லாமல் ஏழை மக்கள் அன்றாடம் காய்ச்சிகளாக வாழ்வதற்கான குறைந்த வருவாயிலேயே



நாள்களைக் கடத்துகின்றனர். வங்கிக்கணக்குகளில் சேமிக்கும் அளவிற்கு அவர்களுக்கு அதிகப்படியான வருமானம் இல்லை, அல்லது நிதிசார் திட்டங்களில் அவர்களால் சேரவும் முடியாது. இதன் விளைவு என்னவென்றால், அனைவரையும் நிதிச்சேவையில் உள்ளடக்குவது என்ற கருத்து அர்த்தம் இல்லாமல் போய்விடுகிறது என்பதுவே ஆகும்.

❖ ஜன்தன், ஆதார் மற்றும் மொபைல் (ஜே.ஏ.எம்) ஆகியவற்றை இணைப்பது போன்ற தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மெதுவாகவே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பேமண்ட் வங்கிகள் பரவலாக மக்களைச் சென்றடைந்து பயன்களைப் பெறமுடியும். ஆனால் இவை எதிர்மறையான பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதாவது சிக்கலான பயனாளர் இடைத்தொடர்பு, எல்லா இடங்களிலும் இணைய இணைப்பானது இல்லாமல் இருத்தல், குறைதீர்ப்பு முறை இல்லாதது போன்ற பிரச்சினைகள் உள்ளன. இவை பயனாளர்களை இத்தகைய சேவைகளில் இருந்து தூரப்படுத்திவிடுகின்றன. புதிய பேமண்ட் வங்கிகள் சார்பாக பாரத ரிசர்வ் வங்கியின் பொறுப்புகள் அதிகரித்து உள்ளதால், அது உத்திரவாதத்தையும் அதிகரித்தாக வேண்டும்.

❖ நேரடி பலன் பரிமாற்றத்திட்டத்தில் இடைத்தரகர்கள் வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு வைத்துக்கொண்டு பலன் கிடைப்பதைத் தாமதப்படுத்தலாம் / பலன்களையே மறுக்கலாம்.

❖ பேமண்ட் வங்கிகளின் வருகையும் பரவலாக்கமும் வழக்கமான வங்கிகளுக்கு வாடிக்கையாளர்களிடம் இருந்து கிடைக்கக் கூடிய கட்டண வருவாயைக் குறைத்துவிடக்கூடும். அதாவது வரைவோலை எடுத்தல், பணப்பரிமாற்றங்கள், பணம் செலுத்துதல், பணம் எடுத்தல், காசோலை பயன்பாடு மற்றும் ஏ.டி.எம் பரிமாற்றக் கட்டணம் மூலமாக வழக்கமான வங்கிகள் ஈட்டும் வருவாய் குறையலாம்.

❖ *பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜ்னா எனப்படும் காப்புறுதித்திட்டம் (PMJJBY), பிரதம மந்திரி விபத்துக்காப்புறுதித்திட்டம் (PMSBY), வயதானவர்களுக்கான அடல் ஓய்வூதியத்திட்டம் (APY)* போன்ற திட்டங்களின் வெற்றி என்பது பெரும்பாலும் ஏழைகளுக்கு வங்கிச் சேவைகள் கிடைப்பதைப் பொறுத்தே அமையும். ஓய்வூதியம் அல்லது காப்புறுதித்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வோ அல்லது அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்போ இல்லாத நிலையில் பெரும்பகுதி மக்கள் இருக்கும்போது இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்துவது என்பது இமாலய முயற்சியே ஆகும்.

❖ குறிப்பிடத்தக்க நேர்வுகளில் வணிகஉதவியாளர்கள் பணத்தைக் கையாடல் செய்த குற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

❖ ஊரகப்பகுதிகள் மற்றும் தொலை தூரப்பிரதேசங்களில் மொபைல் இணைப்பு கிடைப்பது என்பது இன்னமும் மோசமான நிலையிலேயே உள்ளது.

❖ முன்னுரிமைப் பிரிவினருக்கு நிர்ணயிக்கப்படும் கடன் இலக்கானது உரியவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏழைகளுக்கு பணம் கடனாகக் கொடுப்பதற்கு பல வங்கிகள் தயக்கம் காட்டுகின்றன. ஆனால் இலக்கை அடைய வேண்டும் என்பதற்காக வங்கிகள் தகுதி அற்றவர்களுக்குக் கடன்களைக் கொடுக்கின்றன. இவர்களும் கடன் பெறவேண்டும் என்பதற்காக போலியான ஆவணங்களைச் சமர்ப்பிக்கிறார்கள். உதாரணமாக விவசாயிகளுக்கு தங்கநகைக் கடன் குறைந்த வட்டி விகிதத்தில் தரப்படுகிறது. ஆனால் உண்மையில் விவசாயமே செய்திராத நபர்கள் வங்கியில் தங்களுக்குள்ள தொடர்புகளைப் பயன்படுத்தி இந்த நகைக்கடனைப் பெறுகிறார்கள். இவ்வாறு நடப்பதால் முன்னுரிமைப் பிரிவினருக்குக் கடன்வழங்குதல் என்பது உரியவர்களுக்குக் கிடைக்காமல் தகுதி அற்றவர்களுக்குப் போய்ச்சேருகிறது. அரசாங்கம் இந்த விஷயத்தைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு கடன்கள் உரியவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது என்பதை உறுதி செய்யவேண்டும். போலியான விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களுக்கு உதவுகின்ற வங்கி ஊழியர்களுக்கும் எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

நிதி ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பு இல்லாமல் சிக்கல் ஏதும் இல்லாமல் எளிய முறையில் ஏழைகளுக்கு நிதிச்சேவைகள் வழங்குவதை நிதிநிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள உதவும் பொறுப்புமிக்க நெறிமுறையான சூழ்நிலையை உருவாக்குவதில் பாரத ரிசர்வ் வங்கி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும். கட்டுரையை இந்த எதிர்பார்ப்புடன் நான் நிறைவுசெய்கிறேன். இந்தப் பின்னணியைக் கவனத்தில் கொண்டு வங்கிகள் தங்களுக்கு ஏற்ற "அனைவரையும் உள்ளடக்குதல்" என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் சுதந்திரம் தரப்படலாம். இது வங்கிகளின் ஒட்டுமொத்த வர்த்தகத்தத்துவத்தின் ஒரு அங்கமாக இருக்க வேண்டும். மேலும் இதனை ஒரு வர்த்தக நடவடிக்கையாகத் தொடரவேண்டும். ஆபத்துக்காரணிகளை கவனத்தில் கொள்ளவும் வங்கிசார் சரக்குகளை நுட்பமாக உருவாக்கவும் வேண்டும். சிறுகடன் சேவை வழங்குபவர் ஒருவர் உள்ளிட்ட இரண்டு நிதிச்சேவை வழங்குபவர்களை வங்கிகளாகச் செயல்பட அனுமதிக்கலாம். சிறுவங்கிகள் மற்றும் பேமண்ட் வங்கிகளுக்கு உடனடியாக உரிமம் வழங்குவதை அறிமுகப்படுத்துவதோடு செயல்படுத்தவும் செய்யலாம். அதனுடன் முன்னுரிமைப் பிரிவினரின் தேவைகளின் பின்னணியைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு வங்கிகளின் நுழைவும் அனுமதிக்கப்படலாம். இதன் மூலம் ஊரக நிதி சார் முறையின் விஸ்தீரணம் விரிவடையும். இதனால் ஊரக நிதிச்சேவை தொடர்பாக உருவாகும் சவால்களையும் ஏற்கனவே உள்ள சவால்களையும் எதிர்கொள்ள முடியும். இதன் பயனாக ஊரக மக்களின் வாழ்க்கையை அளவிலும் தரத்திலும் மேம்படுத்தமுடியும். **ஊரக வங்கிச் சேவை - தொலைநோக்குப் பார்வை 2025** எனும் தொலைநோக்குப்பார்வையை உண்மையாக்க நாம் இணைந்து செயல்படுவோம்.

---

- **மஞ்சுளா வாத்வா**, உதவிப் பொது மேலாளர் - நபார்டு வங்கி அரியானா மண்டல அலுவலகம், சண்டிகர் ●

# பாரத்மாலா பரியோஜனா: நாட்டின் நெடுஞ்சாலை மேம்பாட்டில் ஒரு புதிய பரிமாணம்

- யுத்வீர்சிங் மாலிக்

## 1. மீள்பார்வை:

i. பொருளாதார உறவுகளுக்கான அமைச்சரவைக் குழு 24 அக்டோபர், 2017இல் நடைபெற்ற கூட்டத்தில் பாரத்மாலா பரியோஜனா என்ற திட்டத்தின் முதல்கட்ட முன்மொழிவை அங்கீகரித்து அனுமதி அளித்துள்ளது. பாரத்மாலா பரியோஜனா என்பது நாட்டின் நெடுஞ்சாலை மேம்பாட்டுக்கான விரிவான ஒரு செயல்திட்டம் ஆகும். நெடுஞ் சாலைக் கட்டமைப்பில் தற்போது நிலவும் இடைவெளிகள், அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவைகள் ஆகியவற்றால் இந்தியாவில் மிகவும் கவனம் செலுத்தப்பட வேண்டிய துறையாக நெடுஞ் சாலைத்துறையானது தொடர்ந்து இருந்து வருகிறது. நெடுஞ்சாலைகளின் உள்கட்டமைப்புக்கான ஒரு புதிய யுகத்தின் தொடக்கத்தை பாரத்மாலா பரியோஜனா குறிக்கிறது.

ii. 1998ஆம் ஆண்டு என்.டி.ஏ அரசு தொடங்கிய தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித்திட்டம்தான் (NHDP) நமது நாட்டில் தொடங்கப்பட்ட முதலாவது தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தி முன்னோடித்திட்டமாகும். இந்த என்.ஹெச்.டி.பி திட்டத்தை நடைமுறைப்படுத்தியதால் கிடைத்த அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு பாரத்மாலா திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது. சாலை அபிவிருத்திக்கான புதிய பரிமாணத்தை முன்கூட்டியே கருத்தில் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிமாணமானது திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றில் சாலைப்பெருவழி அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளை (என்.ஹெச்) மேம்படுத்துதல், இயக்குதல், பராமரித்தல் ஆகியவற்றை இத்திட்டம் கணக்கில் கொண்டுள்ளது. பாரத்மாலாவின் குறிக்கோள் என்பது நாடு முழுவதிலும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்தைச் சிறந்த முறையில் பொருத்தமான இடையீட்டுச் செயல்பாடுகள் மூலம் வழங்குவது ஆகும்.



## 2. பாரத்மாலாவை வடிவமைப்பதில் உள்ள அணுகுமுறை:

i. சரக்குகளை அதிகமாகக் கையாளும் இடங்களுக்கு இடையில் (ஓ டி) மேற்கொள்ளப்படும் சரக்குப்போக்குவரத்து குறித்த ஒரு விரிவான ஆய்வு விஞ்ஞான முறைப்படி மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுக்குப்பிறகு, புதிய பொருளாதாரப் பெருவழிகளைக் கண்டறியவும் மேம்படுத்தவும் முக்கியமான செயல் உத்தியானது வகுக்கப்பட்டது. அதாவது, பொருளாதார மண்டலத்தின் போக்குவரத்துத்திறனை அதிகபட்சமானதாக ஆக்குவதைக் கருத்தில் கொண்டு இந்த உத்தியானது வகுக்கப்பட்டது. இவ்வாறு திறன் அதிகரிக்கப்படுவதன் பிரதிபலனாக பொருளாதாரமானது பன்மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஓ-டி ஆய்வானது ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் என்.ஹெச்.டி.பி திட்டங்களுடன் பொருளாதாரப் பெருவழிகளை ஒருங்கிணைப்பதைக் கவனத்தில் கொள்கிறது.

ii. நாட்டில் உள்ள பெரும்பான்மையான பொருளாதாரப்பெருவழிகள் ஒரே மாதிரியாக இல்லாமல் வேறு வேறான உள்கட்டமைப்பு

வசதிகளைப் பெற்றுள்ளன. உதாரணமாக, மும்பை - கொல்கத்தா பெருவழியில், ஒடிசா மாநிலத்தில் குறிப்பிடத்தக்க நீளம் வரை இருவழிப்பாதை உள்ளது. மேலும் இந்தப் பெருவழியில் இருவழி, நான்குவழி என ஆங்காங்கே மாறி மாறி சாலைகள் உள்ளன. இந்தப் பெருவழிப்பாதை முழுவதும் குறைந்தபட்சம் ஒரே சீரான நான்கு வழிப்பாதையாக தரம் உயர்த்தப்படாவிட்டால், சரக்குப் போக்குவரத்து இப்போது ஸ்தம்பிப்பது போன்றே தொடர்ந்து ஸ்தம்பித்துக் கொண்டு இருக்கும். இதனால் சரக்குக் கட்டணச்செலவு அதிகரிக்கும். இது ஸ்டீல் மற்றும் மின்சாரம் போன்ற இறுதி நிலைப்பொருள்களின் மீது பலமடங்கு பாதிப்புகளை ஏற்படுத்தும். எனவே நாடு முழுவதும் உள்ள பெருவழிகளில் நிலவும் சமச்சீரற்ற பாதைகளைச் சீரமைப்பது அவசரத் தேவையாக உள்ளது.

iii. புதிய பெருவழிப்பாதைகளையும் அதில் வந்து இணையும் சாலைகளையும் அபிவிருத்தி செய்வதுடன் அதனுடனேயே தேசிய நெடுஞ் சாலைகள் அபிவிருத்தித்திட்டத்தின் (NHDP) கீழ் ஏற்கனவே மேம்படுத்தப்பட்டுள்ள சாலைப் பிரிவுகளின் போக்குவரத்து அளவை அபிவிருத்தி செய்யவேண்டியதும் அவசியமாக உள்ளது. அதாவது பெருவழிப்பாதைகளில் ஏற்படும் வாகன நெரிசல்களைக் கட்டுப்படுத்த, சுற்றுப்பாதைகள், வட்டப்பாதைகள் முதலானவற்றை ஏற்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி மேற்கொள்ளப்படலாம். மேலும் மல்ட்டிமோடல் லாஜிஸ்டிக்ஸ் பார்க்குகளை உருவாக்கியும் மேம்படுத்தலாம். இது சரக்குகளை ஏற்றவும், இறக்கவும் உதவியாக இருப்பதோடு, ஒரு வாகனத்தில் இருந்து வேறு வகை பயண வாகனத்தில் சரக்குகளை மாற்றுவதற்கும் உதவியாக இருக்கும்.

iv. எல்லைப்பகுதிகள் மற்றும் கடலோரப்பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது என்பது இந்தியாவின் ஏற்றுமதி - இறக்குமதி (EXIM) வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு அவசியம் தேவைப்படும் ஒன்றாகும். அயல்நாட்டு உறவுகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் எல்லைப்புற சாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளம், வங்கதேசம், பூட்டான் ஆகிய நாடுகளின் வர்த்தக மையங்களுடன் இணைப்பை மேம்படுத்துவதும் குறிக்கோளாக உள்ளது. கடற்கரைச்சாலை அபிவிருத்தி, துறைமுகஇணைப்புச் சாலைகள் மேம்பாடு ஆகியன கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் சாகர்மாலா செயல்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

v. சாலை மேம்பாடு என்பதில் இருந்து சாலைப்பெருவழி அடிப்படையில் மேம்பாடு என்பதில் கவனம் செலுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றம் முக்கியமானதாகும். இந்த அணுகுமுறை மாற்றம் மூலம் மிக முக்கியமான இடைவெளிகளையும் நிரப்பமுடியும். இதை உணர்ந்த சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமானது **"பாரத்மாலா பரியோஜனா"** வை வடிவமைத்துள்ளது.

### 3. பாரத்மாலா - ஆறு உட்கூறுகள்:

i. **பொருளாதாரப்பெருவழிகள்** - அடையாளம் காணப்பட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நெடுஞ்சாலைப்பெருவழிகள் மூலம் வரும் ஆண்டுகளில் 25% சரக்குகள் எடுத்துச்செல்லப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய மற்றும் பொருளாதாரப்பெருவழிகளை உள்பெருவழிகள் மற்றும் வந்து சேரும் பாதைகள் ஆகியவற்றுடன் இணைத்த பிறகு, இவை நமது சரக்குப்போக்கு வரத்தில் 80சதவீதத்தைக் கையாளும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதாரப் பெருவழிகளாக மொத்தம் சுமார் 26,200 கிலோமீட்டர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் முதல் கட்டப்பணிகளுக்காக 9,000 கிலோமீட்டர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

ii. **உள்ளிணைப்புப் பெருவழிகளும், வந்து இணையும் சாலைகளும்** - சுமார் 8,000 கிலோமீட்டர்கள் உள்ளிணைப்பு பெருவழி சாலைகளும் சுமார் 7,500 கிலோமீட்டர்கள் வந்து இணையும் சாலைகளும் அடையாளம் காணப்பட்டு உள்ளன. இதில் 6,000 கிலோமீட்டர் சாலைகள் முதல் கட்டப்பணிகளுக்காக எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன.

iii. **தேசிய சாலைப்பெருவழிகளின் திறனை மேம்படுத்துதல்** - தங்க நாற்கரச் சாலை, வடக்கு-

தெற்கு, கிழக்குமேற்கு சாலைப்பெருவழிகள் ஆகியன இந்தியாவின் சரக்குகளில் 35% சரக்குகளை எடுத்துச்செல்கின்றன. இவற்றை தேசிய சாலைப்பெருவழிகள் என அறிவிக்க முன்மொழியப்பட்டுள்ளது. ஆறு தேசிய சாலைப்பெருவழிகளின் சராசரி சரக்குப்போக்குவரத்து >30,000 பிசியூ-க்களாக உள்ளன. தேவைக்கு ஏற்ப 6/8 வழிப்பாதைகள் இத்தகைய பெருவழிகளில் அமைக்கப்படும். தேசிய சாலைப்பெருவழிகள் போக்குவரத்து நெருக்கடியும், தேக்கமும் ஏற்படும் இடங்களில் உருவாக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்தின் திறனைப்பாதிக்கும் இத்தகைய தேசியப் பெருவழிகளில் வாகன நெருக்கடிகளைக் கட்டுப்படுத்த வழிப்பாதைகளை விரிவாக்கம் செய்வதோடு வட்டப்பாதைகள், சுற்றுப்பாதை / மேடான பாதைகள் ஆகியவற்றை அமைப்பதும் தேவையான ஒன்றாகும். மேலும் முக்கியமான இடங்களில் லாஜிஸ்டிக்ஸ் பார்க்குகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவை வேறு வகையான வாகனத்தில் சரக்குகளை திறம்பட மாற்றவும், மேலும் கூடுதல் சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் உதவியாக இருக்கும். இந்தப்பிரிவின் கீழ் முதல் கட்டமாக சுமார் 5,000 கிலோமீட்டர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

iv. **எல்லைச்சாலைகள், சர்வதேச இணைப்புச் சாலைகள்** - முக்கியத்துவத்தின் அடிப்படையில் சர்வதேச எல்லைகளுக்கு இணையாக எல்லைப்புறச்சாலைகளை மேம்படுத்துவதற்காக சுமார் 3,300 கிலோமீட்டர் தூரமானது அடையாளம் காணப்பட்டுள்ளது. சர்வதேச வர்த்தக மையங்களோடு இந்தியாவின் மிக நீளமான நெடுஞ்சாலைப் பெருவழிகளை இணைப்பதற்கு சுமார் 2,000 கிலோமீட்டர் சாலைகள் தேவைப்படும் இதனால் நேபாளம், பூட்டான், வங்கதேசம், மியான்மர் போன்ற அண்டை நாடுகளுடன் ஏற்றுமதி - இறக்குமதியானது அபிவிருத்தி அடையும். இந்தப் பிரிவின் கீழ் முதல் கட்டமாக சுமார் 2,000 கிலோமீட்டர் சாலைகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

v. **கடலோரச்சாலைகளும், துறைமுக இணைப்புச்சாலைகளும்** - இந்தியாவின் கடற்கரையில் சுமார் 2,100 கிலோமீட்டர் தூர கடற்கரைச் சாலைகள் அபிவிருத்தி செய்வதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தச்சாலைகள் சுற்றுலா மற்றும் கடலோரப்பகுதிகளின் தொழில் வளர்ச்சியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கவனம் பெறாத துறைமுகங்களோடு இணைப்பை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் தருவதாகவும், எக்சிம் வர்த்தகத்துக்கு உதவும் வகையிலும் இருக்கக்கூடிய 2,000 கிலோமீட்டர் துறைமுக இணைப்புச்சாலைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்டுள்ள இந்தச்சாலைகள் கப்பல் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் உள்ள சகர்மாலா செயல்திட்டத்தோடு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்தப்பிரிவின் கீழ் முதல்கட்டமாக சுமார் 2,000 கிலோமீட்டர் நீளம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

vi. **பசுமை எக்ஸ்பிரஸ் வழிகள்** - தேசிய மற்றும் பொருளாதாரப் பெருவழிகளில் குறிப்பிட்ட பகுதிகளில் சரக்குப்போக்குவரத்தானது 50,000 பிசியூக்களுக்கும் அதிகமாக உள்ளது. இவை பல்வேறு நெருக்கடிகளையும், தடைகளையும் உருவாக்கியுள்ளன. இந்தப்பகுதிகளை பசுமை எக்ஸ்பிரஸ் வழிகளாக மேம்படுத்துவதற்கு சுமார் 1,900 கிலோமீட்டர் நீளம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப்பிரிவில் சுமார் 800 கிலோமீட்டர்கள் முதல் கட்டமாக மேம்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### 4. பாரத்மாலா முதல் கட்டம் - உட்கூறுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் முதலீடுகள்:

i. பாரத்மாலாவின் முதல் கட்டத்தில் மொத்தமாக சுமார் 24,800 கிலோமீட்டர் தூரம் அபிவிருத்திக்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனுடன் என்.ஹெச்.டி.பி திட்டத்தின் கீழ் மீதியுள்ள சாலைப்பணிகளுக்காக சுமார் 10,000 கிலோ மீட்டர் தூரமானது உள்ளடக்கபட்டுள்ளது. இதன் முதல் கட்ட அபிவிருத்தி பணிகள் 5 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்படும். இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.5,35,000 கோடி ஆகும்.

ii. முதல் கட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள உட்கூறுகள் மற்றும் அவற்றுக்காக அனுமதிக்கப்பட்டு உள்ள நிதி ஒதுக்கீடுகள் கீழே தரப்படுகின்றன:

| வரிசை எண். | உட்கூறுகள் | நீளம் - கி.மீ | ஒதுக்கீடு ரூபாய் - கோடிகளில் |
|---|---|---|---|
| (i) | பொருளாதாரப் பெருவழிகள் அபிவிருத்தி | 9,000 | 1,20,000 |
| (ii) | பெருவழி உள்பாதைகளும், வந்து இணையும் சாலைகளும் | 6,000 | 80,000 |
| (iii) | தேசிய பெருவழிப்பாதைகளின் திறன் மேம்படுத்துதல் | 5,000 | 100,000 |
| (iv) | எல்லைப்புற, சர்வதேச இணைப்புச்சாலைகள் | 2,000 | 25,000 |
| (v) | கடற்கரைச் சாலைகள், துறைமுக இணைப்புச் சாலைகள் | 2,000 | 20,000 |
| (vi) | எக்ஸ்பிரஸ் வழிகள் | 800 | 40,000 |
| | **மொத்தம்** | **24,800** | **385,000** |
| | சேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மீதம் உள்ள சாலைப்பணிகள் | **10,000** | **1,50,000** |
| | மொத்தம் | | **5,35,000** |

iii. மேலே கூறிய 24,800 கிலோமீட்டர் சாலைகளை அடையாளம் காணுவதில் போதுமான அளவிற்கு நெகிழ்வுத் தன்மையானது தரப்பட்டு உள்ளது. அடையாளம் காணப்பட்ட தூரத்தில் குறிப்பிட்ட பகுதிகளில் நிலம் கையகப்படுத்துதல் காரணமாகவோ அல்லது எதிர்பாராத பிற காரணங்களாலோ மேம்பாட்டுப்பணிகள் நடைபெற முடியாத சூழல் ஏற்பட்டால், பிற பொருத்தமான செயல்திட்டங்களில் 15% நீளம் வரை மாற்றீடாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலகள் அமைச்சகம் அனுமதித்துள்ளது.

## 5. திட்டங்களைப்பரிசீலித்தல் மற்றும் அனுமதி அளிப்பதில் அதிகாரப்பகிர்வு:

i. தனித்தனி நெடுஞ்சாலைத்திட்டங்களுக்கான பரிசீலனை மற்றும் அனுமதி அளித்தலில் அதிகாரப்பகிர்வு என்பது இந்தச் செயல்திட்டத்தின் தனிப்பட்ட சிறப்பு அம்சமாகும். இந்த அணுகுமுறையானது அடையாளம் காணப்பட்ட திட்டங்களை தங்குதடையின்றி குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்கவும் உதவும். இதனால் இவை வேகமாக நடைமுறைப்படுத்தப்படக் கூடிய வாய்ப்பும் அதிக அளவில் உள்ளது. திட்டங்களைப் பரிசீலனை செய்யவும் அனுமதிக்கவும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்துக்கு (என்.ஹெச்.ஏ.ஐ) அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பரிசீலனை / அனுமதி ஆகியவற்றுக்கான செயல்முறையில் எந்த வகையிலும் தர மதிப்பீடானது விட்டுக்கொடுக்கப்படக்கூடாது என்பதற்கு போதுமான கவனம் செலுத்த வழிவகையும் செய்யப்பட்டுள்ளது. திறமை வாய்ந்த "செயல்திட்ட பரிசீலனை மற்றும் தொழில்நுட்ப ஆய்வுக் குழுக்களால்" அனைத்து செயல்திட்டங்களும் தொழில்நுட்பம், நிதி மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப் படுகின்றன. இத்தகைய குழுக்களை நிதி ஆயோக்கில் இருந்து நிபுணர்களைச் சேர்த்து இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையமும் சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகமும் ஏற்படுத்தியுள்ளன. ஒப்பந்தங்கள் வழங்குவதை விரைவுபடுத்துவதற்காக, செயல்திட்டத்தயாரிப்பு நடவடிக்கைகளை நடைமுறையாக்கல் ஏஜென்சிகள் தீவிரப்படுத்தியுள்ளன. என்.ஹெச்.ஏ.ஐ வாரியத்தில் பகுதி நேர உறுப்பினராக நிதிஆயோக் தலைமைச் செயல்அலுவலர் சேர்க்கப்பட்டுள்ளார்.

## 6. பெருந்தடை நீக்கச்செயலமைவு (Grand Challenge Mechanism):

பெருந்தடை நீக்கச்செயலமைவு மூலம் வளர்ச்சிப்பணிகளில் மாநில அரசுகளும் பங்கேற்பதை ஊக்கப்படுத்துவது என்பதும் இந்தச்செயலமைவு திட்டத்தின் மற்றொரு தனிப்பட்ட விசேஷ அம்சமாகும். இந்த செயலமைவின் கீழ், மாநில அரசுகள் தாமாகவே முன்வந்து முக்கியமான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னுரிமை தரப்படும். மாநில அரசுகள் செயல் திட்டங்களுக்கு மிக விரைவாக நிலம் வழங்குதல் போன்ற பங்களிப்புகளைச் செய்யமுடியும்.

## 7. நிறுவனம்சார் திறன்மேம்பாடு:

இந்தச் செயல்திட்டத்தை மிகத்திறம்பட நடைமுறைப்படுத்த வேண்டிய வகையில், சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் அதன் செயல்பாட்டின் கீழ் உள்ள ஏஜென்சிகளால் உள்ளியங்கு திறன்களை மேம்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. “சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் மற்றும் நடைமுறைப்படுத்தும் ஏஜென்சிகளின் நிறுவனத்திறன்கள், செயல்முறைப்பரிமாற்றங்கள்” என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின் பரிந்துரைகளில் ஒரு சில ஏற்கனவே அமலாக்கப்பட்டுள்ளன. நிலம் கையகப்படுத்துவது தொடர்பான சீர்திருத்தங்கள், செயல்திட்ட டி.பி.ஆர்.களின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பான சீர்திருத்தங்கள், ஆன்லைன் “திட்டக் கண்காணிப்புத் தகவல்அமைப்பு” (பி.எம்.ஐ.எஸ்) நடைமுறையாக்கம் போன்றவற்றை உதாரணங்களாகச் சொல்லலாம்.

## 8. பாரத்மாலாவின் தாக்கங்கள்:

i. பொருத்தமான சாலைப்பெருவழி அணுகுமுறையைக் கையாள்வதின் மூலமாக நாடு முழுவதும் சாலைகளில் சரக்குப் போக்குவரத்தைச் சரியான அளவில் வைத்திருக்கச் செய்வது முக்கியமானது ஆகும். அடையாளம் காணப்பட்ட சாலைப்பின்னல் நாட்டில் மாநிலங்களுக்கு இடையிலான சரக்குப்போக்குவரத்தில் சுமார் 80%சதவீதத்தைக் கையாளும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இது நாட்டில் வாகனங்களின் சராசரி வேகத்தை 2025 சதவிகிதம் அதிகரிக்கும்.

ii. பொருளாதாரப் பெருவழிகளையும் அதனோடு தொடர்புடைய உள்பெருவழிகள், வந்து இணையும் சாலைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதனாலும் சாலை உள்கட்டமைப்பு வசதி பெருகும். சுற்றுப்பாதைகள், வட்டப்பாதைகள் போன்ற வலைப்பின்னல் மூலம் போக்குவரத்து நெருக்கடியானது நீக்கப்படும். பெருவழிப் பாதைகளில் உள்ள நுழைவு / வெளியேறுதல் அடிப்படையிலான சுங்கவரி செலுத்தப்படுவதைப் போன்று நுழைவு கட்டுப்படுத்தப்பட்ட எக்ஸ்பிரஸ் வழிகள் போன்ற புத்தாக்க நடவடிக்கைகள் நெடுஞ்சாலைகளில் வாகனங்களின் சராசரி வேகத்தை அதிகப்படுத்த உதவும். சரக்கு வாகனங்களின் சராசரி வேகத்தை அதிகப்படுத்தும் செயலின் விளைவாக மூன்று பயன்கள் ஏற்படும். அவை: (அ) வாகனத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துவது அதிகரிக்கும். இதனால் இலாபமும் நஷ்டமும் இல்லாத நிலை மாறி இலாபம் ஏற்படும். இதன் விளைவாக ஒரு கிலோமீட்டருக்கு ஒரு டன் சரக்கை எடுத்துச் செல்லும் செலவு குறையும்.

(ஆ). இன்ஜினை நிறுத்தாமல் வைத்திருக்கவேண்டிய நேரம் குறைவதால், வாகனங்களின் எரிபொருள் திறன் அதிகரிக்கிறது. இதனால் சரக்குக் கட்டணமும் குறையும்.

(இ) நம்பகமான மற்றும் விரைவான சரக்குப்பரிமாற்றம் செய்யப்படுகிறது. இதனால் சராசரி இருப்பு குறையும் வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வலைப்பின்னல் உருவாக்கி செயல்படத்தொடங்கிவிட்டால், பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த விநியோகச் சங்கிலித்தொடரின் செலவில் சுமார் 5-6 சதவிகிதத்தைக் குறைத்துவிடமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நாட்டின் “லாஜிஸ்டிக் செயல்திறன் குறியீட்டு எண்” (எல்.பி.ஐ) மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

iii. தேசியநெடுஞ்சாலைகள் இணைப்பு மூலம் நாட்டில் உள்ள 550 மாவட்டங்கள் இணைக்கப்படும். தற்போது தேசிய நெடுஞ்சாலைகள் சுமார் 300 மாவட்டங்களை இணைத்துள்ளன.

iv. நெடுஞ்சாலைப்பணிகள், அதனோடு தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு, இயக்குதல், பராமரித்தல் கட்டுமானப்பணிகள் போன்றவற்றில் முதலீடு செய்வதற்கான பெரும் வாய்ப்புகள் உருவாகும்.

iv. பாரத்மாலாவின் முதல் கட்டத்தில் 24,800 கிலோமீட்டர் நீள பெருவழிப் பாதை வலைப்பின்னலைத் தரம் உயர்த்துவதால், இக்காலகட்டத்தில் சுமார் 34 கோடி மனித வேலை நாட்களை இது உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோன்று பொருளாதார நடவடிக்கைகளின் நிலை அதிகரிப்பதால் தோராயமாக 22 மில்லியன் நிரந்தர வேலை வாய்ப்புகளும் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- **யுத்வீர் சிங் மாலிக்** - இந்திய அரசின் சாலைப்போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறை செயலாளர்.

●

# இந்திய வங்கித்துறையில் பெருந்தரவுகள் பகுப்பாய்வு

- சதுர்பூஜாபாரிக், ஸ்ரீகாந்த் சர்மா

**அறிமுகம்:**

அனைத்து விஷயங்களைப் பற்றியும் நம்மிடத்தில் பலவிதமான தரவுகள் இருக்கின்றன. அவற்றை சேமித்து வைக்கவும், அவை பற்றி ஆராயவும் நம்மால் முடிகிறது. வாடிக்கையாளரின் நடத்தை பற்றியும் அவர்களின் முன்னுரிமைகள் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு பெருந்தரவுகள் நமக்கு உதவுகின்றன. பலவிதமான தகவல்களைக் கொண்டிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான தரவுகளை ஆராயும்போது அவற்றில் மறைந்து கிடக்கும் பாங்குகளையும், இணைந்திருக்கும் உறவுகளையும், சந்தைப்போக்குகளையும், வாடிக்கையாளர் முன்னுரிமைகளையும், பயனளிக்கக்கூடிய இன்ன பிற விவரங்களையும் நாம் பெறமுடியும். இவை தொழில் தொடர்பான சரியான முடிவுகளை எடுப்பதற்கு உதவும். பலவிதமான கம்பெனிகள், நிறுவனங்கள் பெருந்தரவுகளைப் பயன்படுத்திக்கொள்கின்றன. அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெறும் தேர்தல்களிலும் பெருந்தரவுப்பகுப்பாய்வுகள் சரியான முடிவுகளைத் தந்துள்ளன.

## பெருந்தரவுகள் நடைமுறையில் எப்படி பயன்படுத்தப்படுகின்றன?

அந்தந்த எல்லைகளுக்குள் எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் பெருந்தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. இவை இப்பொழுது பயன்பட்டுவரும் முக்கியமான பகுதிகள் வருமாறு:

1. தொழில் வழிமுறைகளைப் புரிந்துகொள்வதற்கும், அவற்றை சிறப்புறப் பயன்படுத்திக்கொள்வதற்கு.
2. நலச்சேவைகளையும் பொதுசுகாதாரத்தையும் மேம்படுத்துவதற்கு.
3. அறிவியலையும், ஆராய்ச்சியையும் மேம்படுத்துவதற்கு.
4. நகரங்களையும், நாடுகளையும் மேம்படுத்தி பயன்கொள்வதற்கு.
5. பாதுகாப்பு, சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை மேம்படுத்த.

நம்முடைய அன்றாடவாழ்வில் சில வகை பெருந்தரவுப்பகுப்பாய்வுகள் நம்மை பலவிதமாகப் பாதிக்கின்றன. பல்வேறு இணையதளங்களை நாம் பார்வையிடும்போது சில வகைத் தரவுகளை நாம் பகிர்ந்துகொள்கிறோம். இவற்றின் அடிப்படையில் நம்முடைய சமூகப்பழக்கங்கள், செலவழிக்கும் முறைகள் போன்றவை கண்டுகொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் மின்னஞ்சலில் விளம்பரங்களும், தகவல்களும் உங்களுக்கு வந்தபடியே இருக்கும். ஒரு வாடிக்கையாளராக நீங்கள் அடையாளம் காணப்பட்டு இருக்கிறீர்கள் என்பது இதற்குப் பொருள். எனவே, மின்னணு புரட்சியானது 2020ஆம் ஆண்டுவாக்கில் ஒவ்வொரு மனிதனைப்பற்றியும் ஒரு நொடிக்கு 1.7 MB தகவல்களை பெற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத்தரவுகள் Facebook, WhatsApp மூலம் மட்டுமின்றி, கைபேசியில் உள்ள GPS செயலி, தரவேற்றமும், தரவிறக்கமும் செய்யப்படும் நிழற்படங்கள், வீடியோக்கள் போன்றவற்றின் மூலமும் பெறப்பட்டுவிடும். இந்தியாவில் அனைத்தையும் ஆதார் தரவுகளுடன் இணைக்கும் முயற்சி வாடிக்கையாளரின் ஒப்புதலுடன் பொருள்களை விற்பதற்கு உதவும்.

## இந்தியாவில் வங்கிகள் உரையாடும் பாங்கு

வங்கிகளின் தரவுகள் ஒன்றிணைக்கப்படுவதற்கு முன்பு 1990களில் வங்கிக்கிளைகளில் பணிபுரியும் ஊழியர்களின் மூலம் வாடிக்கையாளர்கள் தனித்தனியாக அடையாளம் கண்டறியப்பட்டனர். வாடிக்கையாளர்கள் யார், அவர்களின் குடும்பப்பின்னணி என்ன, அவர்கள் என்ன செய்ய முயற்சித்து வருகின்றனர் என்பதை ஊழியர்கள் நன்கு அறிவார்கள். அத்தகைய புரிதல்களை வங்கிகள் இப்போது இழந்துவிட்டன. மாற்றங்கள் ஏற்பட்டுவரும் இந்தச்சூழலில் வாடிக்கையாளார்களின் தேவைகள் பற்றி நாம் உணரவேண்டும். பெருந்தரவுகளை ஆராய்வதின் மூலம் நாம் இவற்றைக் கண்டறியமுடியும். வாடிக்கையாளர்கள் பற்றிய முக்கியமான தகவல்களைக் கொண்டு வங்கிகள் தங்களின் சேவைகளைத் திறம்படச் செய்யமுடியும்.

தற்போதைய சூழலில் நம்முடைய மரபு காரணமாகவும், ஊழியர்களின் போக்கு காரணமாகவும், சரியான தரவுகள் சேகரிக்கப்படாமல் இருப்பது நம்முடைய பயணத்தை கடினமாக்குகிறது. எனவே, பெருந்தரவுகளின் அடிப்படையில் அணுகுமுறைகளை நாம் மேற்கொள்ளவேண்டுமாயின் நாம் பின்வரும் வழிமுறைகளைக் கையாளவேண்டும்.

அவை: 1. தரவு சேகரிப்பு 2. தரவு சேமிப்பு 3. தரவு பகுப்பாய்வு 4. தரவு பயன்பாடு.

தரவுகளை நாம் இரண்டு பகுதிகளாகப் பகுத்துக்கொள்ளவேண்டும். ஒரு பகுதி தற்போதிருக்கும் வாடிக்கையாளர்களுக்கானது. மற்றொன்று எதிர்வரும் காலத்தில் வாடிக்கையாளராக வரக் கூடியவர்களுக்கானது.

## தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் தரவுகள் சேகரிப்பு:

1. வங்கி கிளைகள் 2. செயலி வழி பரிமாற்றம் 3. இணைய வங்கி 4. குறுஞ்செய்திகள் 5. மின்னஞ்சல்கள் 6. கடன் மதிப்பீடு, கடன் தகவல் நிறுவனங்கள் போன்ற பல்வேறு விதமான வழிகளின் மூலம் தரவுகளை சேகரிக்கலாம்.

1. **வங்கிக் கிளைகள்**: வங்கிக்கிளைகள் பல இடங்களில் பரந்து இருப்பது ஒரு விதத்தில் ஆதாயமாகும். ஊழியர்களை முறையாகப் பயன்படுத்தி தரவு சேகரிப்பு மனப்பாங்கை உருவாக்கவேண்டும்.
2. **செயலி வழி, இணைய வழி வங்கிப்பரிமாற்றம்**: இத்தகைய வசதிகளை ஏற்கனவே பலரும் பயன்படுத்திவருவதால் இது ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகும். செயலிகளில் சில குறிப்பிட்ட அம்சங்களை அறிமுகப்படுத்தி தரவுகளைப் பெறமுடியும். வரி கணிப்பான், நிதி திட்டமிடல், காசோலைக் கட்டணங்களில் சலுகை தந்து பொருள்கள் விற்பனை, இவை போன்ற சில சலுகைகளை அளித்து வாடிக்கையாளார் களைக்கவர்ந்து தரவுகளைப் பெறுவது ஆகிய வழிகளில் முயற்சிக்கலாம். வாடிக்கையாளர்கள் அவர்களின் வருமானம், சேமிப்பு பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கு ஊக்குவிக்கும் வழிகளைப் பற்றி நாம் சிந்தித்தாக வேண்டும்.
3. **குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள்**: வங்கிகள் தங்களது சேவைகள் பற்றிய வாடிக்கையார்களின் கருத்துக்களை குறுஞ்செய்திகள், மின்னஞ்சல்கள் மூலம் பெற்று தரவுகளைச் சேகரிக்கலாம்.
4. **கடன் மதிப்பீடு**: கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் தரவுகளை கடன் மதிப்பீட்டு அமைப்புகளிடமிருந்து பெறலாம்.
5. **கடன் தகவல் நிறுவனங்கள்**: கடன் வாங்கியிருக்கும் நபர்கள் வசிக்கும் இடம், முகவரி மாற்றம், அவர்களின் கடன் அட்டை போன்ற பொருத்தமான பிற தகவல்களை சேகரிக்கலாம்.
6. **தரவு சேமிப்பு**: பெருந்தரவுகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களிடமிருந்து தரவுகளை பெற்று வங்கிகள் சேமித்து வைக்கலாம்.
7. **தரவுப்பகுப்பாய்வும், பயன்பாடும்**: வங்கிகள் தங்களின் தேவைகளுக்கு உதவக்கூடிய தரவுகளின் மீது கவனம் செலுத்தி அவற்றை சேகரிக்கவேண்டும்

## சில வகைப் பயன்கள்:

- வங்கிகள் தங்களுக்குத்தேவைப்படும் தரவுகளைப்பெற்று வாடிக்கையாளர்களுக்கு நாள்காட்டி, குறிப்பேடு, பிறந்த நாள் வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை அனுப்பி மேலும் ஆதரவைக்கோரவேண்டும். பாதிக்கப்பட்ட வாடிக்கையாளரின் கோபம் தணிக்கும் வழிமுறைகளைக் காணவேண்டும்.
- கடன் தரப்பகுப்பாய்வு முகமைகள் வைத்திருக்கும் தரவுகள் கடன் பெறத்தகுதியானவர் பற்றி தெரிந்துகொள்ள உதவும். அத்தகையவர்களிடம் தொடர்ந்து பேசி கடன் திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கடன் அட்டைகள், கார் கடன், வீட்டுக்கடன் போன்றவற்றை வழங்குவதற்கும், கடனைத் திருப்பி செலுத்தும் வாடிக்கையாளரின் தன்மை பற்றித் தெரிந்து கொள்ளவும் தரவுகள் உதவும்.

## புதிய வாடிக்கையாளர்கள்:

வங்கிகளின் இணையதளம் மிகச் சிறந்த கருவி. வாடிக்கையாளர்களை மையப்படுத்திய அடிப்படைத்தகவல்களை சேகரித்தபிறகு இணையதள பக்கங்களில் நுழைவு அனுமதிக்கப்படலாம். பிற இணையதளங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு நமக்கேற்ற தகவல்களைப் பெறலாம்.

## முடிவுரை:

வங்கிகளுக்கு நேரில் வருபவர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கும் இந்த காலகட்டத்தில் பெருந்தரவுகளைப் பெறுவது அவற்றை ஆராய்ந்து தகவல்களை அறிவது போன்ற பிற மாற்றுவழிகளை கையாள்வது வங்கிகளுக்கு மிகச் சிறந்த வாய்ப்புகளைப் பெற்றுத்தரும்.

---

- **சதுர்புஜாபாரிக்**, வங்கியாளர்.

**ஸ்ரீகாந்த் சர்மா**, குறு, சிறு, நடுத்தரத்தொழில் அமைப்புகளுக்கான தேசிய நிறுவனத்தில் கூடுதல் ஆசிரியர்.

●

# இந்தியாவின் நல்வளர்ச்சியினால் கடன் தரம் உயர்வு

- பிரபாகர் சாஹு, பவேஷ்கர்

**அறிமுகம்;**

இந்தியப்பொருளாதாரம் தொடர்பாக பன்னாட்டுக் கடன் தரநிர்ணய அமைப்புகளிடம் நிலவிவந்த தவறான எண்ணங்கள் பற்றி 2016-17ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பின்னணியில் இந்தியாவின் கடன் தரம் உயர்த்தப்படவேண்டுமா இல்லையா என்பது பற்றி நடந்த சர்ச்சைக்கிடையே இறுதியாக மூடிஸ் எனும் அமைப்பு இந்தியாவின் கடன் தரத்தை Baa3 லிருந்து Baa2 ஆக, அதாவது, கடன் நிலைமை பாசிடிவ் (நேர்மறை) என்பதிலிருந்து ஸ்டேபில் (நிலையான) என்ற அளவுக்கு உயர்த்தியுள்ளது. இந்த உயர்வு, 13 வருடங்களுக்குப் பிறகு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வுக்கு மூடிஸ் அமைப்பு பல காரணங்களைத் தெரிவித்துள்ளது. அவைகளாவன: பொருள்கள் மற்றும் சேவைகள் வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள வரிகள்சார் நிலைமை, திவால் சம்மந்தப்பட்ட வழக்குகளைத் தீர்க்கவல்ல, நொடித்துப்போன மற்றும் திவாலான நிலைமைசார் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பணப்பரிமாற்றத்தைக் குறைக்க இந்தியா முனைப்பாக மேற்கொண்டுள்ள சீர்திருத்த முயற்சிகளாவன: பல துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டு உயர்அளவை அதிகரித்திருப்பது, இந்தியாவின் சாலைகள், துறைமுகங்களை மேம்படுத்துவது சார்ந்த பல புதிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் அறிவிப்பு, நிதி நிலைப்பாதுகாப்பு மேலாண்மைப்பாதையில் பயணிப்பு ஆகியவையாகும். இந்தியாவில், வியாபாரம் செய்வது, உலகளவிலான உலக வங்கியின் தரவரிசையில் இந்தியா 30 இடங்கள் முன்னேறி 100ஆவது இடத்தை இந்தாண்டு பெற்றது, அடுத்த மிக முக்கியமான செய்தியாக அமைந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக இந்தியப் பொருளாதாரம் சிறந்த மேம்பாடு அடைந்திருக்கும் நிலையிலும் மற்றொரு கடன் தரநிர்ணய அமைப்பான "ஸ்டான்டர்டு அண்ட் பூர்" (S&P) இந்தியா கடன் தரத்தை உயர்த்தவேவில்லை. 2007லிருந்தே இந்தியா தனது கடன்தரத்தை ஸ்டேபில் (நிலையான) என்ற அளவிலேயே வைத்துள்ளது எனத் தெரிவிக்கிறது.

**கடன் தரநிர்ணயத்தின் முக்கியத்துவமும் அதன் உயர்வினால் விளையும் பயன்களும்:**

ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய முதலீடுகளுக்கான தரத்தை நிர்ணயிப்பதற்காக அந்த நாட்டின் பொதுவான நிதிசார் அளவுகளும், மேல்மட்டப் பொருளாதார அளவுகளும் கடன் வாங்கும் நாடுகளின் ஸ்திரத்தன்மை, வரும் காலங்களில் அதனுடைய பொருளாதார நிலைமை எப்படி இருக்கும், அந்த நாடு எந்த அளவு தன்னுடைய கடன்களைத் திருப்பிக்கொடுக்கக்கூடிய வல்லமையும், விருப்பமும் பெற்றுள்ளது (கடனைத் திருப்பிக்கொடுக்கமுடியாத நிலைமை உள்ளதா) என்பனவற்றை கடன்தர நிர்ணய அமைப்புகள் ஆராய்கின்றன. உலகளவில், இது போன்ற அமைப்புகள், மூன்று உள்ளன - ஸ்டான்டர்டு அண்ட் பூர், மூடிஸ், ஃப்ட்ச். அவை கூறுவது - குறிப்பிடப்படும் கடன் தர அளவு, அந்த நாட்டின் கடன் தரத்தை உறுதி செய்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏனெனில், வரும் காலத்தைத் துல்லியமாகக் கணிக்க முடியாது. இந்த அளவுகளை அந்நாட்டு, பொருளாதார சந்தையிலிருந்து கிடைக்கும் ஓர் அறிகுறியாகவே கருதவேண்டும். அது அல்லாமல், எல்லாக் கடன் தரநிர்ணய அமைப்புகளும் ஒரே வகையான ஆய்வுகளையும் முடிவுகளையும் மேற்கொள்வதில்லை. உதாரணமாக, ஒரு நாட்டின் கடன் வாங்கும் தன்மையையும், எந்த அளவுக்கு அது கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் போகலாம் என்பதையும் ஒரு வகை ஆய்வு பார்க்கிறது. ஆனால் மூடிஸ், இப்படி கடன் திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில், என்னவகையான இழப்புக்கள் ஏற்படக்கூடும் என்பதை ஆராய்கிறது. உலகளாவிய நிதி நெருக்கடி ஏற்பட்ட போது, AAA என்ற மிக உயர்தர கடன்தரமதிப்பு பெற்ற நாடுகளும்கூட கடன்களை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும் இந்தக் கடன் தரநிர்ணயத்தின் முக்கியத்துவம் இன்னும் குறையவில்லை. கடன் தரநிர்ணயங்கள், ஒரு பொதுநியதி முறையில், செயல்படாமல், ஒவ்வொரு அமைப்பும் தங்கள் அணுகுமுறைக்கு ஏற்ப செய்யப்படுவதால், ஒரு நாடு உலகளவில் கடன் வாங்கும் நிலைமையையும், கடன் விகிதத்தையும்

அது பாதிக்கிறது. எனவே, எல்லாநாடுகளும் கடன்தர நிர்ணய அமைப்புகளை நம்பியுள்ளன (கொர்வர் 2005).

உலக நிதிச்சந்தையிலிருந்து கடன்பெறவும் தம் நாடுகளுக்கு அந்நிய முதலீட்டைப் பெறவும் இந்தியா போன்ற வளரும் சந்தைப்பொருளாதாரங்கள் இது போன்ற பன்னாட்டுக் கடன் தரநிர்ணய அமைப்புகளைச் சார்ந்துள்ளன. ஆகவே, இந்தக் கடன் தரநிர்ணயங்கள் ஒரு நாடு பெறக்கூடிய மூலதனங்களையும் அதனால் ஏற்படும் பொருளாதாரவளர்ச்சியையும் பாதிக்கின்றன. ஒரு நாட்டில் முதலீடு செய்வதற்கான கடன் தரத்தை இந்த அமைப்புகள் நிர்ணயிக்க, அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எதிரான மொத்தக்கடன்கள், வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள், உள் நாட்டு மொத்த உற்பத்தியின் உயர்வு, தனி நபர் மொத்த உள் நாட்டு உற்பத்தி, அந்நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நேரடி அந்நிய முதலீடு, நிதிசார், மற்றும் வரவு செலவுப்பற்றாக்குறை; மற்றும் ஒரு நாடு எந்த அளவிற்கு தன்னுடைய கடன்களைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறது என்பன போன்ற பல காரணிகளை ஆராய்கிறது.

மூடிஸால் உயர்த்தப்பட்டுள்ள இந்தியாவின் கடன்தர நிலைமையால் பல நன்மைகள் விளையும். இந்தியாவிற்கு தற்போது, அதிக முதலீடு உள்ளதால், இந்த தர உயர்வால் வெளிநாடுகளிலிருந்து கடன் பெறும் நிலைமை இனிமேல் எளிதாகி அதனால், பொருளாதார வளர்ச்சி மேம்படும். இரண்டாவதாக, பெறப்படும் முதலீடுகளை சற்றுக்குறைந்த வட்டியில் பெறமுடியும். மூன்றாவதாக, நாம் வெளிநாடுகளுக்குத் திருப்பிக்கொடுக்கவேண்டிய கடன்களைக் குறைந்த செலவில் செலுத்தமுடியும். இதனால், முதலீடுகள் பெருகி, பங்குச்சந்தையும், பொருளாதாரமும் மேம்படும்.

## 2. இந்தியப்பொருளாதாரத்தின் செயல்பாடு

கடந்த பத்தாண்டுகளில் இந்தியப் பொருளாதாரம், சிறிதளவு சிறப்பாக செயல்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில், இந்தியப்பொருளாதாரத்தின் வளர்ச்சி, சராசரியாக 7.68 சதவிகிதமாக உள்ளது. உண்மையில், தற்போது, வளர்ந்துவரும் பொருளாதார நாடுகளில் இந்தியா அதிவேகமான வளர்ச்சியைக் கண்டுவருகிறது. 2017-18இல் பொருளாதாரவளர்ச்சி 7.2 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிற வளரும்நாடுகள், சராசரியாக 4.1 சதவிகிதவளர்ச்சி கண்டுள்ள நிலையில் இந்தியா அவர்களை முந்தியுள்ளதற்கு ஏற்றுமதி உயர்வு முக்கியமான காரணம்.

**அட்டவணை 1: இந்தியப்பொருளாதாரத்தின் உயர்மட்டக்குறியீடுகள்**

| ஆண்டு | வரவு செலவுப்பற்றாக்குறை (உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சதவிகிதமாக) | நிதிசார் பற்றாக்குறை (உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சதவிகிதமாக) | அந்நிய நேரடி முதலீடுகள் வரவு (US $ பில்லியன்களில்) | மொத்தக் கடன் (உள்நாட்டு மொத்த உற்பத்தியில் சதவிகிதமாக) |
|---|---|---|---|---|
| 2007 | 1.0 | 5.1 | 22.826 | 74.027 |
| 2008 | 1.3 | 4.0 | 34.844 | 74.536 |
| 2009 | 2.3 | 8.3 | 41.903 | 72.527 |
| 2010 | 2.8 | 9.3 | 37.745 | 67.458 |
| 2011 | 2.8 | 6.9 | 36.047 | 69.643 |
| 2012 | 4.2 | 7.8 | 46.551 | 69.105 |
| 2013 | 4.8 | 6.9 | 34.298 | 68.529 |
| 2014 | 1.7 | 6.7 | 36.047 | 68.576 |
| 2015 | 1.3 | 6.7 | 45.147 | 69.551 |
| 2016 | 1.1 | 7.5 | 55.558 | 69.537 |

ஆதாரம் : இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பன்னாட்டு நிதிசார் நிதியம். (IMF, IFS)

அட்டவணை 1இல் இந்தியப்பொருளாதாரத்தின் உயர்மட்டக்குறியீடுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. உலகளாவிய நிதி நெருக்கடிக்குப்பின் இந்தியாவின் வரவு செலவு நிலைமை பெரிதும் முன்னேறியுள்ளது. 2013இல் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு எதிரான வரவு செலவு பற்றாக்குறை மிக அதிக

அளவில், 4.8 சதவிகிதமாகக்கூட உயர்ந்தது. அப்போது, நிதிசார் பற்றாக்குறை உள்நாட்டு மொத்தஉற்பத்திக்கு எதிராக 7 சதவிகிதம் இருந்த நிலையில், ஏற்றுக்கொள்ள முடியாதஅளவில் இருந்தது. செப்டம்பர் 2014இல் இந்தியப் பிரதமர் "இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்" என்ற முக்கியமான திட்டத்தை அறிவித்து, பொருள் உற்பத்தித்துறைக்கு ஊக்கமளித்து, வேலை வாய்ப்பைப்பெருக்கி வளர்ச்சியை அதிகமாக்கிய நிலையில் இந்தியப் பொருளாதாரம் உச்சகட்ட பற்றாக்குறைகளுக்கிடையேயும் நாட்டிற்குத் தேவையான நிதியை அந்நிய முதலீடுகள் மூலம் பெற்றுள்ளது. நேரடி அந்நிய முதலீடுகள் நிலையாக செயல்படுபவை. அவை திடுதிப்பென்று நின்றுவிடாது. இந்த முதலீடு 2007இல் இந்தியாவில் அமெரிக்க டாலர் 22.86 பில்லியனாக இருந்தது, 2016இல் அமெரிக்க டாலர் 58.55ஆக உயர்ந்தது. 2020இல் உள் நாட்டு மொத்த உற்பத்தியில் பொருள் உற்பத்தித்துறையின் பங்கை 25 சதவிகிதமாக உயர்த்த "இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்" என்ற திட்டத்தின் கீழ் குறிப்பாக 25துறைகளில் 100மில்லியன் வேலைகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்தத்திட்டம் துவங்கியதிலிருந்து இந்தியஅரசு உள்கட்டமைப்புமேம்பாடு, சுற்றுசூழல்அனுமதி வழங்குதலை எளிதாக்குதல், இந்தியாவில் தொழில்/ வியாபாரம் செய்வதை எளிதாக்குதல், அறிவுசார் சொத்துக்களுக்குப்பாதுகாப்பு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு ஊக்கம், சட்டவகைகளை எளிதாக்குதல், தொழிலாளர் நலச் சட்டங்களில் சீர்திருத்தம், அந்நிய நேரடி முதலீட்டை எளிதாக்குதல்; திறமையான வர்த்தகக்கொள்கைகள் மூலம் வெளிப்படையான பொருளாதாரத்தைத் தோற்றுவிப்பது போன்ற பலதரப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, இந்திய அரசின் பொருளாதாரத் திட்டங்கள் நிலையாகவும், முற்போக்காகவும் இருந்து வியாபாரம் செய்வதற்கான சூழ்நிலை நிலையாகவும், ஊக்கமுள்ளதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டிற்குள் வரும் மூலதன நிதி அதிகரிப்பு இப்போது நிச்சயத்தன்மையைப் பெற்றுள்ளது. வளர்ச்சியையும், புதிய வேலைகளைத் தோற்றுவிப்பதிலும் அந்நிய நேரடி முதலீடுகள் முக்கிய பங்காற்றுவதால் கடந்த சில ஆண்டுகளில் சிறப்பான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நிதிசார் நிலைமை கடந்த சில ஆண்டுகளாக சிறிதளவு பாதிக்கப்பட்டிருந்தாலும் அவற்றை சரி செய்ய சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் கடன் தரத்தை நிர்ணயிப்பதில் உள்நாட்டு மொத்த உற்பத்திக்கு எதிரான மொத்தக்குறியீடு ஒரு முக்கிய காரணியாகும். இது, 2003இல் 84.2 சதவிகிதம் என்ற உச்சநிலைமையை அடைந்து பிறகு படிப்படியாக முன்னேறி 2016இல் 69.5ஆக இருந்தது. இந்தியாவின் மொத்தக் கடனில் பொதுக்கடன் 42 சதவிகிதம் மட்டுமே, அதுவும் உள்நாட்டுக்கடனே. 2007இல் ஸ்டான்டர்டு அண்ட் பூர் அமைப்பு இந்தியாவின் கடன்தரத்தை உயர்த்திக்காட்டியபோது உள்நாட்டு மொத்த உற்பத்தியில் கடனின் அளவு 77.3 சதவிகிதமாக இருந்தது; 2016இல் இது 69.5 சதவிகிதமாகக் குறைந்தது.

2023க்குள் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் கடனின் பங்கை 60 சதவிகிதமாகக் குறைக்க நிதிசார் பொறுப்பு மற்றும் பட்ஜெட் மேலாண்மைக் குழு உறுதி கொண்டுள்ளது. நிதிநிலை செயல்பாடுகளுக்கு அடிப்படையான ஆதாரப்பற்றாக்குறை இந்தியாவைப்பொறுத்த அளவில் சாதகமாகவே உள்ளது. ஆனால், மேற்கூறப்பட்ட அமைப்பு கருதுவது என்னவென்றால் வட்டிச்சுமை அதிகமாக உள்ள நிலையில் நிதிசார் பற்றாக்குறையை நாம் கவனமாக பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதே.

**அட்டவணை 2: இந்தியாவின் வெளிநாட்டுக் கடன்சார் முக்கிய குறியீடுகளும், அளவுகளும்**

| ஆண்டு கடன் திருப்பிக் கொடுக்கும் அளவு | வெளிநாட்டுக்கடன் கடன் US $ பில்லியன்களில் | உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் | மொத்த வெளிநாட்டுக் கடனில் நீண்டகாலக் கடன் | மொத்த வெளிநாட்டுக் கடனில் குறுகிய காலக் கடன் |
|---|---|---|---|---|
| 2007<br>4.7 | 172.36 | 17.5 | 83.7 | 16.3 |
| 2008<br>4.8 | 224.407 | 18.0 | 79.6 | 20.4 |

| ஆண்டு கடன் திருப்பிக் கொடுக்கும் அளவு | வெளிநாட்டுக்கடன் கடன் US $ பில்லியன்களில் | உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வெளிநாட்டுக் கடன் | மொத்த வெளிநாட்டுக் கடனில் நீண்டகாலக் கடன் | மொத்த வெளிநாட்டுக் கடனில் குறுகிய காலக் கடன் |
|---|---|---|---|---|
| 2009<br>4.4 | 224.498 | 20.3 | 80.7 | 19.3 |
| 2010<br>5.8 | 260.935 | 18.2 | 79.9 | 20.1 |
| 2011<br>4.4 | 317.891 | 18.2 | 79.6 | 20.4 |
| 2012<br>6.0 | 360.766 | 21.1 | 78.3 | 21.7 |
| 2013<br>5.9 | 409.374 | 22.4 | 76.4 | 23.6 |
| 2014<br>5.9 | 446.178 | 23.8 | 79.5 | 20.5 |
| 2015<br>7.6 | 474.675 | 23.8 | 82.0 | 8.0 |
| 2016<br>8.8 | 485.023 | 23.7 | 82.8 | 17.2 |

ஆதாரம் : இந்திய ரிசர்வ் வங்கி

வெளிநாட்டுக்கடன் குறியீடுகளைப் பார்க்கும்போது, நீண்ட காலக்கடன்கள் 83 சதவிகிதமாகவும் குறுகிய காலக்கடன்கள் 17 சதவிகித அளவிலும் உள்ளன (அட்டவணை 2) கடன் திருப்பிக்கொடுக்கவேண்டிய அளவு 2014இல் 5.9 என்பதிலிருந்து 2016இல் 8.8 என்று உயர்ந்திருப்பது சிறிது கவலையளிக்கிறது. 2007-2016 கால கட்டத்தில் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் வெளிநாட்டு மொத்தக்கடன் 6 சதவிகிதம் உயர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் மொத்த வெளிநாட்டுக்கடன்களில் நீண்ட கால மற்றும் குறுகிய காலக்கடன் அளவுகள் 1 சதவிகிதத்திற்கும் குறைவாகவே மாறுபட்டுள்ளன. ஆனால், நாட்டின் மொத்த வெளிநாட்டுக்கடனில் குறுகிய கால மற்றும் நீண்ட காலக்கடன்களின் அளவு பற்றிய நிலைமை சற்று கவலையளிக்கிறது. உண்மையில் 2013-2016க்கிடையே மொத்த வெளிநாட்டுக்கடனில் நீண்ட காலக்கடன் 6 சதவிகிதம் உயர்ந்திருப்பது, குறுகிய காலகட்டத்தில் உள்ள கவலையை சற்று குறைத்துள்ளது.

கடன்தர நிர்ணயம், அந்நிய செலாவணி கையிருப்பில் ஒரு நாடு நிலையாக உள்ளதா என்பதைக் காட்டுகிறது. இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு 2007இல் US $ 199.179 பில்லியனாக இருந்தது 2016இல் US $ 360.176 பில்லியனாக உயர்ந்தது. ஆகவே, அடுத்த சில ஆண்டுகளில், வெளிநாட்டு முதலீடுகளும் இந்தியப் பணத்தின் பரிமாற்றுவிகிதமும் பாதிக்கப்பட்டாலும் பிரச்சினை இல்லை. 2013இல் அந்நியசெலாவணி கையிருப்பால் நாம் இறக்குமதிகளை சமாளிக்கக்கூடிய காலஅளவு 2013இல் 7 மாதங்கள் என்று இருந்தது. 2017இல் மொத்த அந்நிய செலாவணி கையிருப்பு டாலர் 400ஐ மிஞ்சிய நிலையில் 12 மாதங்களாக உயர்ந்தது.

பொருளாதாரத்தில் உயர்மட்டக் குறியீடுகள் மேம்பட்டது மட்டுமல்லாமல் இந்தியஅரசு அந்நியமுதலீட்டையும், வளர்ச்சியையும் ஊக்குவிக்க உள் கட்டமைப்புத் துறைக்கு அதிக நிதியை ஒதுக்குவது, பல முக்கியத்துறைகளில் நேரடி அந்நிய முதலீட்டை உயர்த்துவது, தொழில் - வியாபாரம் துவங்க அனுமதி அளிப்பதை துரிதப்படுத்துவது, மாநிலங்கள் தொழிலாளர் நலம்சார் சீர்திருத்தங்களை ஊக்குவிப்பது, கடனைத்திரும்பச்செலுத்த இயலாமை மற்றும் திவால்சார் சட்டங்களை மாற்றி இந்தியாவில் வியாபாரம் செய்வதை எளிதாக்கி, பொருள் மற்றும் சேவை வரிகள் ஆகியன போன்ற பல முக்கிய சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பொருள் உற்பத்தித் துறையில் அதிக மூலதனங்களை ஈர்க்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், அரசு முன்னணித்திட்டமான “இந்தியாவில் பொருள் உற்பத்தி செய்வோம்” என்பதைத் துவக்கியது மட்டுமல்லாமல், அதோடு கூட “தொழில் துவங்கு இந்தியா” “திறன்மிகு இந்தியா”, “மின்பதிவு இந்தியா” போன்ற திட்டங்களையும் துவக்கியுள்ளது. மூலதன தரக்குறியீட்டை நிர்ணயிக்கும் ஒரு முக்கியகாரணி, தனியார் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தடைபட்டுள்ள தங்களுடைய நிறுவனங்களின் கணக்குகளை சீர்செய்துகொள்ள ஏதுவான சட்டங்களை சீர்திருத்துவதாகும்.

**பெட்டிச்செய்தி 1:**

**எளிதாக வியாபாரம் செய்ய ஏதுவான சமீப கால முயற்சிகள்:**

- பலவகையான முன் அனுமதிகளை சீரமைக்க சிறப்புக்குழு அமைப்பு.
- 14வகையான ஒழுங்குமுறை அனுமதிகளைப்பெற 24 மணி நேரமும் செயல்படும் வலைதளம்சார் வியாபாரஅமைப்பு.
- அடுத்த 4 ஆண்டுகளில் நிறுவனங்களுக்கான வருமானவரியை 30 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாகக் குறைப்பது.
- வரி தவிர்ப்புக்கு எதிரான நியதிகளை இரண்டாண்டுகளுக்கு தள்ளிப்போடுதல். முன் காலத்திலிருந்து செயல்படும்படியான வரிகள் முழுவதுமாக விலக்கப்பட்டது.

- செயல்படாத நிறுவனங்களிலிருந்து முதலீட்டாளர்கள் எளிதாக வெளியேற புதிய திவால் சட்டம். 2015இன் திவால் வழிமுறைகளுக்குத் துணைபுரியும் விதத்தில் கூடுதலாக, 2016இல் முழுமையான திவால் சட்டம் உருவாக்கல்.
- வியாபார வழக்குகளை விரைவில் முடித்து வைக்க புதிய சட்ட அமைப்பு முறை உருவாக்கும் எண்ணம்.
- வரி வழக்குகளை ஒரே நேரத்தில் முடித்துவைத்தல்.
- கம்பெனி சட்டத்தில் சுமார் 50 திருத்தங்கள் அறிமுகம்.
- ஒரு நிறுவனத்தைப் பதிவு செய்ய தற்போது 15 முதல் 20 நாள்கள் தேவைப்படும் நிலையில் அதனை ஒரே நாளில் செய்து முடிக்கும் உத்தேசம்.
- இளம் இந்தியர்களுக்குத் திறன்களை வழங்க தேசிய திறன் மேம்பாடு கவுன்சில் அல்லாமல் பிற 1500 பல திறன்கள் வழங்கு பயிற்சி நிலையங்களுக்குக் கூடுதல் ஒதுக்கீடு.

- மார்ச் 1 2016க்குப்பின் பதிவு செய்யப்பட்ட புதிய நிறுவனங்களுக்கு 25 சதவிகித நிறுவனங்களுக்கான வருமான வரி 20 சதவிகிதமாக இருக்கும்.
- புதிதாகத் துவங்குபவர்களுக்கு மூன்று வருடங்களுக்கு வரியில்லை.
- இந்தியாவில் "தொழில் உற்பத்தி செய்வோம்" மற்றும் உற்பத்தி செலவைக் குறைக்க ஏதுவான அளவில் பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வரி மற்றும் சுங்கவரிகள் குறைப்பு.
- அரசு அலுவலர்களும் சட்ட அமைப்புகளும் அதிகப் பொறுப்பேற்கும் வகையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது.
- ஏற்றுமதி இறக்குமதிக்கான படிவங்கள், 11லிருந்து 3 ஆகக் குறைப்பு.
- பாதுகாப்புத்துறைக்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அனுமதி தேவைப்படுவனவற்றில் 56% பொருட்களுக்கு விலக்கு.
- இந்திய முதலீட்டைப் போலவே அந்நிய நேரடி முதலீட்டையும் பாவித்தல்

### 3. இந்தியாவுக்கு எதிராகவும், சீனாவுக்கு சாதகமாகவும் ஓர வஞ்சனை

கடன் தரநிர்ணய அமைப்புகளின் செயல்தரம் சமமாக இல்லாததை இந்தியாவின் கொள்கை வகுப்போர் கண்டுள்ளனர். குறிப்பாக இந்தியா மற்றும் சீனா சார்ந்த போக்குகளை அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை (இந்திய அரசு 2017). இந்த ஆண்டு துவக்கத்தில் ஸ்டான்டர்டு அண்டு பூர் சரியாகவே சீனாவின் கடன் தர விகிதத்தை நிலையான என்ற நிலையிலிருந்து எதிர்மறையாக என்ற நிலைக்கு (அதாவது A+ லிருந்து AA-க்கு) மாற்றியது. இந்தியாவின் பொருளாதார அடிப்படை அம்சங்களில் மேம்பாடு ஏற்பட்டிருந்தாலும் நம்முடைய கடன் தரமதிப்பீடு உயர்த்தப்படவில்லை. இதைச் சுட்டிக்காட்டிய இந்தியஅரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் கடன் தரமதிப்பீடு அமைப்புகள் எப்படி நிலையான செயல்பாட்டை கொள்வதில்லை என்பதை விளக்கி, குறிப்பாக ஸ்டான்டர்டு அண்டு பூர்ஸ்சின் மதிப்பீடு மிகவும் மோசமானதாக உள்ளது என்று கூறினார். 2007இல்

ஸ்டான்டர்டு அண்டு பூர் இந்தியாவின் கடன் தரத்தை BBB- என்று உயர்த்தியது. அதற்குப் பிறகு. கடந்த 10 பத்தாண்டுகளில் (பிப்ரவரி 2009, மார்ச் 2010, ஏப்ரல் 2012 மற்றும் செப்டம்பர் 2014) பத்துமுறை மதிப்பீடு செய்தது. ஆனால், இந்தியாவின் கடன்தர நிலைமையில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவின் கடன்தரத்தை சற்று உயர்த்தியுள்ளது. இந்தக்கடன் தரமதிப்பீடு சில ஆண்டுகளுக்கு முன்னரே இன்னும் உயர்த்தப்பட்டிருக்கவேண்டும் என்று கொள்கை வகுப்பாளர்களும், சந்தை நிபுணர்களும் கூறுகின்றனர். வளர்ந்துவரும் மற்ற சந்தைப்பொருளாதார நாடுகளை ஒப்பிட்டுப்பார்க்கும் போது ஸ்டான்டர்டு அண்டு பூர் BBB- என்ற மதிப்பீடு வழங்கியுள்ளது. ஆனால், இந்தியப்பொருளாதாரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவை மேம்பட்டவை அல்ல. 2014-16ஆம் ஆண்டுகளில் பல நாடுகளின் உள்நாட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சியைப் பார்க்கும்போது, அது ஹங்கேரியில் 3.06 சதவிகிதமாகவும், இந்தோனேஷியாவில் 4.96 சதவிகிதமாகவும், ரஷ்யாவில் -0.79 சதவிகிதமாகவும், உருகுவேயில் 1.88 சதகிவிதமாகவும் இருந்தது (இந்த நாடுகள் அனைத்திற்கும்; ஸ்டான்டர்டு அண்டு பூர் கொடுத்த மதிப்பீடு BB-) ஆனால், இந்தக் காலகட்டத்தில், இந்தியாவின் உயர்வு, 7.3 சதவிகிதமாக இருந்தது. இதைப் பார்க்கும்போது, இந்தக் காலகட்டத்தில், இந்தியா மற்ற நாடுகளைவிட மேம்பட்டிருப்பது, தெளிவாகத்தெரிகிறது. விலைவாசி உயர்விலும், இந்தியாவின் நிலைமை இந்தோனேஷியா, இரஷ்யா மற்றும் உருகுவேவைவிட சிறப்பாகவே இருந்தது. உள்நாட்டு மொத்த உற்பத்திக்கு எதிரான அரசின் மொத்தக்கணக்கை ஒப்பிடும் போது, இந்தியாவின் நிலைமை (2016இல் 74.19) மற்றும் ஹங்கேரியைவிட (2016இல் 132.60) மேம்பட்டிருந்தது. ஆனால், வெளிநிலைமைகளைப் பார்க்கும் போது, ஹங்கேரி, இத்தாலி, இரஷ்யா மற்றும் உருகுவே நாடுகளுக்கு உள்நாட்டு வரவு, செலவில் உபரி இருந்தது. 2013இல், வரவு செலவு பற்றாக்குறை இந்தியாவில் 4.8 சதவிகிதமாக இருந்தது 2016இல் 1 சதவிகிதமாகக் குறைந்தது. வளர்ந்து வரும் மற்ற பொருளாதாரச்சந்தைகளை ஒப்பிடும்போது, நிலைமை கிட்டத்தட்ட ஒரே அளவாகத்தான் இருந்தது. எந்தவொரு நெருக்கடி நிலைமையிலும் இந்தியா, தான் திருப்பிக்கொடுக்க வேண்டிய கடனை தவிர்த்தது இல்லை. ஆகவே, இந்தியா, எப்போதும் சிறந்த பொருளாதார நிலைமையிலேயே இருந்துள்ளது. வெளிநாட்டு வரவு செலவு பற்றாக்குறையை நிலையான நேரடி அந்நிய முதலீடுகள் மூலம் இந்தியா சிறப்பாகவே சமாளித்தது.

சீனாவின் கடன்சுமை, வெகுவாக உயர்ந்த நிலையில் ஸ்டான்டர்டு அண்டு பூர், அதன் கடன் தரத்தை A+ லிருந்து AA– ஆக அதாவது நிலையான நிலையிலிருந்து எதிர்மறை நிலையாகக் குறைத்தாலும், இந்தியா தன்னுடைய பொருளாதார வளர்ச்சிவிகிதத்திலும் வரவு செலவு பற்றாக்குறை விஷயத்திலும், வெளிநாடுகளிலிருந்து வரும் முதலீடுகள் மற்றும் கடன் அளவுகளில் சீர்பட்ட நிலையிலும் இருந்தாலும் அதன் கடன் தரமதிப்பீட்டை மாற்றவே இல்லை. இந்தியாவும், சீனாவும் வெளிநாட்டு முதலீட்டிற்காக போட்டி போடும் இரண்டு பெரிய வளரும்நாடுகள். ஆனால், அவர்களுடைய பொருளாதார உயர்மட்ட அம்சங்களும், பன்னாட்டு முதலீட்டு நிலைமைகளும் வெவ்வேறானவை என்பதால் அவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது.

1990களில் இந்தியா தாராளமயமாக்கலை ஏற்றுக்கொண்டபின் தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்கு சீனாவைப்போல் அல்லாமல், தன்னுடைய பண மதிப்பீட்டை சந்தை நிலைமைக்கு ஏற்றவாறு மாற்றிக்கொண்டு பல ஆண்டுகளாக நிதி மற்றும் நடப்பு வரவு செலவு பற்றாக்குறை மூலம் செயல்பட்டுவந்தது. ஆகவேதான், பொருளாதார உயர்மட்டக்குறியீடுகளின் அடிப்படையில் இந்தியாவின் கடன்தர மதிப்பீடு ஏன் உயர்த்தப்படவேண்டும் என்று நாம் வாதாடுகிறோம்.

**படம் 1 மொத்தக்கடன் மற்றும் வெளிநாட்டுக்கடன் நிலைமைகள்**




ஆதாரம் : தனியார் கடன்தர மதிப்பீட்டு நிறுவனம்.

கடன் தர மதிப்பீட்டிற்கு ஒரு முக்கிய அம்சமான, உள்நாட்டு மொத்த உற்பத்தியின்

மொத்தக்கடன் விகிதம் பல நாடுகளில் மோசமடைந்துள்ளது. ஜப்பானில் அது, 239.2 சதவிகிதமாகவும், சிங்கப்பூரில் 112 சதவிகிதமாகவும் அமெரிக்காவில் 107 சதவிகிதமாகவும் ஸ்பெயினில் 99 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. ஆனால், இதைப்பற்றிக் கவலைப்படாத கடன் தரமதிப்பீட்டு அமைப்புகள் அவர்களுடைய கடன் தரத்தை மாற்றாமல் வைத்துள்ளன. உள் நாட்டு மொத்தஉற்பத்தியில் மொத்தக்கடனின் பங்கு இந்தியாவில், இவைகளைவிட குறைவாகவே உள்ளன. ஆனால், சீனாவைவிட அதிகம். இதனைக்காட்டியே, இந்தியாவிற்கு தற்போது வழங்கப்பட்டுள்ள கடன்தர மதிப்பீட்டை இந்த நிறுவனங்கள் நியாயப்படுத்துகின்றன (படம் 1). ஆனால், உலக வங்கி அமைப்பின் உலகளாவிய கடன்சார் எண்ணிக்கைப்பட்டியலில் மொத்த வெளிநாட்டுக்கடன்களில் இந்தியாவுக்கு சீனா மற்றும் பிரேசிலுக்கு அடுத்து மூன்றாம் இடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், எந்த நிலையிலும் இந்தியா உள்நாட்டுக்கடனையும், வெளிநாட்டுக்கடனையும் திருப்பிக் கொடுப்பதில் தாமதம் செய்யவில்லை என்பது இந்தியாவின் கடன் தர மதிப்பீட்டை உயர்த்தவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதாரமாக உள்ளது.

நிதி மற்றும் நடப்பு வரவு செலவு பற்றாக்குறை நிலைமையிலும், கடந்த சில ஆண்டுகளாக சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தியாவின் நிதி மற்றும் நடப்பு வரவு செலவு பற்றாக்குறை கடந்த சில ஆண்டுகளாக 10 சதவிகிதத்திற்கும் குறைவாக உள்ளது. அதே சமயம் சீனாவின் நடப்பு வரவு செலவு உபரி 2007இல் பத்து சதவிகிதம் இருந்தது. 2016இல் 2 சதவிகிதமாகக் குறைந்தது. இந்தியாவைக்காட்டிலும், சீனாவின் நிலைமை மேம்பட்டிருந்தாலும் இந்தியப்பொருளாதாரத்தில் காணப்படும் பல சிறப்பு அம்சங்களுக்காகவே கடன் தரமதிப்பீட்டை உயர்த்தலாம். 2007இல் $ 23 பில்லியன்களாக இருந்த நேரடி அந்நிய முதலீடு, 2016இல் மிக உயர்ந்த அளவான $ 56 பில்லியனை எட்டியது. இந்தியாவின் மொத்தக்கடனில், பொதுக்கடன் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 42 சதவிகிதமாகவே உள்ளது. இதில், வெளிநாட்டுக்கடன் 4 சதவிகிதம் மட்டுமே. சீனாவின் உள்நாட்டு உற்பத்திக்கு எதிரான கடன் 2010இல் 142 சதவிகிதமாக இருந்தது 2016இல் இது 205 சதவிகிதமாக இருந்தது. ஆனால், உள்நாட்டு உற்பத்திக்கு எதிரான கடன் இந்தியாவில் 70 சதவிகிதமாக இருந்தது. அதனால், இந்த இரண்டு நாடுகளையும் ஒப்பிடுவது தவறாகலாம்.

## 4. முடிவாக

இந்தியாவின் உயர் மட்டப்பொருளாதாரக் குறியீடுகள் குறிப்பாக முதலீடு மற்றும் கடன்களில் (பொருளாதார வளர்ச்சி) நடப்பு வரவு செலவு இருப்பு, நேரடி அந்நியமுதலீடு மற்றும் அந்நியசெலாவணி கையிருப்பு 2013க்குப்பிறகு மேம்பட்டுள்ளன. தன்னுடைய கடன்களைத் திருப்பிஅளிக்கக்கூடிய வசதியையும், விருப்பத்தையும் இந்தியா தெளிவாகக்காட்டியுள்ளது. தன்னுடைய கடமைகளிலிருந்து எப்போதும் விலகியதில்லை. இந்தியா மிகப்பெரிய அளவிலான கடன்சுமையை ஏற்கக்கூடிய நாடு. அந்தக்கடன் நிலைமையிலும் மேற்கொண்டு கடன் பெற நிதிநிலைமை வலுவாக உள்ளது. இந்தியாவின் நிலைமை நிலையாகவும், உலகளவில் வேகமாக வளர்ந்துவரும் நாடாகவும் உள்ளது. ஆகவே, கடந்த சில ஆண்டுகளாக, முதலீட்டாளர்கள் விரும்பும் நாடாக உள்ளது.

ஆனால், பன்னாட்டுக் கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் இந்தியாவுக்கு எதிராக பாரபட்சமாகவே உள்ளன. மூடியின் தற்போதைய மதிப்பீடு இந்திய பொருளாதாரத்தின் நிலையான தன்மையையும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும், நிலையான அரசியல் சூழ்நிலையையும் பிரதிபலிக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு ஸ்டான்டர்டு அண்டு பூர் இந்தியாவின் கடன் தரமதிப்பீட்டை அப்படியே வைத்துள்ளது. ஆகவே, பன்னாட்டுக் கடன் தரமதிப்பீட்டு அமைப்புகள் இந்தியாவிற்கு எதிராக பாரபட்சமாகவே உள்ளன என்ற குற்றசாட்டு நியாயமானதாகும். இந்த பாரபட்சம் இந்தியாவை பாதிக்கிறது. தனது பொருளாதாரம், வெளிநாட்டுக்கடன் நிலைமைகளைப் பொருட்படுத்தாமல் அந்நியமுதலீட்டை ஈர்த்து வேகமாக வளர இந்தியா நினைக்கிறது. ஆகவே, மற்ற கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் நியாயமான உயர்மதிப்பீட்டை வழங்கினால் அவசியமான முதலீடுகளைப்பெறமுடியும். ஆகவே, உயர்ந்த பொருளாதார வளர்ச்சி, நிலையான வெளிநாட்டு நிலைமைகள் விலையுயர்வுக்கட்டுப்பாடு ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு இந்திய நிலைமைக்கு ஏற்பவும், மற்ற நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையிலும் இந்தியாவின் கடன் தரமதிப்பீட்டை உயர்த்தவேண்டும்.

- **பிரபாகர் சாஹூ, பேராசிரியர்,** இன்ஸ்டியூட் ஆப் எக்னாமிக் க்ரோத், டில்லி, pravakarfirst@gmail.com

- **பவேஷ் கர்,** முனைவர் பட்ட மாணவர், இண்டியன் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி, ஐதராபாத், bhaveshgarg89@gmail.com

●

# உங்களுக்குத் தெரியுமா?

## இந்தியாவில் சிறப்பு வகை வங்கிகள்

ஒரு நாட்டின் நிதி அமைப்புமுறையில் நிதி நிறுவனங்கள் ஒரு முக்கியமான பாகமாகும். பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் நடுத்தர, நீண்டகாலநிதியை இவை அளிக்கின்றன. இந்தியாவில் ஊரகம், வீட்டுவசதி, சிறுதொழில்கள், ஏற்றுமதி, இறக்குமதி போன்ற துறைகளில் பெருகிவரும் தேவைகளை ஈடுகட்டுவதற்கென இத்தகைய சிறப்பு வகை நிதி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. இந்தத்துறைகளுக்கு கடன்களை வழிமுறைப்படுத்துவதற்கு நிதிநிறுவனங்கள் முக்கியமான பங்காற்றுகின்றன. இந்தியாவில் முதன்மையான நான்கு சிறப்பு வகை வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் உள்ளன. அவையாவன - இந்திய ஏற்றுமதிஇறக்குமதி வங்கி (EXIM Bank), வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD), தேசிய வீட்டுவசதி வங்கி (NHB), இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI).

### இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank)

இந்தியாவில் உள்ள சிறப்புவகை நிதி நிறுவனங்களில் உயரிய தரத்தில் இருப்பது இந்த வங்கி. இந்திய ஏற்றுமதிஇறக்குமதி சட்டம், 1981இன் கீழ் அமைக்கப்பட்டது இது. ஏற்றுமதிக் கடனை வருவித்துக்கொடுக்கவும், உலகளாவிய ஏற்றுமதிக்கடன் நிறுவனங்களைப் (ECAs) பிரதிபலிப்பதாகவும் இந்த வங்கி உள்ளது. EXIM வங்கி அதன் செயல்பாடுகளை 1982இல் தொடங்கியது. தொழிலகங்களுக்கும், சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கும் வளர்ச்சியை உருவாக்கித்தரும் கருவியாக இது சேவை புரிகிறது. இது வழங்கிவரும் சேவைகளில் தொழில்நுட்ப இறக்குமதி, ஏற்றுமதிபொருள்களின் மேம்பாடு, ஏற்றுமதிச்சந்தை, சரக்குகளை ஏற்றுவது, இறக்குவது, வெளிநாட்டு மூலதனம் ஆகியவை அடங்கும். ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்களுக்கு நிதி உதவி வழங்குவதுடன் பல்வேறு நிதி நிறுவனங்களின் இணைப்பாகவும் செயல்பட்டு இந்திய நிதிச்சந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்கிறது. நவீனமயமாக்கல், உபகரணங்கள் வாங்குதல், கையகப்படுத்துதல் ஆகியவற்றிற்கு குறிப்பிட்ட காலக்கெடுவுடன் கூடிய கடன்கள் தரப்படுகின்றன. ஏற்றுமதியாளர்களுக்கு பண்டகசாலை, ஏற்றுமதிக்கடன் வசதிகளை இந்த வங்கி வழங்குகிறது. வங்கியின் மூலதன நிதித்திட்டத்தில் நீண்டகால மூலதனங்கள், பணப்புழக்க நிதிஉதவி ஆகியவையும் அடங்கும். நிதிஉதவியில்லா மூலதனத்திட்டத்தில் கடன்சான்று எல்லைவரம்புக்கடிதம், உத்திரவாத எல்லை வரம்பு ஆகியவை அடங்கும். திரைப்படத்தயாரிப்பில் திரைத்துறைக்கு இந்த வங்கி பணப்புழக்கக்கடனை ஏற்பாடு செய்துதருகிறது. வெளிநாட்டுச் சந்தைகளில் திரையிட்டுக்காட்டுவதற்கும் நிதி வழங்குகிறது. இந்த வங்கி மனிதவள ஆற்றல் நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, அகத்தணிக்கை ஆகியவற்றிற்கு சிறப்பு வகைச் சேவைகளை வழங்குகிறது. இந்திய ஏற்றுமதிஇறக்குமதி வங்கி இந்தியா முழுவதும் அலுவலகங்களை அமைத்துள்ளது. இந்த வங்கியின் தலைமையகம் மும்பையில் உள்ளது.

### வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD)

ஊரகப்பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு நிறுவனக்கடன்கள் அவசியம் என்ற சிந்தனை தொடக்ககாலத் திட்டமிடலின் போதிருந்தே இந்திய அரசாங்கத்திற்கு இருந்தது. ஆகவே, இந்திய அரசின் வலியுறுத்தலின் பேரில் வேளாண்மைக்கும், ஊரகவளர்ச்சிக்கும் தேவைப்படும் நிறுவனக்கடன்கள் (CRAFICARD) பற்றி ஆராய்வதற்கென இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஒரு குழுவை அமைத்தது. இந்தக்குழு மார்ச்30, 1979 அன்று அமைக்கப்பட்டது. இந்தக்குழுவின் அறிக்கை ஊரக வளர்ச்சி யுடன் தொடர்புடைய பிரச்சினைகளின் மீது கவனச்சிதறல் இன்றி கவனம் செலுத்துவதற்கு புதிய அமைப்பு ஒன்று தேவை என குறிப்பிட்டிருந்தது. தனி வகைப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றை அமைப்பது இந்தக்குழுவின் பரிந்துரையாக இருந்தது. அதன்படி, சட்டப்பிரிவு 61இன் மூலம் 1981 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) ஏற்றுக்கொள்ளப்பட்டது. நபார்டு வங்கி 1982 ஜூலை மாதம் முதல் செயல்படத்தொடங்கியது. இந்திய ரிசர்வ் வங்கியின் வேளாண் கடன் செயல்பாடுகளையும், முன்பு

இருந்த வேளாண்மை மறுநிதி, வளர்ச்சிக்கழகத்தின் (Agricultural Refinance and Development Corporation - ARDC) மறுநிதிச் செயல்பாடுகளையும் நபார்டு வங்கி ஏற்றுக்கொண்டது. ரூ.100கோடி முதலீட்டுடன் தொடங்கப்பட்ட NABARD வங்கி மார்ச் 31, 2016இல் ரூ.5000 கோடி மூலதனம் உடையதாக மாறியது. இந்திய அரசு ரூ.4980கோடி மதிப்புள்ள 99.60% பங்கு முதலீட்டினையும், இந்திய ரிசர்வ் வங்கி ரூ.20கோடி மதிப்புள்ள 0.40% பங்கு முதலீட்டினையும் நபார்டு வங்கியில் கொண்டுள்ளன.

**தேசிய வீட்டுவசதி வங்கி (NationalHousingBank)**

1988ஆம் ஆண்டு தேசிய வீட்டு வசதி வங்கிச்சட்டம், 1987இன் வழிமுறைகளின்படி இந்த வங்கி உருவாக்கப்பட்டது. நிதிஉதவியையும், தேவைப்படும் மற்ற உதவிகளையும் வழங்கி வீட்டுவசதி நிதிநிறுவனங்களின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கத்தில் இந்த வங்கி உருவாக்கப்பட்டது. ஒட்டுமொத்த உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்குவதோடு, வீட்டுவசதி நிதி நிறுவனங்களின் மறுநிதியாக்கத்திற்கும் நிதி வழங்குவது இதன் பணி. மேம்பாடு மற்றும் அபாய நேர்வு மேலாண்மை, திட்டங்களுக்கு நிதி, மறுநிதிய நடவடிக்கைகள், வள ஆதாரங்களைத்திரட்டுவது நிர்வகிப்பது போன்றவற்றிற்கு சிறப்புப்பிரிவுகளை இந்த வங்கி அமைத்துள்ளது. தேசிய வீட்டு வசதி வங்கி இந்திய ரிசர்வ் வங்கிக்கு முற்றிலும் சொந்தமானது. இந்த வங்கிக்குத்தேவைப்படும் மூலதனம் அனைத்தையும் ரிசர்வ் வங்கியே வழங்குகிறது. பொதுவான மேற்பார்வை, இயக்கம், நிர்வாகம், செயல்பாடுகள் போன்றவை இயக்குநர் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

**இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (SIDBI).**

இந்த வங்கி ஏப்ரல் 2, 1990 அன்று நாடாளுமன்ற சட்டத்தின்படி அமைக்கப்பட்டது. குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும், அவைகளுக்கு நிதி உதவி வழங்கவும் இவை போன்ற பிற நிறுவனங்களை ஒருங்கிணைக்கவும் என இந்த வங்கி உருவானது. SIDBIயின் வணிக எல்லை வரம்பில் உற்பத்தி, வேலைவாய்ப்பு, ஏற்றுமதி ஆகியவற்றில் இந்தியப்பொருளாதாரத்திற்குக் கணிசமான அளவில் பங்களிப்பு செய்துவரும் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. MSME பிரிவு இந்தியப்பொருளாதாரத்தின் முக்கியமான தூண் ஆகும். 5.1கோடி என்ற மிகப்பெரிய எண்ணிக்கை கொண்ட தொழில் அமைப்புகளின் மூலமாக 11.7கோடி வேலைவாய்ப்புப் பெருக்கத்தைச் செய்து இந்தியப்பொருளாதாரத்திண் வளர்ச்சிக்கு MSME துணை நிற்கிறது. 6000 வகை பொருள்களை உற்பத்தி செய்யும் குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் உற்பத்தியில் 45 விழுக்காடும், ஏற்றுமதி மதிப்பில் 40 விழுக்காடும், ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 37 விழுக்காடும் பங்களிப்பு செய்கின்றன.

MSME களுக்கு உள்ள நிதி மற்றும் நிதிசாராத இடைவெளிகளை நிரப்புவதற்கு SIDBI உதவி செய்கின்றது. SIDBI வங்கி மறுநிதியம், நிதி நிறுவனங்களுக்கு நிதி அளித்தல் ஆகியவை மூலமாக MSME களுக்கு மறைமுகமாக நிதிஉதவி செய்கிறது மூலதன அபாய நேர்வுகள், நீடித்துவரும் நிதி, ஏற்றுக்கொள்ளத்தக்க நிதி, சேவைத்துறை நிதி போன்ற முக்கியமான பகுதிகளுக்கு நேரடி நிதி உதவியை SIDBI செய்கிறது. குறு, சிறு, நடுத்தரத்தொழில் பிரிவை மேம்படுத்தி வளர்ப்பதற்காக இந்த வங்கி கடனுடன் கூடிய பிறவகை அணுகுமுறைகளையும் மேற்கொள்கிறது. கடன் வழங்குவதோடு நிறுவன மேம்பாடு, திறன் வளர்ப்பு, சந்தைப்படுத்துதலில் உதவிகள், தொழிலகங்களைக் குழுமமாக்கி மேம்படுத்துதல், தொழில்நுட்ப நவீனத்துவம் போன்றவற்றிலும் இந்த வங்கி உதவிகளைச்செய்கிறது. இத்தகைய உதவிகளால் MSME பிரிவில் 2.3 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர். 1.5 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகி உள்ளன. 80ஆயிரத்திற்கும் அதிகமான தொழில் அமைப்புகளை பெரும்பாலும் கிராமப்புறங்களில் நிறுவுவதற்கு இத்தகைய முயற்சிகள் துணை புரிந்துள்ளன.

•

அடுத்த மாத இதழில்

**"பொதுமக்கள் குறை தீர்த்தல்"**

பற்றிய கட்டுரைகள் இடம் பெறும்.